# "ஜெயபதி"

(ஓர் இனிய சினிமா சித்திரம்)

★

ஆங்கரை P. S. சந்தானம் எழுதியது

★

நவரஸப் பிரசுராலயம்.

மெயின் ரோடு, லால்குடி.

நவரஸ வெளியீடு No. 1

(C[illegible] Right)

விலை ரு. 1—8—0

# ஜெயபக்தி

(ஓர் இனிய சினிமா சித்திரம்)

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

★



ஸ்ரீமான்

பி. எஸ். சந்தானம் எழுதியது.

★

நவரஸப் பிரசுராலயம்

: லால்குடி :

காபிரைட்] 1945 [விலை ரூ. 1½

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 218
நன்கொடை எண்: 218

# மதிப்புரை.

"ஜெயபதி" என்ற இச்சினிமா சித்திரம் முன் நமது "மூவி ஹெரால்டு" சினிமா பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்து வாசகர்களை மகிழ்வித்ததை நேயர்கள் அறிவார்கள். இதையே புஸ்தகமாக வெளியிட்டுள்ள 'நவரஸப் பிரசுராலய'த்தாரின் முயற்சியை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதை எழுதிய ஸ்ரீ சந்தானம் தன் கற்பனா சக்தியை நன்கு பயன் படுத்தியிருப்பதை இதை வாசிக்கும் நண்பர்கள் நன்குணர்வார்கள். பல அபூர்வ சம்பவங்களைக்கொண்டு பாமரர்களும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய நடையில் விருவிருப்பான கதைப்போக்கில் அமைந்துள்ள இச்சினிமா சித்திரத்தை வாசகர்கள் நன்கு ரஸிப்பார்கள் என்று நம்புகிறேன்.

1—7—42,
கோயம்புத்தூர்.

எஸ். ஜி. அய்யர், B.A., B.L.
(ஆசிரியர் 'மூவி ஹெரால்டு').

# முகவுரை

சினிமா சித்திரமாக சித்தரிக்கப்பட்டுள்ள 'ஜெயபதி' என்ற இந்நவீனம் 1938-39ம் வருஷ 'மூவி ஹெரால்டு' சினிமா பத்திரிகையில் தொடர் கதையாக வெளிவந்ததாகும். இதை வாசித்து இன்புற்ற பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது இது நவரஸ வெளியீடாக வெளிவந்துள்ளது.

ஜெயா என்ற சிறுமி இளைஞன் சபாபதியிடம் காட்டும் கருணையும், அதனால் அவர்கள் படும் கஷ்டங்களும், அதிலிருந்து தப்ப சபாபதி செய்யும் தந்திர சாமர்த்தியங்களும் யாவர் மனதையும் கரையச் செய்யும். ஜெயாவின் இளைய தாயார் மீனாட்சியம்மாளும் அவளது தமயன் துரைராஜய்யரும் செய்யும் வஞ்சகச் சூழ்ச்சிகளும், அதற்குடந்தையாக இருக்கும் பிச்சுமணி, தாண்டவராயன் இவர்களின் அட்டஹாஸச் செயல்களும் படிக்கப் படிக்கப் பதைக்கச் செய்யும். ஜெயாவைப் பறி கொடுத்த சிவராமய்யர் கொள்ளைக்கார கம்பளித்தேவனிடம் படும் அவஸ்தைகளும், பிச்சுமணியிடம் கடன்பட்ட ராமநாதனின் பரிதாப நிலைமையும், காமதூரன் துரைராஜய்யரிடமிருந்து கற்பரசி சுந்தரி காப்பாற்றப்படும் விசித்திரமும் யாவருக்கும் ஓர் நூதன கவர்ச்சியையளிக்கும். முடிவில் கம்பளித்தேவனின் ஆச்சர்ய மர்மம் வெளிப்பட்டு துஷ்டர்கள் தண்டனையையடைந்து பிரிந்தவர்கள் ஒன்றுகூடும் காட்சி மிகுந்த மகிழ்ச்சியையும் வியப்பையுமூட்டும்.

மேலேகண்ட அரிய சம்பவங்களைக்கொண்ட இச்சினிமா சித்திரம் படப்பிடிப்பிற்காக எழுதப்பட்டதால் இதிலுள்ள சம்பாஷணைகள் சாதாரண கிராமிய நடையில் அமைந்துள்ளன. அதனால் இதில் ஏதேனும் இலக்கணப் பிழைகள் எழுத்துப்பிழைகள் இருந்தால் நேயர்கள் அதை அதிகமாகப் பாராட்டாது புஸ்தகத்தில் ஏதேனும் குணமிருந்தால் அதை மாத்திரம் கிரகிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

தமது பல வேலைகளுக்கிடையே சிரமத்தைப் பாராட்டாது இப்புஸ்தகத்திற்கு மதிப்புரை எழுதி உதவிய மகா-௱-௱-ஸ்ரீ எஸ். ஜி. அய்யர் B.A., B.L அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

ஆங்கரை,
1—8—42.

பி. எஸ். சந்தானம்.

## முக்ய கதா பாத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| சிவராமய்யர் | ... | சிறுமருதூர் மிராசுதார் (வயது 40) |
| ஜெயா | ... | கதாநாயகி. சிவராமய்யரின் [மூத்தாள் பெண் (வயது 10) |
| மீனாக்ஷி | ... | சிவராமய்யரின் இளைய சம்சாரம் (வயது 25) |
| துரைராஜய்யர் | ... | மீனாக்ஷியின் தமயன். முருங்கப்பேட்டை [கிராம முன்சீப் (வயது 30) |
| லட்சுமி | ... | துரைராஜய்யரின் சம்சாரம். |
| ராமநாதன் | ... | முருங்கப்பேட்டை, எலிமெண்டரி [ஸ்கூல் உபாத்தியாயர் (வயது 25) |
| சுந்தரி | ... | ராமநாதன் மனைவி (வயது 20) |
| சபாபதி | ... | சுந்தரியின் தம்பி, கதாநாயகன் (வயது 17) |
| வெங்கட்டராமய்யர் | ... | மாங்குடி கிராமத்தில் ஓர் மிராசுதார். சிவராமய்யரின் மூத்த சம்சாரத்தின் தகப்பனார். |
| பொன்னுசாமி அய்யர் | ... | தஞ்சை போலீஸ் இன்ஸ்பெக்டர், வெங்கட்டராமய்யரின் பிள்ளை. ஜெயாவின் சொந்த மாமா (வயது 30). |
| பிச்சுமணி | ... | ஓர் போக்கிரி—ராமநாதனுக்குப் பணம் கடன் கொடுத்தவன். |
| கம்பளித்தேவன் | ... | ஓர் கொள்ளைக்காரன். |
| வீரன், சூரன் | ... | கம்பளித்தேவனின் ஆட்கள். |
| ரமணி | ... | ஓர் தாசி—கம்பளித்தேவனுக்கு வேண்டியவள். |
| கந்தன் | ... | தாசி ரமணியின் வேலையாள். |
| குப்பன் | ... | சிவராமய்யரின் வேலையாள். |
| தாண்டவராயன் | ... | முருங்கப்பேட்டைத் தலையாரி. |

கதை நிகழுமிடம் :—தஞ்சாவூர் ஜில்லாவில் சிறு மருதூர், முருங்கப்பேட்டை, மாங்குடி முதலிய கிராமங்களிலும், தஞ்சை டவுனிலும்.

---

*பெயர்கள் யாவும் கற்பனைகளே.

# ஜெயபதி.

## அங்கம் 1—காட்சி 1

காலம் :—மாலை ஐந்து மணி.

[திருமருதூர் கிராமத்தில் சிவராமய்யர் வீட்டு வாசலில் ஜெயாவும், அவளது தோழிகளும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். பாண்டி, கண்ணாமூச்சி, கண்கட்டு விளையாட்டு, நொண்டி இவைகள் விளையாடின பிறகு ஒரு பெண் "போறாண்டியம்மா! காலெல்லாம் வலிக்கிறது. இனிமே நாமெல்லாம் உக்காந்துண்டு ஏதாவது கதை பேசுவோம்" என்கிறாள். மற்ற பெண்களும் அதை ஆமோதித்து வீட்டு வாசற்குறட்டில் வரிசையாக அமர்கிறார்கள். எல்லோருக்கும் நடுவில் ஜெயா உட்கார்ந்து கொள்கிறாள்]

## காட்சி 2

[தன் வயல்களை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு சிவராம ஐயர் தெருக்கோடியில் வந்துகொண்டிருக்கிறார். அவரது கையில் வளைந்த ஒரு கொண்டைத் தடியும், காலில் பாதரட்சையும் இருக்கிறது. அவருக்குப் பின்னால் சிறிது தூரத்தில் பண்ணை வேலையாள் குப்பன் ஒரு கையில் இலைக்கட்டும், மற்றொரு கையில் ஒரு சீப்பு வாழைக்காயும் எடுத்துக் கொண்டு வருகிறான்.]

சிவராமய்யர் :—(நடந்து கொண்டே) டேய், குப்பா!

குப்பன் :—என்னாங்க? (கிட்ட நெருங்குகிறான்.)

சிவ :—நாளைக்கு முருங்கப் பேட்டைக்கு போகணும்டா.

குப்:—அதுக்கென்ன. போறதுங்க.

சிவ:—ஆமாம். வண்டியோட்ட நீ வரயா? அல்லது உம்மவனை வரச் சொல்றயா?

குப்:—நானே வரேனுங்க!

சிவ:—சரி, அப்ப நீ என்ன செய்யணும் தெரியுமா? நாளைக்கு கோழி கூப்பிடற கையோட எழுந்திருந்து சேரிக்குப் போகணும். பள்ளன் நாகன்கிட்டே ஆறு ஏர் உழவுக்குத் தகவல் பண்ணணும். நாளைய நாற்றங்கால் நடவை உம்மவனை விட்டு கவனிக்கச் சொல்லு. நீயும் சோறு தின்னூட்டு காலம்பற ஏழு மணிக்குள்ளே வந்துடு!

குப்:—அப்படியே ஆவட்டுங்க!

## காட்சி 1a

விசாலம் என்ற பெண்:—ஏண்டி, ஜெயா! நாளைக்கு ஊருக்குப் போப்பறயாமே? எங்கிட்ட சொல்லவேயில்லையே!

ஜெயா:—உனக்கு யாருடி சொன்னு?

விசாலம்:—செல்லி தாண்டிம்மா?

கமலம்:—எந்த ஊருக்கடி?

சாவித்திரி:—நாளைக்கு எப்ப போப்போறேடி?

மங்களம்:—என்னத்துக்குடி போகப் போறே?

ஜே:—ஏண்டி, எல்லாருமா இப்படி கேட்டா நான் யாருக்குன்னுதான் சொல்வேன்?

விசா:—செத்தே எல்லாரும் பேசாமே இருங்கோ. ஜெயா! நீ சொல்லடி.

ஜே:—எங்க துரைராஜ மாமா இருக்கா பாரு. அவா ராமேஸ்வரம் போயிட்டு வந்தா. அதுக்காக நாளேன்னிக்கு சமாராதனை பண்ணப் போரு. அதுக்கு நாங்கள்ளாம் நாளைக்கு முருங்கப் பேட்டைக்குப் போகப் போருேம்.

மங்:—எந்த துரைராஜ மாமாடி?

ஜே:—அதாண்டி! எங்க சித்தம்மையோட அண்ணு. முருங்கப் பேட்டையிலே முன்சீபா இருக்கா பாரு! அவாதான்.

மங்:—ஓகோ! அந்த மாமாவா? மூஞ்சியெல்லாம் அம்மை வடுவா கருப்பா இருப்பாளே! அந்த மாமாவை நேக்குத் தெரியுமே!

ஜே:—சூ! பலக்கச் சொல்லாதே. எங்க சித்தம்மை கேட்டா கோச்சுப்பா.

கம:—ஏண்டி, ஜெயா! திருப்பதி, பழனி போயிட்டு வந்தா சமாராதனை பண்ணுவான்னு எங்க பாட்டி சொல்லி யிருக்கா. நீயானு ராமேஸ்வரம் போயிட்டு வந்தத்துக்கு பண்ருன்னு சொல்றயே!

ஜே:—இதுக்கும் பண்ணுவாளாண்டி!

சாவி:—அதிருக்கட்டும் ஜெயா! நோக்கு ராமேஸ்வரம் இருக்கிற இடந் தெரியுமோ?

ஜே:—தெரியுமே! இதைப்பத்தி எனக்கு சொல்லித் தந்திருக்கா. ராமேஸ்வரம் என்கிற ஊர் தெக்கே யிருக்காம். அங்கே ராமநாதர் கோவில் உண்டாம். சமுத்திரங்கூட உண்டாம். சமுத்திரத்திலே ஸ்நானம் பண்ணி சாமியைப் பாத்தூட்டு வந்தா பாவமெல்லாம்

போகும். புள்ளையில்லாதவாளுக்கு புள்ளைகூட பொறக்குமாண்டி.

கம:—அப்பன்னு அந்த மாமா தனக்கு புள்ளையில்லேன்னு தானே போயிட்டு வந்தா?

ஜெ:—ஆமாம். அந்த மாமாவுக்கு ஒரு குழந்தை கூட கிடையாது.

துடுக்குக்கார செல்லி:—ஜெயா! அப்படின்னு உங்க சித்தம்மை ஏன் ராமேஸ்வரம் போகல்லே?

ஜெ:—(கோபமடைந்து) செல்லி! எங்க சித்தம்மையைப் பத்தி எங்கிட்ட பேசாதேன்னு எத்தனை தரம் சொல்றது? இனிமே இந்த மாதிரி பேசினு நான் உன்னோட 'டூ' விட்டுடுவேன்.

இச்சமயத்தில் விசா:—அதோ பார்! ஜெயாவோட அப்பா வரு. நாழியாச்சு. நாமெல்லாம் ஆத்துக்குப் போகலாம்.

சிறுமிகளெல்லாம் எழுந்திருந்து "ஜெயாவுக்கென்னடியம்மா! அவ நாளைக்கு ஜில்லுனு வில் வண்டியிலே ஊருக்குப் போவ" என்று சொல்லிக் கொண்டே தத்தம் வீடு செல்கிறார்கள். ஜெயாவும் உள்ளே போகிறாள்.

## காட்சி 3

இடம்:—சிவராமய்யர் வீடு.

காலம்:—மாலை 6-மணி.

[குப்பன் பின் தொடர சிவராமய்யர் வீட்டிற்குள் போகிறார். தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சியின் மேல் அமர்கிறார். குப்பன் வாழைக்காயையும், இலையையும் கீழே வைக்கிறான் ]

குப் :— நான் போயிட்டு வரட்டுங்களா ?

சிவ :—சரி, போயிட்டு வா. நான் சொன்னது ஞாபக மிருக்குமா ?

குப் :—இருக்குங்க ! (போகிருன்.)

சிவ :—(மறுபடியும்) குப்பா ! செத்தே இங்கே வா !

குப் :—(திரும்பி வருகிருன்.) என்னத்துக்குங்க ?

சிவ :—கொல்லேயிலே போயி மாட்டுக்கார பய தொட்டிக் கெல்லாம் தண்ணி ரொப்பியிருக்காஞ, தொழுவத்திலே வெக்கல் அடைச்சுருக்காஞனு பாத்துட்டுப் போ !

குப் :—சரிங்க ! (கொல்லேப் பக்கம் போகிருன்.)

சிவ :—அடியே, மீஞ ! இங்கேவா.

"என்னத்துக்கு ?" என்று கேட்டுக்கொண்டே, சிவ ராமய்யரின் இளேய மனேவி மீஞட்சியம்மாள் அடுப்பில் துளாவிக்கொண்டிருந்த குழம்புக் கரண்டியோடு வெளியே வந்து காக்ஷியளிக்கிருள்.

சிவ :—இந்த வாழைக்காயையும், இலேயையும் சமையல் உள்ளே கொண்டு போய் வை.

மீஞ :—என்ஞலே முடியாது. நான் அடுப்புக்காரியமா யிருக்கேன். ஏன், உங்க அருமைப் பெண் எங்கே ? அவளே எடுத்துவைக்கச் சொல்ற தானே !

சிவ :—ஏண்டி, அவ சிறிசு. அவளேப்போய் காரியம் ஏவற தாடி.

மீஞ :—ஏவிஞ என்னவோ ? அவ சதை குறைஞ்சு போயி டுமா ? இத்தனே நாழி வாசல்லே லொங்கு லொங்குன்னு ஓடி விளேயாடத் தெரியலேயா ?

சிவ :—(கோபத்துடன்) இந்த பார், மீனு! வீணாக ஜெயாவை வம்புக்கிழுக்காதே. உன்னால் முடியுமானால் இதைச் செய். இல்லாவிட்டால் உங்கார்யத்தைப் பார்க்கப் போ.

"ஆமாம். எல்லா காரியத்தையும் செய்ய நான்தான் புணைப்பட்டேனுக்கும்" என்று மீனு முணு முணுத்துக் கொண்டே, கையிலிருந்த கரண்டியை கோபத்தால் கீழே எறிந்துவிட்டு, கையை அலம்பிக்கொண்டு, இலைக்கட்டை யும், வாழைக் காயையும் உள்ளே கொண்டுபோய் வைக் கிறாள்.

சிவ:—அடியே! அப்படியே ஒரு சொம்புலே ஜலமும், வீபூதி பஞ்ச பாத்திரமும் கொண்டு வா.

இதையெல்லாம் காமிரா உள் என்று சொல்லப்படும் ரேழி உள்ளிலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறாள் ஜெயா.

மீனாட்சியம்மாள் ஜலம் கொண்டு வந்து வைக்கவே அதனால் கை, கால்களை அலம்பிக்கொண்டு, சந்தியா கால அனுஷ்டானத்திற்கு அமர்கிறார் சிவராமய்யர்.

ஜெயாவும் லைட்டை ஏற்றி வைத்துக்கொண்டு, எல் லோர் காதிலும் விழும்படி தன் பாடங்களை வாசிக்கிறாள்.

## அங்கம் 2—காட்சி 1

காலம் :—மாலை 6 மணி. அஸ்தமிக்கும் சமயம்.

இடம் :—முருங்கப்பேட்டையில் ஒரு தெரு.

[தெருவின் முனையிலுள்ள வீட்டின் வாசற் குறட்டில் சுந்தரி நின்றுகொண்டிருக்கிறாள். தெருவில் போவோரையும், வருவோ ரையும் கவனித்துக்கொண்டு, தன் நாதனின் வருகையை ஆவ

லுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருள். தெருவோடு செல்லும் கிராம முன்சிப் துரைராஜய்யர் சுந்தரியின் அழகைக் கண்டு வியந்து புன்முறுவல் பூக்கிருர். இதைக்கண்ட சுந்தரி வெறுப் புடன் முகத்தை சுளித்துக்கொண்டு விர்ரென்று உள்ளே சென்று விடுகிருள்.]

துரை :—எய்! தாண்டவராயா! அந்தக்குட்டியைப் பார்த் தாயா? எவ்வளவு ஷோக்கா யிருக்கா?

(முன்சீபுக்குப் பின்னல் வந்துகொண்டிருந்த தலேயாரி.)

தாண்டவராயன் :—ஆமாங்க. ரொம்ப அளவாத்தானுங்க இருக்கா. இந்த மாதிரி குட்டியை நான் எங்கும் பார்த்ததில்லீங்க.

முன் :—ஆமாடா! குட்டியைப் பார்த்தா புது சரக்கா யிருக்கே. இது யாருடா? உனக்குத் தெரியுமா?

தாண் :—தெரியாதுங்க. யாரோ புதசா வந்திருக்கவங்க போல் தான் இருக்கு. நான் வாணு விசாரிச்சு சொல் றேனுங்க,

முன் :—ஆமாம். இந்தக் காரியம் உன்னுலே தான் ஆக ணும். தெரிஞ்சுக்கோ!

இப்படி பேசிக்கொண்டே துரைராஜய்யர் தலேயாரி யோடுகூட தெருவின் நடுவிலுள்ள தன் மச்சு வீட்டுக் குப் போகிருர்.

## காட்சி 2.

இடம் :—சுந்தரியின் வீடு.

[உள்ளே சென்ற சுந்தரி கூடத்தில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து, அதை மெதுவாக ஆட்டிக்கொண்டே அம்பாள் பேரில் பக்தி ரசம் ததும்பும் ஓர் பாட்டை குயிலினு

மினிய தன் குரலால் உருக்கமாக பாடுகிறுள். இச்சமயத்தில் பாட்டின் சுவையை அனுபவித்த வண்ணம், சந்தடி செய்யாமல் மெதுவாக வந்து சுந்தரிக்குப் பின்னுல் நிற்கிறுன் அவளது கணவன் ராமநாதன்.]

ராமநாதன் :—(சுந்தரி பாடி முடிந்ததும்) பேஷ்! பேஷ்! சுந்தரி. இன்று பாட்டு ரொம்பத் தரம். இன்றைய தினம்போல் கல்லும் கரையும் வண்ணம் இவ்வளவு உருக்கமாக நீ என்றும் பாடியதில்லையே.

இதைக் கேட்ட சுந்தரி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து தன் நாதனென அறிந்து புன்னகை பூத்த முகத்துடன் "ஓ! தாங்களா? யாருடாப்பான்னு பார்த்தேன். இப்படித்தான் பூனை போல் ஓசைப் படாமல் பின்னுல் வந்திருந்து பயமுறுத்துவாளோ?" என்று கேட்கிறுள்.

ராம :—(சிரித்துக்கொண்டே) நீயா பயப்படுவாய்? நீதான் எட்டுப்பேரை பயப்பட வைப்பாயே!

சுந்தரி :—போதும்! போதும்! உங்கள் பரிகாசம். சட்டையை கழற்றிவிட்டு கைகால்களை அலம்பிக்கொண்டு வாருங்கள். ஆகாரம் பண்ணலாம்.

ராமநாதன் கை கால்களை அலம்பிக்கொண்டு வருகிறுன். சுந்தரி இலையைப்போட்டு அதில் ஆகாரம் கொண்டு வந்து வைக்கிறுள். ராமநாதன் சாப்பிடுகிறுன்.

சுந்தரி :—(பக்கத்திலிருந்த ஒரு தூணைப் பிடித்துக் கொண்டு) ஆமாம். இன்று ஏன் உங்களுக்கு இவ்வளவு நாழி? இப்படி எவ்வளவு நாள்தான் நான் ஒண்டியாக ஒரு துணையுமில்லாமல் இந்த வீட்டில் இருப்பது?

ராம :—நாளைக்குத்தான் உன் தம்பி சபாபதி வரப்போகிறு னே! இனிமேல் நீயேன் தனியாக இருக்கவேண்டும்? இன்று வழியில் பிச்சுமணியை சந்தித்தேன். சிறிது நேரம் அவனேடு பேசும்படி நேரிட்டு விட்டது. அதனுல்தான் இன்று நேரமாய்விட்டது.

சுந்தரி :—எந்த பிச்சுமணி? நம்ப தஞ்சாவூர்லே இருந்த போது அடிக்கடி உங்களைப் பார்க்க வருவாரே அவரா?

ராம :—ஆம். அவன்தான்.

சுந்தரி :—அவர் இந்த ஊருக்கு எங்கே வந்தார்.

ராம :—எங்கே வருவான்? நான் அவனுக்கு 500 ரூபாய் தரவேண்டு மல்லவா! அதை கேட்கத்தான்.

சுந்தரி:—அடபாவமே! இப்ப ஏது நம்மிடம் பணம்?

ராம:—அதான் நானும் "இப்ப என்னை ஒன்றும் பணம் கேட்டு உபத்திரவம் செய்யாதே? இன்னும் நான்கு மாத காலம் பொறுத்தால் எங்கேயாவது பணத்திற்கு ஏற்பாடு செய்து கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னேன். ஆனுல் அவனே இன்னும் மூன்று தினத்திற்குள் பணத்தைக் கொடுத்துவிட வேண்டு மென்று சொல்லிப் போயிருக்கிறுன்.

சுந்தரி:—அடடா! இப்பொழுது பணத்திற்கு நாம் என்ன செய்வது?

ராம:—அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறுய்? எங்கே யாவது தான் முயற்சி செய்து பார்க்கவேண்டும். சரி, கொஞ்சம் தீர்த்தம் கொடு!

சுந்தரி தீர்த்தம் கொண்டு வந்து கொடுக்கிறுள். ராமநாதன் அதைக் குடித்து விட்டு எழுந்திருந்து கையைக் கழுவிக் கொண்டு ஊஞ்சலில் வந்து அமர்கிறுன்.

## அங்கம் 3—காட்சி 1.

காலம் :—காலை மணி 8.

இடம் :—முருங்கப் பேட்டை ஆற்றங்கரை.

[ஒரு பக்கத்தில் வைதீகர்களும், லௌகீகர்களும் பிராத ஸ்நானம் செய்து தங்கள் ஜபதபங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். மற்றொரு பக்கத்தில் பெண்கள் சள சள வென்று வம்பளந்து கொண்டு தங்கள் துணிகளை தோய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.]

**கல்யாணி** :—லட்சுமிக்கு இப்ப கண் கால் தெரியுமா ?

**சேஷி** :—அப்படி என்ன விசேஷம் ?

**கல்** :—அவாத்துலே சமாராதனையோல்யோ ! அவளுக்கு காரியம் ஒய்ச்சல் ஒழிச்சல் கிடையாது.

**சே** :—ஏண்டி, லட்சுமி! உங்காத்துலே என்னிக்கி சமாராதனை ? நேக்குத் தெரியலையே இது.

**லட்சுமி** :— நாளைக்குத்தான், அம்மாமி !

**கல்** :—உங்க நாத்தனார் வராளா ?

**லட்** :—பருப்பில்லாமையா கல்யாணம் ! அவ இல்லாமே எங்காத்துலே எந்தக் காரியம் நடக்கிறது. எனக்கு உபத்திரவம் கொடுக்க இன்னிக்கி வரா. அநேகமா சாப்பாட்டுக்கே வந்துடுவ. நான் போய் சீக்கிரம் சமைக்கணும். இல்லாட்டா எங்க ஆத்திலே என்னைக் கண்டபடி திட்டுவா.

**வம்புக்கார சுப்பி** :—பாவம் ! லட்சுமிக்கு ஒரு விதத்திலும் சுகமில்லே. நானும் அவளோட ரண்டு வருஷமா பழகறேன். அவளைப்போல குணம் படைச்ச நல்ல பொண்ணு இந்த ஊரிலேயே ஒத்தருமில்லே. எவ்வளவு

தான் பதவிசா, அடக்கவொடுக்கமா காரியம் செஞ்சாலும் அவ ஆத்துக்காரரும் நாத்தனரும் படுத்தற பாடு உண்டோல்லியோ, அதைச் சொல்லி முடியாது.

சே:—போதும், போதும், உன் ஸ்தோத்தரத்தை நிறுத்து. ஸ்தோத்தரம் பண்றவா எல்லாருமே பொய் சொல்றவா தான்.

சுப்:—ஆமாடியம்மா! நான் பொய் சொல்றவதான். நீயோ? வாயாடியாக்கும்.

சே:—யாருடி வாயாடி! பாத்துப்பேசு, வாய்க்காங்கறேன்னு பாக்கிறேன். இல்லாட்டா வாயாடின்னு சொன்ன வாயை இத்தன்றவா புட்டு வச்சுருப்பேன்.

இச்சமயத்தில் சேஷியையும், சுப்பியையும் சண்டை பிடிக்க விட்டுவிட்டு, லட்சிமி குடத்தில் தண்ணீரெடுத்துக் கொண்டு வீடு செல்கிருள்.

சுப்:—என்னடி வாய் மிஞ்சறே? நீ சொன்னதிஞலே தானடி நான் சொன்னேன்.

கல்:—போறுமே! மானம் போறது. புருஷா யிருக்கிற இடத்திலே, வாய்க்காங்கறையிலே இப்படியா சண்டை பிடிச்சுக்கிறது.

சே:— சர்த்தாண்டி! நீ ரொம்ப மான வெட்கம் பார்க்கிறவதான். நாங்கென்ன இப்ப சண்டை பிடிச்சுண்டமா? நான் ரெண்டு வார்த்தை சொன்னேன். அதுக்கு அவ திருப்பி ரெண்டு சொன்ஞ, இவ்வளவு தானே.

சுப்:—அடியே சேஷி! கல்யாணி! நாழியாச்சுடி. லட்சிமி கூட ஆத்துக்குப் போயிட்டா. நாமும் போவோண்டி.

(மூவரும் போகிருர்கள்.)

## காக்ஷி 2.

காலம்:—காலை மணி 10.

இடம்:—சிறுமருதூரிலிருந்து முருங்கப்பேட்டை செல்லும் ரோட்.

ரோட்டில் நிழல் தரக்கூடிய மரங்கள் அதிகமில்லை, பர்லாங்குக்கு இரண்டொரு தென்னை மரங்கள் தான் இருக்கின்றன. இந்த ரோட்டில் ஓர் சிறு பையன் சூரிய வெப்பத்தைத் தாள முடியாது அங்கங்கே தென்னை மரத்திலிருந்து கிடைக்கக் கூடிய கொஞ்ச நிழலில் நின்று இளைப்பாறுவதும், பிறகு மற்றொரு தென்னை மரத்தின் நிழலை அடையும் வரையில் ஓடுவதும், நிழலைக் கண்டதும் இளைப்பாறுவதுமாகச் சென்று கொண்டிருக்கிறான்.

அப்பையனுக்கு வயது 17 இருக்கும். அவனது அழகிய சிவந்த முகம் வாடி வதங்கிய ரோஜா இதழை ஒத்திருக்கிறது. அவனது கையில் ஒரு சாக்குப் பை இருக்கிறது. அவன் மிகவும் களைப் படைந்தவன் போல் காணப்படுகிறான்.

பையனுக்குப் பின்னால் இருபது கஜ தூரத்தில் இரண்டு மயிலைக் காளைகள் பூட்டிய ஒரு வில் வண்டி மாடுகளின் கழுத்தில் அணியப்பட்டிருந்த சலங்கை மணிகள் 'ஜில், ஜில்' என ஒலிக்க வந்து கொண்டிருக்கிறது. வண்டிக்குள் சிவராமய்யரும் மீனாக்ஷியம்மாளும், வண்டியில் பின்னால் ஜெயாவும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். குப்பன் வண்டியை ஓட்டி வருகிறான்.

குப்:—(பையனைப் பார்த்து விட்டு) சாமி, அதோ பாருங்க! ஒரு சிறு புள்ளை சூடு தாங்காமே தவிச்சுப் போகுது! பாத்தா பாவமா இருக்குங்க. வாணா நம்ப வண்டியை நிறுத்தி ஏத்திக்கலாமா?

குப்பனின் வார்த்தைகளைக் கேட்டதும் மூவரும் ஒரே சமயத்தில் குப்பன் காட்டின பையனைப் பார்க்கிறார்கள்.

சிவ:—ஆமாண்டா குப்பா! பையனைப் பார்த்தா பரிதாவ மாயிருக்கு. அப்பையன் யாருடா? பாத்தா பிராமணப் பையனாட்டமாஞ இருக்கு.

மீனு:—ஆ மா மா. எந்தப் பையனாயிருந்தா என்ன? வழியிலே போற வம்பெல்லாம் நமக்கெதுக்கு? நாழியோ ஊருப்பட்டதாச்சு; எங்க அண்ணாவும், மன்னியும் இன்னும் வல்லேயே, வல்லேயேன்னு காத் துண்டிருப்பா'' என்று நாதனைப் பார்த்து கூறி விட்டு குப்பனிடம் "ஏண்டா, குப்பா! இந்த கிரகசார மெல்லாம் உனக்கென்னத் துக்கடா? உன் காரியத்தைப் பாத்துண்டு போயேன். சீக்கிரம் வண்டியை ஓட்டு!'' என்று ஆக்ஞையிடுகிறாள்.

குப்பன் மறுபேச்சு பேசாமல் வண்டியை ஓட்டுவதில் கவனத்தை செலுத்துகிறான்.

ஜே:—என்ன சின்னம்மா? உங்களுக்கு கொஞ்சங்கூட இரக்கமில்லையா? அந்தப் பையன் வெய்யில்லே கஷ்டப் படறபோது நாம்ப மாத்திரம் வண்டியிலே போனா பாவமில்லையா? அந்தப் பையனை வண்டியிலே எத்திக் கிறதினாலே நமக்கென்ன நஷ்டம்? இதனாலே நாழி யொன்னும் ஆகாது.

இப்படி இவள் சொல்லிக் கொண்டிருக்கையில் வண்டி பையனைக் கடந்து செல்கிறது. இதுவரையில் உயிரைத் தன் கையில் பிடித்துக் கொண்டு நடந்து வந்த பையன், வண்டி அவனைத் தாண்டினதும் திடீரென்று கீழே சுருண்டு விழுந்து மூர்ச்சையாகிறான். இதைக் கண்ட ஜெயா வண்டியைக் கூட நிறுத்தச் சொல்லாமல் சட்டென்று கீழே குதித்தோடி, பையனை யணுகி

குனிந்து பார்க்கிருள். பையன் கீழே விழுந்ததையும், ஜெயா சொல்லாமல் வண்டியிலிருந்து குதித்ததையும் பார்த்துப் பிரமிப்படைந்த சிவராமய்யர், குப்பனை விட்டு வண்டியை நிறுத்தச் சொல்லி, ஜெயாவும் பையனுமிருக்கு மிடம் சென்று "ஜெயா! இப்படித்தானு சொல்லாமல் வண்டியிலிருந்து குதிப்பது? ஒரு சமயமில்லாவிட்டால் ஒரு சமயம் கால் ஒடிந்து போனுல் என்ன செய்வது? ஏதோ உன்னுடைய நல்ல காலம் தப்பித்தாய். இனி மேல் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாதே!" என்று கூறிய வண்ணம் பையனுக் கென்ன உடம்பென்று அறிய கீழே குனிந்து பார்க்கிருர்.

இதற்குள் குப்பனும் வண்டியை சாலையின் ஓரமாக நிறுத்திவிட்டு இவர்களிருக்குமிடம் வருகிருன். சிவராம ஐயர் தலையை நிமிர்ந்து குப்பனை நோக்கி "குப்பா! பயலுக்கு வயிற்றில் ஆகாரமில்லை. வயிற்றைப் பார்த்தாயா சுண்டிக்கிடக்கிறது?" என்ருர்.

குப்:—ஆமாங்க. இந்தப் புள்ளை வவுத்துக்கில்லாமே ரொம்ப தூரம் நடந்து வந்திருக்குப் போலயிருக்கு. அதான் பசிக் களைப்பாளே சுருண்டு விளுந்திருக்கு.

சிவ:—சரி, தாமதம் செய்யாதே; வெய்யில் உக்ரமா யிருக்கு. நீ இப்பையனை தூக்கிண்டு வண்டிக்கு வா. நாம் போகலாம்.

ஜெயாவும், சிவராமய்யரும் வண்டியிருக்குமிடம் செல்லு கிருர்கள். குப்பன் பையனை தூக்கிக் கொண்டு வந்து வண்டியில் கிடத்துகிருன். சிவராமய்யர் தங்களோடு வெள்ளிக்கூஜாவில் கொண்டு வந்திருந்த காபியில் கொஞ்ச மெடுத்து பையனின் வாயில் ஊற்றுகிருர். பின்பு தன்

மேல் உத்தரியத்தால் பையன் முகத்திற்கு நேராக காற்று வரும்படி விசிறுகிறார். சிறிது நேரத்திற்கெல்லாம் பையன் மூர்ச்சை தெளிந்து சுற்று முற்றும் பார்க்கிறான்; பின் மெதுவாக எழுந்திருந்து உட்காருகிறான். இப்பொழுது ஜெயா மனதிலிருந்த விசாரமெல்லாம் ஒழிந்து அப்பையனை அன்புடன் நோக்குகிறாள்.

சிவ:—அப்பா, இப்பொழுது உன் உடம்பு எப்படியிருக்கு?

பையன்:—உடம்புக் கொன்றுமில்லை, மாமா! காலையிலிருந்து நான் ஆகாரம் சாப்பிடவில்லை. வெய்யிலில் நடந்து வந்ததால் களைத்துப்போய் விழுந்து விட்டேன். பையன் உடம்புக்கு ஒன்றுமில்லை யென்றறிந்ததும் சிவராமய்யர் ஜெயாவோடு வண்டிக்குள் ஏறிக் கொள்கிறார். "டேய் குப்பா! வண்டியை ஓட்டு. இனிமேல் ஒரு நிமிஷமும் தாமதம் செய்யாதே" என்று உத்தரவிடுகிறார். தன் கார்யம் வெற்றி பெற்றதால் சந்தோஷங் கொண்ட குப்பன் காளைமாடுகளை "திராட்"டில் விரட்டுகிறான்.

## காட்சி 2. (a)

சிவராமய்யரின் வண்டி முருங்கப் பேட்டை ரோட்டில் சென்று கொண்டிருக்கிறது.

சிவ:—அப்பா! உன் பேரென்ன? நீ எந்த ஊருக்குப் போறே?

பை:—என் பேர் சபாபதி. நான் முருங்கப்பேட்டைக்குப் போகிறேன்.

மீனு :—முருங்கப் பேட்டைக்கா ! நாங்களும் அங்கேதான் போகிறோம். எம்பொறந்தாம் அந்த ஊர்தான். ஆமா, நீ அந்த ஊருக்கு யாராத்துக்குப் போறே ?

பை :—எங்க அக்காவாத்துக்கு, மாமி !

மீனு :—உங்க அக்காவா ? உங்க அக்கா யாரு ? அவ பேரென்ன ? என்னை அவளுக்குத் தெரியுமோ ?

பை :—எங்க அக்கா பேர் சுந்தரி. உங்களை அவளுக்குத் தெரிஞ்சிருக்காது. ஏன்னு இப்பத்தான் எங்க அக்கா வே அந்த ஊருக்கு குடிபோனு. எங்க அத்திம்பேருக்கு அந்த ஊருலே பள்ளிக்கூடத்து வாத்தியார் வேலை. மின்னே தஞ்சாவூர்லே யிருந்தா. இப்பத்தான் ஒரு மாசமா இந்த ஊருக்கு மாத்தியிருக்கா.

மீனு :—அப்பன்னு உங்க அக்காவுக்கு என்னைத் தெரிஞ் சிருக்காது.

சிவ :—ஏண்டாப்பா ! உங்க அத்திம்பேர் பேரென்ன ?

பை :—ராமநாதன்.

சிவ :—ஆமாம், இப்ப நீ தஞ்சாவூர்லேருந்துதான் வறயோ ?

பை :—ஆமாம், மாமா !

சிவ :—ஏன் ஒரு வண்டியில் வரக்கூடாதோ ?

பை :—வண்டியில் வருவதற்கு என்னிடம் காசில்லை. நானோ ஏழை. தவிரவும் எட்டு மைல் தூரம் தானே, நடந்து வரலாமென்று வந்து விட்டேன்.

ஜே :—ஐயோ, பாவம் ! உனக்கு அப்பா, அம்மா யிருக்கா ளோ ?

பை :—இல்லை. எங்கப்பா, அம்மா என் சிறுவயதிலேயே இறந்து விட்டார்கள். என் அக்காவோடுதான் நான் இப்பொழுதிருக்கிறேன்.

சிவ :—அப்படியா ? கேட்க வருத்தமா்யிருக்கே. இப்பொழுது நீ என்ன செய்து கொண்டிருக்கிருய் ? ஏதேனும் வாசித்திருக்கிருயா ?

பை :—நான் மெட்ரிகுலேஷன் வரையில் படித்திருக்கிறேன். மேல் கொண்டு வாசிக்கப் பொருள் இல்லாதபடியால் நான் இப்பொழுது சும்மாத்தான் இருக்கிறேன்.

சிவ :—இதுவரையில் வாசிக்கப் பொருள் ஏது.

பை :—எங்க அத்திம்பேர்தான் கொடுத்து வந்தார். என்னுல் இப்பொழுது அவருக்கு 500 ரூ. கடன்.

சிவ :—அடாடா ! அப்படியானுல் நீ எங்கேயாவது வேலைக்கு முயற்சி செய்யக் கூடாதோ !

பை :—இக்காலத்தில் எங்கே வேலை கிடைக்கிறது ? பி. ஏ. படித்தவர்களெல்லோருமே "லாட்டரி"யடிக்கும்போது என் போன்றவர்கள் விஷயத்தைச் சொல்லவேண்டுமா ?

இப்படியாக இவர்களது சம்பாஷணைக் கிடையில் வண்டி முருங்கப்பேட்டையை அடைந்து, மச்சுவீட்டு துரைராஜய்யர் வீட்டு வாசலில் போய் நிற்கிறது. வண்டியிலுள்ளவர்கள் இறங்குகிருர்கள்.

சிவ :—எய் குப்பா ! இந்தப் புள்ளையை அவ்வங்க வீட்டிலே கொண்டு போய் விட்டு விட்டு வா.

சபாபதி :—"வேண்டாம் மாமா ! நானே போகிறேன். தாங்கள் செய்த உதவிக்கு மிகவும் நமஸ்காரம். நான் போய் வருகிறேன்." என்று விடைபெற்றுக் கொண்டு

ஜெயாவை ஒரு முறை கனிந்த பார்வையுடன் திரும்பிப் பார்த்துவிட்டு, கையில் பிடித்த பையுடன் வீடு செல்கிறான்.

இச்சமயத்தில் உள்ளேயிருந்து வந்த துரைராஜய்யர் சிரித்த முகத்துடன் "வாங்கோ, மாப்பிள்ளே! சௌக்கியந் தானே? மீனு! வா உடம்பு விச்சாயிருக்கியா?" என்று கூறி வரவேற்கிறார். சிறிது தூரத்தில் செல்லும் சபாபதியைப் பார்த்துவிட்டு "அப்பையன் யார்?" என்று கேட்கிறார்.

மீனு :—யாரோ இந்தூர் பள்ளிக் கூடத்து வாத்தியாரா யிருக்காராமே ராமநாதன், அவர் மச்சுனன். வழியிலே அந்த புள்ளே நடந்து வந்தபோது களைப்பா விழுந்துடுத்து. அதனாலே எங்க வண்டியிலே ஏத்திண்டு வந்தோம்.

துரை :—ஓஹோ! அப்படியா? வாங்கோ உள்ளே போகலாம்.

எல்லோரும் உள்ளே போகிறார்கள். குப்பனும் பெட்டி, கூஜா முதலியவைகளை எடுத்துக்கொண்டு போகிறான்.

## காட்சி 3.

காலம் :—காலை மணி 10.

இடம் :—சுந்தரியின் வீடு.

*பிச்சுமணி சுந்தரியின் வீட்டுக் கதவைத் தட்டுகிறான். சுந்தரி "யாரது?" என்று கேட்டுக்கொண்டே வந்து கதவைத் திறக்கிறாள்.*

பிச்சுமணி :—ஏன் சுந்தரி, நான்தான் பிச்சுமணி.

சுந்தரி :—ஓ! தாங்களா? எங்கே வந்தீர்கள்? என்ன விசேஷம்?

பிச் :—எல்லாம் உன்னை பார்த்துவிட்டுப் போகலாமென்று தான்! எங்கே உன் புருஷன்.?

சுந் :—அவர் பள்ளிக்கூடம் போய் ஒருமணி நேரமாயிற்றே!

பிச் :—அப்படியா? இன்றைக்குப் பள்ளிக்கூடம் உண் டென்பதை நான் மறந்துவிட்டேனே! அதிருக்கட்டும், உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்லலாமென்று வந்தேன்

சுந் :—அது என்னவோ?

பிச் :—உள்ளே வா போகலாம். அங்கு சொல்கிறேன்.

சுந் :—ஏன், அதை இங்கேயே சொல்லுங்களேன்.

பிச் :—இல்லை. இது இரகசியமான விஷயம். உள்ளேயே போகலாம், வா!" என்று சொல்லிவிட்டு விர்ரென்று உள்ளே போகிறான். சுந்தரி வேறு வழி யில்லாமல் அவனைப் பின் தொடருகிறாள். பிச்சுமணி ஊஞ்சலில் அமருகிறான்.

சுந் :—(சமீபத்திலுள்ள தூண் பக்கத்தில் நின்று கொண்டு) ஆமாம். இப்படித்தான் புருஷாள் இல்லாத வீட்டில் அதுவும் ஒரு ஸ்திரீ தனித்திருக்கையில் திடீரென்று உள்ளே வருவதோ?

பிச் :—என்ன சுந்தரி! உனக்கு இன்னும் என்மேலுள்ள துவேஷம் போகவில்லையா? நான் என்ன அந்நியனா? உனக்குத் தெரிந்தவன் தானே?

சுந் :—தங்கள் பேரில் எனக்கென்ன துவேஷம்? தங்கள் செய்கை ஒழுங்கல்ல வென்று சொல்ல வந்தேன்,

போகட்டும், தாங்கள் சொல்வதாகச் சொன்ன சமாசாரம் என்ன ?

பிச் :—உன் புருஷன் எனக்கு 500 ரூ. பணம் தரவேண்டுமென்று தெரியுமல்லவா ?

சுந் :—தெரியும். மூன்று நாட்களுக்குள் அப்பணத்தை தந்துவிடவேண்டுமென்று சொன்னீர்களாம். இவ்வளவு சீக்கிரத்தில் கேட்டால் நாங்கள் எங்கே பணத்திற்குப் போவது ?

பிச் :—அதைத்தான் நான் சொல்ல வந்தேன். நீ மாத்திரம் என் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்தால், நீயும் உன் புருஷனும் பணத்திற்காக கவலைப்படவேண்டியிராது.

சுந் :—உங்கள் மனோபீஷ்டமா ? அதென்ன ? எனக்கொன்றும் விளங்கவில்லையே !

பிச் :—அதான், நீ என்பேரில் தயவு வைத்தால்..........

சுந் :—என்ன சொன்னீர் ? சற்று நாவை அடக்கிப் பேசும். என்னை யாரென்று நினைத்துக்கொண்டீர். இதைச் சொல்லத்தான் வெகு காரியமாக இங்கு வந்தீரோ ?

பிச் :—சுந்தரி ! வீணாக கோபித்துக்கொள்ளாதே. உன் நிலைமையைச் சற்று நினைத்துப் பார். நீயோ அனாதையும், ஏழையுமான ஓர் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர் வேலை பார்க்கும் வாலிபனை மணந்துகொண்டிருக்கிறாய். அவனோ பண பலமும், ஆள் பலமும் மிகுந்த என்னிடம் கடன் பட்டிருக்கிறான். ஆகையால் என் இஷ்டத்திற்கு நீ உடன்பட்டால், நீங்களிருவரும் நலனடைவீர்கள். இல்லாவிடில்.........................

சுந் :—இல்லாவிடில் என்ன செய்து விடுவீர் ?

பிச் :—சொல்லவும் வேண்டுமா ? கடனுக்காக உன் புருஷன் ஜெயிலில் அடைபடுவான். நீயோ பலாத்காரமாக கற்பழிக்கப் படுவாய்.

சுந் :—ஆஹா ! இவ்வளவு குரூர நெஞ்சமுடையவரா நீர் ? அப்படியானுல் உம்மாலானதை செய்துகொள்ளும். உமது மிரட்டலுக்கெல்லாம் நான் பயந்தவளல்ல. மரியாதையாக உடனே இவ்விடத்தைவிட்டுச் செல்லும்.

பிச் :—ஓஹோ உனக்கு இவ்வளவு தைரியமா ? இப்பவே உன்னை கற்பழிக்கிறேன். என்னை உன்னுல் என்ன செய்ய முடியும் ?—என்று சொல்லி, திடீரென்று சுந்தரியின் மேல் பாய்ந்து அவளைத் தன் இரு கைகளாலும் இறுகக் கட்டி அணைக்கிருன்.

எதிர் பாராத இச்சம்பவத்தால் திடுக்கிட்டுப்போன சுந்தரி "ஐயா ! என்னை விட்டு விடும். வீணுக ஒரு பெண்ணின் கற்பை அழித்து அதனுல் வரும் பாபத்துக்கும், சாபத்துக்கும் ஆளாகாதீர்" என்று கூறிக்கொண்டே அவனது பிடியிலிருந்து விடுபட திமிறுகிருள். பலவிதமாக முயன்றும் இரும்புப் பிடி போன்ற அவனது கைகளிலிருந்து விடுபட முடியாமல் ஆத்திரம் மிகுந்து அவனது கைகளைக் கடிக்கிருள். "ஹா, அப்பா ?" என்றலறி வலி பொறுக்க முடியாமல் பிச்சுமணி கைகளைத் தளர்த்துகிருன். இதுதான் சமயமென்று அவனைப் பிடித்து எட்டித்தள்ளி விடுகிருள் சுந்தரி. பிச்சுமணி பின் பக்கமாக ஊஞ்சலில் போய் விழுகிருன். சுந்தரி வாசல் பக்கமாக ஓடுகிருள், சட்டென்று தன்னை சமாளித்துக்

கொண்டு பிச்சுமணி சுந்தரியைத் தொடர்ந்து ஓடி அவள் வாசல்படி தாண்டுவதற்குள் அவளது மயிரைப் பிடித்து உள்ளேஇழுத்து, தன்னிரு கைகளாலும் அவளது தொண்டையை நெறிக்கிறான். "ஐயோ! என்னைக் காப்பாற்றுகிறவர் ஒருவருமில்லையா?" என்று மூச்சுத்திணர சுந்தரி கதறுகிறாள்.

இச்சமயத்தில் "என்ன அக்கா? ஏன் கத்துகிறாய்?" என்று கேட்டுக்கொண்டே சுந்தரியின் தம்பி சபாபதி அங்கு வருகிறான். தன் தமக்கையிருக்கும் நிலைமையைக் கண்டு மிகுந்த கோபங்கொண்டு, தன் கையிலிருந்த பையை ஒரு மூலையில் எறிந்துவிட்டு, குபீரென்று பிச்சுமணியின் மேல் பாய்ந்து தன் பலங்கொண்டமட்டும் குத்துகிறான். உடனே பிச்சுமணி சுந்தரியை விட்டு விட்டு சபாபதியோடு சண்டைக்கு வருகிறான். சிறிது நேரம் சண்டை நடக்கிறது. சபாபதி கீழே விழுந்து விடுகிறான். பிச்சுமணி அவன்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு அவனது கழுத்தைப் பிடித்து அமுக்குகிறான். மிகுந்த திகிலோடு சண்டையை கவனித்துக்கொண்டிருந்த சுந்தரி, தன் தம்பியின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை எண்ணி, சட்டென்று தன் கைக்கு கிடைத்த ஈயச்சொம்பை எடுத்து பிச்சுமணியின் மண்டையில் அடிக்கிறாள். "ஹா!" என்று கதறி பொறி கலங்கி கீழே விழுகிறான் பிச்சுமணி. உடனே சுந்தரியும் சபாபதியும், பிச்சுமணியை கர கர வென்று இழுத்து வாசல் பக்கம் கொண்டுவந்து தள்ளி விட்டு, கதவைச் சாற்றிக்கொண்டு உள்ளே போய்விடுகிறார்கள்.

மிகுந்த ஏமாற்றமும், அவமானமும் அடைந்த பிச்சுமணி தள்ளாடிக்கொண்டே தெருவில் செல்லுகிறான்.

## காட்சி 4.

காலம் :—காலை மணி 11.

இடம்:...ஆற்றங்கரை செல்லும் வழி.

[சுந்தரியின் வீட்டிலிருந்து வெளி வந்த பிச்சுமணியை, அப்பொழுதுதான் தெருவில் வந்து கொண்டிருந்த தாண்டவராயன் கவனிக்கிருன். பிச்சுமணி ஆற்றங்கரை பக்கம் செல்லுகிருன். தாண்டவராயன் பிச்சுமணியின் பின்னுல் சிறிது தூரம் சென்று "சாமி! செத்தே நில்லுங்கோ!" என்று கை தட்டிக் கூப்பிடுகிருன். பிச்சுமணி திரும்பிப் பார்த்து நிற்கிருன். தாண்டவராயன் கிட்டே செல்கிருன்.

பிச்சுமணி :—யாரப்பா நீ? எதற்காக கூப்பிட்டாய்?

தாண்டவராயன் :—என்ன சாமி! என்னைத் தெரியாதா உமக்கு?

பிச் :—தெரிய வில்லையே! உன்னை எங்கும் நான் பார்த்ததாக ஞாபக மில்லையே!

தாண் :—ஏஞ்சாமி முழுப் பூசணிக்காயை சோத்துலே மறைக்கப் பாக்றே? தஞ்சாவூர்லே தாசித் தெருவிலே போன வருசம் என்னைப் பார்க்கலீங்களா நீங்க?

பிச் :—ஆமாம். இப்பொழுது தான் நினைவிற்கு வருகிறது. உம்பேரென்ன? மறந்து போச்சே!

தாண்ட :—எம்பேரு தாண்டவராயன்னு உங்களுக்குத் தெரியாதா சாமி? என்னத்துக்குங்க இப்படி ஒன்னுந் தெரியாதவங்க போல பாசாங்கு செய்றீங்க? தஞ்சாவூர்லே தாசி தங்கம் உங்கிட்டே இருந்ததெல்லாம்

பிடுங்கிக்கிட்டு முண்டத்தோட தெருவிலே அடிச்சு விரட்டலேயா ? அப்ப தெருவோட வந்த என்னை "மானம் போகிறது. செத்தே உன் மேல் துண்டை கொடப்பா! உனக்கு மிகவும் புண்ணியம் உண்டு"ன்னு சொல்லி என் மேல் துண்டை கேட்டு வாங்கிக்கலேயா ?

பிச் :—போதும், போதும். நிறுத்து ! அச்சமயத்தில் அது அசந்தர்ப்பமாய் நேர்ந்துவிட்டது. ஏன் இப் பொழுது கிளப்புகிறாய் ?

தாண் :—ஒண்ணுமே தெரியாத வங்கபோல் எங்கிட்டே டபாய்க்கப் பாத்தீர்களே ! அதனாலேதான் ஒங்க வண்ட வாளத்தை வெளியிலே எடுத்து விட்டேன். அதிருக் கட்டுங்க. இப்ப அந்த முகனை வீட்டிலேந்து வந்தீங் களே, அந்த வீட்டுலே இருக்கிற பொண்ணு யாருங்க ? உங்களுக்குத் தெரியுமா ?

பிச் :—அப் பெண் எனக்குத் தெரிஞ்சவதான். இந்த ஊருக்குப் புதிசா பள்ளிக்கூடத்து வாத்தியாரு வந்திருக்காரு பாரு, அவருடைய பெண்டாட்டிதான் இந்த பொண்ணு.

தாண் :—அப்படியா ! இந்த பொண்ணு மாதிரி எப்படிங்க ?

பிச் :—ஏன் ? இதெல்லாம் உனக்கென்னத்திற்கு ?

தாண் :—இல்லீங்க. நான் சொல்றேன்னு கோச்சுக்கா தீங்க எங்க எஜமான் நேத்திக்கி அந்தப் பொண்ணைப் பாத்தாரு. அதுமுதக் கொண்டு அந்தப் பொண்ணைப் பத்தியே நினைச்சிண்டு இருக்காரு. அதுக்குத்தான் உங்களை விசாரிச்சேனுங்க.

பிச் :—ஓஹோ! அப்படியா சமாசாரம்? இந்தப் பெண் ஒரு மாதிரிதான். சம்சயமான பேர்வழிதான். இந்தப் பெண்ணின் புருஷன் மிகவும் ஏழை. நானுந்தான் அப் பெண்ணையடைய முயற்சிக்கிறேன். ஒன்றும் கைகூடி வரமாட்டேன் என்கிறது. ஒரு சமயம் உங்க எஜமான் முயற்சி செய்தால் ஏதாவது காரியம் நடைபெறலாம்.

தாண் :—ஆமாங்க. குச்சிக்காலும், குச்சிக்கையுமாயிருக் கும் உங்களை அந்த பொண்ணுக்கு எப்படிங்க பிடிக்கும்? எங்க எஜமான் சில்க் ஷர்ட்டும், விசிறி மடிப்பு அங்க வஸ்திரத்தையும் போட்டுண்டு அப்படி ஜில்லுன்னு அந்த வீட்டுவாச வழியா போனாருன்னா ஒரு நிமிஷத் திலே அந்தப்பெண்ணைக் கொண்டுவந்து விடுவாரே!

பிச் :—சர்த்தான்! உங்க எஜமான் யார்?

தாண் :—இந்த ஊர் கிராம முன்சீபு துரை ராஜய்யாதான் எங்க எஜமான். அவருகிட்டே நான் தலையாரி வேலை பார்க்கிறேன். எனக்கு எழு ரூபா சம்பளம்னு பேரு. ஆனா அவரு எஞ்செலவெல்லாம் கவனிச்சுப்பாரு. கிம் பளத்துலேயும் ஏதாவது கொடுப்பாரு.

பிச் :—நீ இந்த ஊர் தலையாரியா? அப்படின்னா உன் உதவி எனக்கு மிகவும் வேண்டியிருக்கும். இந்தா இதை வச்சுக்கோ!

(ஒரு ரூபாய் கொடுக்கிறான்.)

தாண் :—(ரூபாயை வாங்கிக்கொண்டு) அதுக்கென்னங்க; உங்களுக்குதவி செய்ய எப்பவும் தயாரா இருக்கே னுங்க, சரிங்க, நானு போயிட்டு வரேனுங்க.

(இருவரும் பிரிந்து செல்கிறார்கள்.)

## அங்கம் 4—காட்சி 1.

காலம் :—நடுப்பகல் 12-மணி.

இடம் :—சுந்தரியின் வீடு.

சுந்தரி :—(சபாபதிக்கு இலையில் சாதம் பரிமாறிக் கொண்டே) சபாபதி! இன்று மாத்திரம் நீ வந்திராவிடில் என் மானமும், உயிரும் போயிருக்கும்.

சபாபதி :—அக்கா! எல்லாம் ஈசுவர யத்தனம். நம்ம கையில் என்ன இருக்கிறது. அந்த ஈசுவரன்தான் என்னை சமயத்தில் இங்கு கொண்டு வந்து விட்டான்.

சுந் :—ஆமாம். காலையிலேயே வந்து விடுவதாகச் சொல்லியிருந்தாயே! ஏன் உனக்கு இவ்வளவு நேரமாயிற்று?

சபா :—நான் என்ன அக்கா செய்வது? கையிலிருந்த காசெல்லாம் சிலவழிந்துவிட்டது. அதனால் நடந்து வரும்படி நேரிட்டது. வழியில் களைத்து விழுந்துவிட்டேன். நல்ல வேளை! ஒரு புண்ணியவான் அவர் சம்சாரம், பெண்ணோடே இந்த ஊருக்கு வறபோது என்னையும் அவரது வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்தார்.

சுந் :—அப்படியா, அந்தப் புண்ணியவான் யார்?

சபா :—நான் விசாரிக்க வில்லையக்கா! நடுத்தெருவிலே ஒரு மச்சுவீடு இருக்கே, அந்த வீட்டுக்குத்தான் அவர் வந்திருக்கார், அவரோட சம்சாரம் சொன்னதிலிருந்து அவருக்கு இந்த ஊர் வேண்டாம்போல யிருக்கு. அவளோட வந்திருக்கிற பெண்ணைப் பார்த்தா சமத்தா குரு குருப்பாயிருக்கும் போலயிருக்கு.

(இச்சமயத்தில் ராமநாதன் "சுந்தரி! சுந்தரி!" என்று கூப்பிட்டுக்கொண்டு வாசற் கதவை தட்டுகிறான்.)

சபா :—அக்கா! அத்திம்பேர் கூப்பிடுறாப்போலேயிருக்கு. போய் கதவைத் திற!

(சுந்தரி கதவைத் திறக்கிறாள். ராமநாதன் உள்ளே வருகிறான்.)

சுந் :—என்ன அதுக்குள்ளே வந்து விட்டேள்? இன்று பள்ளிக்கூடம் கிடையாதா?

ராமநாதன் :—இல்லை. நான்தான் லீவ் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். கடன் கவலையால் எனக்குப் பள்ளிக் கூடத்தில் வேலையே ஓடவில்லை என்று பதில் சொல்லிக் கொண்டே கூடத்துக்கு செல்லுகிறான்.

அங்கு சபாபதியைக் கண்டதும் "வா சபாபதி, எப்பொழுது வந்தாய்?" என்று கேட்கிறான்.

சபா :—இப்பொழுது தான் வந்தேன். வந்து ஒரு மணி நேரமாயிற்று. நல்ல வேளை! ஈசுவரன் தான் என்னைத் தகுந்த சமயத்தில் இங்கு கொண்டு வந்து விட்டான். இல்லாவிடில் இவ்வளவு நேரத்திற்கெல்லாம் அக்காவின் கற்பை அந்த பிச்சுமணிப் பயல் அழித்திருப்பான்.

ராம :—என்னது? பிச்சுமணியா? அவன் இங்கு எங்கே வந்தான்?

சுந் :—நீங்க போன கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அவர் இங்கு வந்தார். வந்து என்னை அவரது இஷ்டத்திற்கு உடன்படும்படியும், தான் தனது கடனை கேட்காமல் இருந்து விடுவதாகவும் சொன்னார். இதனால் அவரை நான் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே போகும்படி சொன்னேன். உடனே அவர் என்னை பலாத்காரமாக கற்பழிக்க முயன்றதோடு, என் கழுத்தை

நெறித்து கொல்லவும் பார்த்தார். எனது நற்காலம், அச்சமயத்தில் சபாபதி வந்தான். என்னை அவரிடமிருந்து விடுவித்தான்.

ராம:—ஆஹா! அந்த அயோக்கியப் பயல் நானில்லாத சமயத்தில் இவ்வளவு ரகளையும் செய்துவிட்டுப் போய் விட்டானு? அதானு உன் முகம் பயத்தால் வெளுத்திருக்கிறது? ஐயோ! இப்பொழுது நான் ஒன்றும் செய்யக்கூடாத நிலைமையில் இருக்கிறேன். இது விஷயத்தை போலீஸாருக்குத் தெரியப்படுத்தி அவனை சிக்ஷிக்கலாமென்ருல், வீணுக உன் பெயர் வெளியில் அடிபடுவதோடு நமக்கு அலைச்சலும், பணச்செலவும் ஏற்படுமே! அவனது பணத்தைக் கொடுத்து ஒழித்து விட்டால் அவன் போய் விடுவானென்று பார்த்தால் அதற்கும் வழியில்லையே!

சபா:—அத்திம் பேரே! என்னுல் தானே உங்களுக்கு இவ்வளவு உபத்திரமும். நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் எங்கேயாவது பணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்.

ராம:—இதெல்லாம் சிறு பிள்ளைத்தன பேச்சு. எனக்கே ஒருவரும் கொடுக்க மாட்டேன் என்கிறபோது சிறுவனுகிய உனக்கு எவன் கொடுப்பான்? சரி இலையை போடு! நான் சாப்பிட்டுவிட்டு கந்து வட்டி கணேசன் செட்டியாரிடம் போய் கேட்டுப் பார்க்கிறேன்.

## காக்ஷி 2.

காலம்:—மாலை மணி 3.

இடம்:—துரைராஜய்யர் வீட்டின் மேல் மாடியில்.

[துரைராஜய்யர் மாடியிலுள்ள தனது தனி யறையில் தாண்டவராயனேடு பேசிக் கொண்டிருக்கிருர்].

துரைராஜய்யர் :—ஏண்டா, ஏதாவது சங்கதி விசாரித்தாயா ?

தாண் :—விசாரித்தேனுங்க, கொஞ்சம் முயற்சி செய்தா கிடைக்குங்க. அந்தப் பெண் சம்சியமான பேர்வழி தானும்.

துரை :—அப்படியா! இதை எப்படி நீ அறிந்தாய்.

தாண் :—என்னங்க பிரமாதம். இன்னிக் காலம்பற தெருவோட போனேங்க. அந்தப் பொண்ணு வீட்டிலேந்து, ஒரு அய்யரு வந்தாரு. அவர் யாருன்னு கிட்டப்போய் பாத்தாக்கே நமக்கு தெரிஞ்சவராப் போச்சு. அதான் போன வருசம் தாசி தங்கத்தாலே முண்டத்தோட தெருவிலே விரட்டப் பட்டு, என்னைக் கேட்டு ஒரு துண்டு வாங்கிக் கட்டிண்டாரே அந்த பிச்சுமணி அய்யருதான்.

துரை :—அந்தப் போக்கிரியா! அவர்கிட்டத்தான் இதை விசாரிச்சியோ? அவர் என்ன சொன்னுர் ?

தாண் :—ஆமாங்க. அவருகிட்டேத் தான் விசாரிச்சேன். அவரு சொன்னுரு, அந்தப் பொண்ணு ஒருமாதிரிதான். எனக்குத் தெரிஞ்சவதான். நானுந்தான் பார்க்கறேன் என்னுலே முடியல்லே. வேணும்னு உங்க எஜமானைப் பார்க்க சொல்லுன்னுரு.

துரை :—அவன் கிடக்கிறுன் கையாலாகாத பயல். நான் மனசு வச்சால் ஒரு நிமிஷத்திலே கொண்டு வந்துவிட மாட்டேன்.

தாண்:—நானும் அதைத்தான் சொன்னேனுங்க. ஆனு அவரும் லேசுப்பட்ட ஆசாமியல்ல. உயிரு போனுலும் எந்த

காரியத்தையும் சாதிக்கிறவருதான். அந்தப் பொண்ணு இஷ்டப்பட்டு வருமோன்னு பார்க்கருப் போலயிருக்கு. அந்தப் பொண்ணுக்காளு அவரை பிடிக்கல்லே போல யிருக்கு.

துரை :—அப்பன்ளு என் சொள்ளே மோஞ்சியையும், கருப்புத் தேகத்தையும் கண்டா அந்தப் பொண்ணுக்கு பிடிக்காதுன்னு சொல்லு!

தாண் :—அப்படி இல்லீங்க! உங்க தினுசு வேற. ஜோரா வைரக் கடுக்கனை போட்டுண்டு, சில்க் ஷர்ட்டை மாட் டிண்டு, அதுமேலே விசிறி மடிப்பு ஜரிகை அங்கவஸ் திரத்தை விரிச்சுண்டா, உங்களைக் கண்டு எந்த குட்டி தான் சொக்கமாட்டா?

துரை :—அதெல்லாம் சரி. அந்தப் பெண்ணை எப்படி சரிப்படுத்துவது?

தாண் :—என்னங்க. யோசனை பண்றீங்க? பணத்தைக் கொடுத்தா எல்லா காரியமும் தன்னப்போல நடக்குங்க. வாளு ஒன்னு செய்யுங்க. இன்னிக்கி ராத்திரி அந்த பிச்சுமணி அய்யாவை இங்கு கூட்டிட்டு வாறேனுங்க. அவரோட கலந்து ஒரு வழிசெய்யலாங்க.

துரை :—ஆமாம். அதுதான் சரியான யோசனை. இன்று ராத்திரி 10-மணிக்கு கிராமச் சாவடிக்கு அவரைத் தவருமல் அழைத்து வா.

தாண் :—ஆகட்டுங்க. ஒரு நாலணு இருந்தா கொடுங்க. சாயங்காலம் காபி குடிக்கணுங்க.

துரை :—காபியாவதுடா? கள்ளுத்தண்ணீன்னு சொல்லு! நாலணு என்ன? அரை ரூபாயா வச்சுக்கோ.

(அரை ரூபாய் கொடுக்கிருர்.)

## காட்சி 3.

காலம் :—மாலை மணி 3.

இடம் :—கந்துவட்டி கணேசன் செட்டியார் வீடு.

[செட்டியார் தமது வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு தனது திருத் தொந்தியை தடவிக் கொண்டிருக்கிறார். ராமநாதன் அங்கு வருகிறான்.]

ராம :—செட்டியாரே! தாங்கள் தான் இச்சமயத்தில் எனக்கு உதவ வேண்டும்.

செட் :—சாமி! என்ன விசேஷம்?

ராம :—நான் ஒருவருக்கு பணம் கொடுக்க வேண்டும்.

செட் :—வீண் கதை யெல்லாம் அளக்காதீங்க சாமி! இங்கே புராணம் படிக்கவா வந்தீங்க? விஷயத்தை உடைச்சு சொல்லுங்க!

ராம :—எனக்கு இப்பொழுது கொஞ்சம் பணம்வேண்டும்.

செட் :—எவ்வளவு ரூபாய்?

ராம :—500 ரூ இருந்தால் போதும்.

செட் :—இப்ப பேசப் பொழுதில்லீங்க. நாளைக் காலை யிலே வாங்க.

ராம :—நாளைக் காலை வரையில் பொறுக்க முடியாதே!

செட் :—பொறுக்க முடியாவிட்டால் போம். செட்டிவீட்டுக் காசென்ன கொட்டிக் கிடக்குதோ அள்ளிக்கிட்டுப் போக. எங்ககாரியஸ்தர் வந்துதான் ஆகணும். காலம்பற எல்லாம் பேசிக்கலாம் வாங்க.

ராம:—நாளைக் காலையிலாவது கட்டாயம் தருவீங்களா?

செட்:—எல்லாம் புள்ளி தெரிஞ்சிண்டுதான் கொடுக்க முடியும்.

ராம:—சரி. நாளைக் காலையில் வருகிறேன்.

(போகிறுன்)

## காட்சி 3 (a)

[ராமநாதன் வழியில் காரியஸ்தர் கந்தசாமி பிள்ளையை சந்திக்கிறுன்.]

கந்த:—எங்கே செட்டியார் வீட்டிற்குப் போயிருந்தீர்களா?

ராம:—ஆமாம் கொஞ்சம் பணம் வேண்டியிருந்தது.

கந்த:—செட்டியார் என்ன சொன்ஞர்?

ராம:—நீங்க வந்துதான் ஆகனும் என்ருர். நாளைக் காலையில் வரச் சொல்லியிருக்கிருர்.

கந்த:—சரிங்க. அவரு சொன்னபடி நாளைக் காலம்பற வாங்க பேசிக்கலாம்.

ராம:—நீங்கதான் செட்டியாரிடம் சொல்லி ஏற்பாடு பண்ணனும்.

கந்த:—அதுக்கென்ன, ஆகட்டுங்க ஆமாம், அதென்ன சட்டையில் பளபளன்னு மின்னுது? பித்தாஞ?

ராம:—பித்தான்தான். இதை க்ருமன்ஸ் பட்டன்னு சொல்வாங்க.

கந்த:—அதென்ன கர்ம பாட்டஞ.

ராம :—இல்லை யில்லை. இப்படிச் சொன்னால் உங்களுக்கு புரியாது. இது ஒருவித தங்கப் பித்தான்.

கந்த :—அப்படியா! இங்கே கொடுங்கோ பாக்கலாம். (கையில் வாங்கி பார்க்கிறார்) இது ரொம்ப நல்லாயிருக்குதே! இந்த மாதிரி நமக்கொரு ஜோடி வாங்கித் தாங்கோளேன்.

ராம :—வேணும்னு இதையே வச்சுக்கோங்கோ.

கந்த :—ஏது ரொம்ப நல்ல மனசாயிருக்கீங்களே. எங்க செட்டியாரும் அப்படித்தானுங்க. அவரை சும்மா அல்ப சொல்பமா நினைக்கவேண்டாங்க, என் மேலே அவருக்கு ரொம்ப உசுரு. என்னை கேக்காமே ஒரு காரியமும் செய்யமாட்டாரு. அவருகிட்டே நான் சொன்ன பேச்சுக்கு மறு பேச்சு கிடையாதுங்க.

ராம :—சரி, நான் சென்று வருகிறேன். ஞாபகமிருக்கட்டும்.

கந்த :—ஆகட்டும். கையில் ஏதாவது சில்லரை யிருக்குங்களா?

ராம :—ஏன்? இரண்டணாதானிருக்கு.

கந்த :—இருக்கிறது போதுங்க. அதைக் கொடுங்க, பொடி வாங்கிக்கணும். வேறு சில்லரை இல்லே.

(ராமநாதன் காரியஸ்தரால் தனக்கு காரியமாகவேண்டுமேயென்று கொடுக்க மனமில்லாமல் இரண்டணாவைக் கொடுக்கிறான். காரியஸ்தர் சந்தோஷத்துடன் இரண்டணாவைப் பெற்றுக்கொண்டு, பித்தானை மடியில் கட்டிக் கொண்டு அவ்விடத்தை விட்டு செல்கிறார்.)

## காட்சி 4.

காலம் :—இரவு 10 மணி.

இடம் :—கிராமச் சாவடி.

[தெருவில் இரண்டொரு நாய்கள் குலைக்கும் சப்தத்தையும், மரத்தில் ஆந்தைகள் கத்தும் சப்தத்தையும் தவிர ஊரெங்கும் சந்தடியற்று நிசப்தமாயிருந்தது. கிராமச் சாவடியில் துரை ராஜய்யரும், பிச்சுமணியும் குசுகுசுவென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். யாராவது அப்பக்கம் வருகிறார்களாவென்று கவனித்துக்கொண்டிருக்கிறான் தாண்டவராயன்.]

பிச்சு :—பணத்திற்கு ஆசைப்படுபவள் அப்பெண்ணல்ல. ஏதாவது தந்திரம் செய்தால்தான் காரியம் பலிக்கும்.

துரை :—எந்தவிதமான தந்திரம் செய்யலாம் ?

பிச்சு :—நாளைக்கு உங்க வீட்டில் சமாராதனை என்று சொன்னீர்களல்லவா ! அதற்கு ராமநாதனை அழைக்கப் போவதுபோல் அவனது வீட்டிற்குச் சென்று அவனோடு பரிச்சயம் செய்து கொள்ளுங்கள். பின்னால் இரண்டொரு தினம் கழித்து, தாண்டவராயனை விட்டு உமது மனைவி அழைத்துக்கொண்டு வரச்சொன்னதாக சொல்லி, அப்பெண்ணை உங்கள் வீட்டு மாடியறைக்கு அழைத்துக்கொண்டு வரச்சொல்லுங்கள். பின் உங்கள் சாமர்த்தியம்போல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

துரை :—ஏது, இது நடைபெறும் காரியமாகத் தோன்றவில்லையே! அப்பெண் தாண்டவராயனின் வார்த்தையை நம்பி என் வீட்டிற்கு வருமா ?

பிச்சு :—என்ன, இப்படி மலைக்கிறீர்கள் ? அப்பெண் பேஷாகவரும். அப்படி வராவிட்டால் வேறு ஏதா

வது ஒரு வழி செய்வோம். முதலில் இதைச் செய்து பார்ப்போமே!

துரை :—சரி, இதிருக்கட்டும். ஜெயாவை எப்படி ஒழிப்பது? இதற்கொரு வழி சொல்!

பிச்சு :—ஜெயாவை ஒழிப்பதால் உங்களுக்கென்ன பிரயோஜனம்?

துரை :—பிரயோசன மில்லாமலா சொல்லுவேன்! ஜெயா சிவராமய்யரின் மூத்தாள் மகள். என் தங்கையோ சிவராமய்யருக்கு இளைய மனைவி. நாளைக்கு சிவராமய்யர் இறந்துபோனால் சொத்தின் முக்கால்வாசி பாகமும் ஜெயாவைத்தான் அடையும். ஜெயாவை ஒழித்துவிட்டால் எல்லா சொத்தும் என் தங்கைக்குத்தான் கிடைக்கும். என் தங்கைக்கு குழந்தை குட்டியில்லாததால் அச்சொத்தை கடைசியில் நான்தான் அனுபவிப்பேன்.

பிச்சு :—சரி, சரி, இப்பொழுது தெரிந்துகொண்டேன். சிவராமய்யருக்கு எவ்வளவு சொத்து இருக்கும்?

துரை :—25 காணி நிலமும் 30,000 ரூ. ரொக்கமும் இருக்கிறது.

பிச்சு :—தேவலாமே! தகுந்த புள்ளிதான். அதானு ஜெயாவை ஒழிப்பதில் உங்களுக்கு இவ்வளவு ஆவல்.

துரை :—ஆம். நீ மாத்திரம் ஜெயாவை ஒழித்தால் உனக்கு. தகுந்த பணம் தருவேன்.

பிச்சு :—துரைராஜய்யரே! இது என்னால் ஆகக்கூடிய காரியமல்ல. சென்ற ஒரு வருஷமாக இப்பக்கங்களில் கொள்ளையடித்து வரும் கம்பளித்தேவனைக்கொண்டு தான் இதைச்செய்யவேண்டும். கம்பளித்தேவனோடு எனக்குப் பழக்கமுண்டு. தாங்கள் தகுந்த பணம்

தருவதாயிருந்தால் இதற்குவேண்டிய ஏற்பாடு செய்கிறேன்.

துரை :—கம்பிளித் தேவனை உனக்குத் தெரியுமா? அப்படியானல் இன்னும் ரொம்ப நல்லதாப்போச்சு. எவ்வளவு பணம் வேண்டுமானலும் கொடுக்கத்தயார். காரியம் முடிந்தால் சரி. சுமார் எவவளவு பணம் அவன் கேட்பான்?

பிச்சு :—ஆயிரம் ரூபாய்க்கு குறைந்து அவன் வாங்கமாட்டான். எனக்கு உங்களிஷ்டம்போல் கொடுங்கள்.

துரை :—சரி, அப்படியே ஆகட்டும். கம்பளித்தேவனை நாளைக்கு இதே நேரத்திற்கு இங்கு அழைத்து வருகிருயா?

பிச்சு :—ரொம்ப ஒழுங்காயிருக்கே! கம்பிளித்தேவன் உங்கள் எதிரில் வருவானென்று நினைத்தீரா? அது ஒருக்காலும் நடக்காது. எல்லாம் என்மூலம் தான் நடைபெறவேண்டும்.

துரை :—அப்படியா? பணமும் முன்னல்தான் கொடுக்கவேண்டுமோ?

பிச்சு :—ஆமாம். பணம் கைக்கு வந்தால்தான் காரியம் நடக்கும்.

துரை :—அப்படியானல் இப்பொழுது கையிலிருக்கும் 500 ரூபாயை வைத்துக்கொள்! மீதியை நாளைக் காலையில் என் வீட்டிற்கு வந்தால் தருகிறேன். ஞாபகமிருக்கட்டும்· இதில் நான் ஈடு பட்டிருப்பதாக வெளியில் தெரியவரக்கூடாது.

பிச்சு :—அதிகம் சொல்லவேண்டாம். எல்லாம் நான் கவனித்துக்கொள்கிறேன்.

(பிரிந்து இருட்டில் மறைந்து போகிருர்கள்)

## காட்சி 4. (a)

காலம் :—நடு இரவு 12 மணி.

இடம் :—துரைராஜய்யர் வீடு.

[வீட்டில் எல்லோரும் குறட்டைவிட்டு தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். மீனாக்ஷி மாத்திரம் ரேழி வாசற்படியில் தன் தமயனின் வரவிற்காக காத்துக்கொண்டிருக்கிறாள். துரைராஜய்யர் மெதுவாக சந்தடி செய்யாமல் கதவைத்திறந்துகொண்டு வருகிறார்.]

துரை :—(மீனாக்ஷியைப் பார்த்துவிட்டு) மீனா! நீ இன்னும் தூங்கப்போகவில்லையா ?

மீனாக்ஷி :—உனக்காகத்தான் காத்துண்டு இருந்தேன். போன சமாசாரம் என்ன ஆச்சு ?

துரை :—சூ! பலக்கப் பேசாதே. எல்லாரும் தூங்கறாளா ?

மீனாக்ஷி :—அவாள்ளாம் இப்போதைக்கு எழுந்திருக்க மாட்டா. விடற குறட்டையைப் பாத்தா தெரியலையா ? போயிட்டுவந்த சமாசாரத்தை சொல்லு!

துரை :—எல்லாம் ஏற்பாடு பண்ணியாச்சு; கொள்ளைக்கார கம்பளித் தேவங்கிட்டே சொல்லியிருக்கு. ஆனா பணந்தான் கொஞ்சங்கூட. 1000 ரூ. கொடுக்கிறதாகப் பேச்சு.

மீனாக்ஷி :—பணம் போனா போறது. எப்படியாவது அந்த சனியன் தொலைஞ்சா சரி.

(இருவரும் தங்கள் தங்கள் படுக்கைக்கு செல்கிறார்கள்.)

## அங்கம் 5—காட்சி 1.

காலம் :—காலே 6 மணி.

இடம் :—சுந்தரியின் வீடு.

[செட்டியார் வீட்டுக்குப் போவதற்காக ராமநாதன் வாசலுக்கு வருகிறான். அச்சமயத்தில் துரைராஜய்யர் அங்கு வருகிறார்.]

துரை :—ஸார்! உங்களைத் தான் பார்க்க வந்தேன்.

ராம :—தங்களுக் கென்ன வேண்டும்?

துரை :—ஒன்றுமில்லை. நம்மாத்துலே சமாராதனை. அதுக்கு வரனும். அங்கேயே போஜனம் வச்சுக்கனும்.

ராம :—அதுக்கென்ன! பரவா இல்லை. எனக்கு காரிய மிருக்கு. எனக்குப் பதிலா எம்மச்சுனனை வரச் சொல் றேன்.

துரை :—சரி, உங்க சௌகர்யம் போல செய்யுங்கோ. (போகிறார்.)

(ராமநாதன் செட்டியார் வீடு செல்கிறான்)

## காட்சி 2.

காலம் :—காலே 7-மணி.

இடம் :—செட்டியார் வீடு.

[செட்டியார் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அங்கு ராமநாதன் வருகிறான். செட்டியார் ராமநாதனைக் கண்ட தும் அரைக் கும்பிடு போடுகிறார்.]

ராம : என்ன செட்டியார்வாள்! நேற்று நான் கேட்டுக் கொண்டேனே!

சேட் :— இருங்க செத்தே! கார்யஸ்தரை கூப்பிடுகிறேன்.

(செட்டியார் கார்யஸ்தரை கூப்பிடுகிறார். அவர் வருகிறார்).

கா. கந்தசாமி பிள்ளை:—வாங்கசாமி? பணம் என்னத்துக்கு சாமி தேவை?

ராம : நான் ஒருவருக்கு கடன் அடைக்க வேண்டும்.

கா : யாருக்கு ?

ராம : தஞ்சாவூர் பிச்சுமணி அய்யர்.

கா : எவ்வளவு ரூ. வேண்டும் ?

ராம : 500 ரூ. வேண்டும்.

கா : ஏதாவது உங்களுக்கு சொத்து இருக்கா ?

ராம : ஒன்றுமில்லை.

கா : அப்படின்னு கடன் கொடுத்தா செட்டியார் வீட்டு காசு போனது தானே ?

ராம : அப்படி நினைக்கவேண்டாம். எனக்கு இந்த ஊர் பள்ளிக்கூடத்து வாத்தியார் வேலை. மாதம் 30 ரூ. சம்பளம். மாதா மாதம் சம்பளம் வந்ததும் 10 ரூ. கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்.

கா : ஆமாம். அந்தக் கடனை என்ன அஞ்சு வருசத்திலே அடைப்பீங்களா ?

ராம :—இல்லை. இன்னும் நாலு மாதம் சென்றால் எனக்கு ஒரு இடத்திலிருந்து பணம் வரும். அப்பொழுது பூரா பணத்தையும் தீர்த்து விடுகிறேன்.

கா : அது எப்படி யிருந்தாலும் 100-க்கு 12 ரூ. வீதம் அஞ்சு வருசத்து வட்டியை முதலில் களிச்சுண்டுதான் கொடுப்போம். இஷ்டமா ?

ராம :—அப்படிச் சொல்லக்கூடாது. பூராத் தொகையும் எனக்கு வேண்டும். வட்டியை நான் பின்னல் கொடுத்து விடுகிறேன்.

கா :—அதெல்லாம் முடியாது. இதுக்கு இஷ்டம்னு சொல்லுங்க.

ராம :—சரி, நீங்க சொல்றபோது நான் என்ன செய்யறது. அப்படியே செய்யுங்க.

கா :—இந்தப்பணத்திற்கு ஏதாவது பொருள் ஈடு கொடுக்க முடியுமா ?

ராம :—எங்கிட்டே அப்படி யொன்றுமில்லையே !

கா :—ஏதாவது தங்க நகை யில்லையா ?

ராம :—இல்லையே !

கா :—அப்படின்னு பணம் கொடுக்க முடியாதுங்க

ராம :—ஐயோ ! செட்டியாரே ! கந்தசாமி பிள்ளையே ! கடைசியில் மோசம் செய்து விட்டீரே ! இதற்குத்தானு என்னை இவ்வளவு தூரம் விசாரித்தீர் ? வீணுக என்னை ஏன் அலைக்கழித்தீர் ? உம்மை நம்பித்தானே நான் வந்தேன். நீங்கள் இல்லையென்றுல் நான் எங்கே போவது ?

கா :—எங்கேயாவது போம். வீணுக இங்கே கத்தாதீர். ஏதாவது தங்க நகை கொண்டு வந்தால் பணம் கொடுக்கிறோம். போயிட்டுவாங்க. எங்களுக்கு சோலியிருக்குது.

(ராமநாதன் மிகுந்த ஏமாற்றத்துடனும் வருத்தத்துடனும் செல்கிறுன்.)

## காட்சி 3.

காலம் :—நடுப்பகல் 12மணி.

இடம் :—துரைராஜய்யர் வீடு.

[துரைராஜய்யரின் வீட்டுக் கூடத்தில் வைதீக காரியங்கள் முடிந்து சாப்பாட்டிற்கு இலை போடப்படுகிறது. இச்சமயத்தில் துரைராஜய்யர் வீட்டிற்கு எதிர்த்த வீட்டுத் திண்ணையிலுள்ள சில வைதீகர்கள் பின் கண்டவாறு பேசிக்கொள்கிறார்கள்.]

கணேச கனபாடிகள் :—ஓய்! சுப்பண்ணு தீக்ஷதரே! வாரும் சாப்பிடப்போகலாம். உள்ளே இலை போட்டாகிறது.

சுப்பண்ணு தீக்ஷதர் :—(ஜபம் செய்துகொண்டே) என்னங்காணும் சாப்பாடு, சாப்பாடுன்னு பறக்கிறீர். செத்தே இருமே! ஜபம் செய்துட்டு வறேன்.

க. க :—அடாடா! இப்ப சாப்பாட்டுக்கில்லாமே ஊரை விட்டு ஊர் எதுக்காக வந்திருக்கிறே?

சாம்பசிவ சாஸ்திரிகள் :—ஆமாம். கணேச கனபாடிகள் சொல்வது நியாயந்தான். ஊணுக்கு மிந்திக்கோ உழவுக்கு பிந்திக்கோங்கறுப்போல முத முதல்ல போயி நல்ல இடமா பாத்து உக்காறது தான் தேவலே.

சுப். தீ :—அதிருக்கட்டும் சாஸ்திரிகளே! உமக்கு எவ்வளவு வரும்படி வந்தது.

சா. சா :—ஏன் எட்டணு வந்தது.

சுப். தீ :—தேவலாமே உமக்கு. எங்களுக்கெல்லாம் ஆறணு தான் கிடைத்தது.

க. க :—அதுக்குத்தான் சொன்னேன், சீக்கிரம் சாப்பிடப் போகலாமென்று. வரும்படியில் இரண்டணு குறைந்த தற்கு சாப்பாட்டில் ஒரு கை பார்த்து ஈடு பண்ணிக் கொள்ளலாமே!

சுப். தீ :—சரி, சரி அப்படியானுல் வாரும் போகலாம்.

(மூவரும் எழுந்திருந்து துரைராஜய்யர் வீட்டிற்குள் போகிறுர்கள்.)

சமாராதனை சாப்பாடு நடக்கிறது. சபாபதியும் அங்கு வந்திருக்கிறுன். அவன் சிவராமய்யர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு சாப்பிடுகிறுன். சாப்பாடு முடிந் ததும் திண்ணையில் எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்படுகிறது. வைதீகர்கள் துரைராஜய்யரை ஆசீர் வதித்துவிட்டுச் செல்லுகிறுர்கள்.

சபாபதி :—(துரைராஜய்யரிடம்) நான் போயிட்டு வறேன் மாமா!

துரை :—என்னப்பா அவசரம்? சாப்பிட்ட கையோடயா போறது? செத்தே ஆஸ்வாசம் பண்ணிண்டு போயேன்.

சிவ:—சபாபதி! அதுக்குள்ளே ஆத்திலே என்ன காரியம்? இப்ப கிராமபோன் வைக்கப்போறது. இரண்டு பிளேட் கேட்டுட்டுப் போயேன்.

துரை :—ஆமாம். அப்பா! செத்தே இரு—. என்று சொல்லி விட்டு உள்ளே போய் கிராமபோன் பெட்டி யையும், பிளேட்டுகளையும் கொண்டு வந்து வைக்கிறுர்.

சிவராமய்யர் தனக்குப் பிடித்த இரண்டொரு பிளேட்டுகளை வைக்கிறுர். கிராமபோன் சப்தத்தைக் கேட்டதும் உள்ளே இருந்த ஜெயா திண்ணைக்கு வரு

கிறாள். சபாபதியைப் பார்த்து புன் சிரிப்புடன் "சாப் பிட்டாச்சா?" என்று கேட்கிறாள்.

சபா:—உம். உங்க அப்பாவோடதான் சாப்பிட்டேன்.

ஜெயா:—சமையலெல்லாம் எப்படி யிருந்தது?

சபா:—நன்னாத்தான் இருந்தது.

ஜெயா:—பொய் சொல்றே! அவியல் உப்பு கரிச்சுதே!

சபா:—ஆமாம். அவியலுக்கு ஒரு உப்பு கூடத்தான்.

ஜெயா:—அது ஏன் தெரியுமா? சமயல்காரங்கிட்டே எங்க மாமா வந்து அவியலுக்கு நிறைய உப்பு போடு, அப்பத்தான் ஒத்தரும் நிறைய தொட்டுக்க மாட்டா, எல்லார் கலத்திலேயும் கொஞ்சம், கொஞ்சம் பேருக்கு வைக்கலாம்னு சொன்னு.

துரை:—சிவராமய்யரே! பார்த்தீரா உமது பெண்ணின் குறும்பை!

சிவ:—(ஜெயாவிடம்) சீ கழுதை! என்ன தத்துப்பித் துன்னு பேத்தறே?

ஜெயா:—இல்லேப்பா! மாமா இதைச் சொல்றபோது நான் இரகசியமா கேட்டுண்டிருந்தேன்.

சிவ:—கிடக்கட்டும். போ உள்ளே!

ஜெயா:—என்னப்பா நான் மாத்திரம் கிராமபோன் கேக்கப் படாதா? நல்லதா ஒரு பிளேட் வையப்பா. அதை மாத் திரம் கேட்டுட்டுப் போறேன்.

சிவராமய்யர் 'சிந்தாமணி' சினிமாவில் அஸ்வத் தம்மா பாடின பாட்டொன்றின் பிளேட்டை வைக்கிறார். பிளேட் முடிந்ததும் ஜெயா உள்ளே போகிறாள். சபா பதி விடை பெற்றுக்கொண்டு தன் வீடு செல்கிறான்.

## அங்கம் 6—காட்சி 1.

காலம் :—மாலை 2 மணி.

இடம் :—கம்பளித் தேவனின் பாழ் வீடு.

[கம்பளித் தேவன் தன் தேக முழுவதும் கருப்புக்கம்பளியால் மூடிக் கொண்டிருக்கிறான். முகத்திற்கு ஒரு முகமூடி அணிந்திருக்கிறான். அவன் தன் அறையில் ஏதோ யோசனை செய்து கொண்டு உலாவுகிறான். இச்சமயத்தில் இரண்டு முரடர்கள் அங்கு வருகிறார்கள்.]

அவர்களில் வீரன் என்பவன் :—என்னங்க! எதுக்காக கூப்பிட்டீங்க? ஏதாவது வேட்டை உண்டுங்களா?

க. தேவன் :—வேட்டை யில்லாமே சும்மா கூப்பிடுவேனா? இன்னிக்கி நல்ல வேட்டை. தலைக்கு 100 ரூ. கிடைக்கும்.

சூரன் என்பவன்:—அப்படிங்களா! அது என்ன வேலைங்க, சொல்லுங்க! எப்பேர்ப்பட்ட வேலையாய் இருந்தாலும் செய்யறோங்க.

க. தேவன் :—முருங்கப்பேட்டை கிராமமுன்சீப் துரை ராஜய்யர் வீடு தெரியுமா?

வீரன் :—தெரியுங்க, மேலே சொல்லுங்க!

க. தேவன் :—அவங்க வீட்டிலே ஒரு பெண் இருக்கு. வயது பத்துதான் இருக்கும். ஜெயான்னு பேரு. அந்த பெண் வீட்டிலேந்து எப்பவாவது வெளியிலே வர சமயம் பாத்து எப்படியாவது பிடிச்சு இங்கே கொண்டு வந்து விடு! காரியம் ஜெயமானால் உங்களிருவருக்கும் 200 ரூ. கொடுக்கிறேன்.

சூரன் :—இது தானு பிரமாதம். இன்னிக்கி ராத்திரியே அந்தப் பெண்ணை கொண்டு வந்து விடறோம் பாருங்க!

(போகிறார்கள்.)

## காட்சி 2.

காலம் :—மாலை 4 மணி.

இடம் :—சுந்தரியின் வீடு.

[ராமநாதன் மன வருத்தத்துடன் கட்டிலில் அமர்ந்திருக்கிறான். பக்கத்தில் சுந்தரி கவலையோடு நின்றுகொண்டிருக்கிறாள். சிறிது தூரத்தில் சபாபதி சுவற்றில் சாய்ந்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். கையில் ஒரு புஸ்தகத்தை பிரித்து வைத்துக்கொண்டிருக்கிறான். படிப்பில் கவனஞ்செல்லாமல் ராமநாதனையும், சுந்தரியையும் பார்க்கிறான்.]

சுந் :—நாதா! ஒரு இடத்திலேயுமா கிடைக்கவில்லை.

ராம :—நான் என்ன செய்வது? என்னால் முடிந்தவரையில் பார்த்தாய் விட்டது. ஒருவரும் நம்மை நம்பி பணம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். அந்த செட்டியை நம்பியிருந்தேன். அவனும் கடைசியில் கையைவிரித்து விட்டான்.

சுந் :—ஐயோ! அப்படியானால் நாம் இப்பொழுது என்ன செய்வது?

ராம :—என்ன செய்வது. நான் வாரண்டில் பிடிபட்டு ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான். நீயும், உன் தம்பியும் அனாதரவாக தெருவில் நிற்க வேண்டியது தான்.

சுந் :—ஆ! அப்படியும் நடக்குமா? ஏழைகளுக்கிறங்கும் கடவுள் நம்மைக் கைவிடுவாரா?—என்று துக்கம் நெஞ்சடைக்கக் கூறி, கீழே மண்டி போட்டமர்ந்து தன்னிரு கைகளாலும் ராமநாதனின் இடையைத்தழுவி அவனது துடையில் தன் தலையை வைத்துக் கண்ணீர் வடிக்கிறாள்.

இதைக் கண்ட சபாபதி மனந்தாளாது, தன்னிருப்பிடத்தை விட்டெழுந்திருந்து ராமநாதனை நெருங்கி "அத்திம் பேரே! அத்திம் பேரே!! எனக்காக கடன் பட்ட உங்களை அந்த பிச்சுமணி வாரண்டில் பிடிக்க விட்டு விடுவேனு! எப்பாடு பட்டாவது பணம் பெற்று அவனது கடனை தீர்த்து விடுகிறேன். நீங்கள் கவலைப்படவேண்டாம் நேற்று சொன்னதுபோல் இது சிறு பிள்ளைத்தனப் பேச்சு என்றெண்ண வேண்டாம். நான் சொன்னபடி செய்யா விட்டால் என் பெயர் சபாபதியல்ல. இது சத்தியம்" என்று பட பட வென்று சொல்லி, விர்ரென்று வெளியே போகிறுன்.

## காட்சி 3

காலம் :—மாலை $4\frac{1}{2}$ மணி.

இடம் :—முருங்கப்பேட்டை ஆற்றங்கரை.

[வீட்டிலிருந்து கிளம்பிய சபாபதி தான் எங்கு செல்வதென்று எண்ணுமல் தன் கால் போன போக்குப் படியே ஆற்றங்கரையை அடைகிறுன். அங்கே படித்துறையில் அமர்ந்து சல, சல வென்றேடும் ஆற்று நீரைப் பார்த்த வண்ணம் யோசனையில் அமிழ்கிறுன்.]

சபா :—(தனக்குள்) ஆ, ஈசா! திக்கற்ற எங்களை இப்படியும் சோதனை செய்யலாமா? நாங்களோ ஏழை. எங்கே பணத்திற்குப் போவோம்? பாவி, என்னுலல்லவா என் அத்திம்பேர் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. வீட்டில் வீராப்பு பேசிக்கொண்டு வந்துவிட்டேனே! இப்பொழுது பணத்திற்கு எங்கே போவது? யாரைப் போய் பணம் கேட்பேன், என்னை நம்பி யார் கொடுப்பா?

ஒரு சமயம் தன் வண்டியில் ஏற்றிக்கொண்ட அந்த புண்ணியவானை கேட்கலாமா? சே! அவரிடம் கேட்டால் அவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்.—என்று பலவாறாக சொல்லிக்கொண்டு மனம் புழுங்குகிறான். பின் தன்னையுமறியாமல் "கடவுளே! இதற்கொரு வழியுமில்லையா?" என்று வாய்விட்டுக் கூறுகிறான்.

"எதற்கு? என்ன வழி வேண்டும்?" என்று கேட்டுக் கொண்டே அச்சமயத்தில் ஜெயா அங்கு வருகிறாள்.

சபா:—(திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து) ஜெயா! நீ எங்கு இங்கு வந்தாய்?

ஜெ:—மணி அஞ்சாகப் போறதே! ஆத்துலே பொழுது போகல்லே. வாய்க்காங்கரைப் பக்கம் போயிட்டு வரலாம்னு வந்தேன். ஆமாம், உன் முகம் ஏன் வாடியிருக்கு? நீ என்னமோ வழியில்லையான்னயே, அது என்ன?

சபா:—என் முகம் வாடியிருக்கா? அதெல்லாம் ஒன்றுமில்லை. இவ்வளவு நாழி நான் ஆத்துலே தூங்கிண்டிருந்தேன். இப்பத்தான் எழுந்துண்டு இங்கே வந்தேன்.—என்று சொல்லி தலையை மறு பக்கமாக திருப்பிக்கொண்டு, ஜெயாவுக்குத் தெரியாமல் முகத்தை துடைத்துக்கொள்கிறான்.

ஜெ:—இல்லை யில்லை. நீ ஏதோ மன வருத்தப்படறே. எனக்குத் தெரியக்கூடாதுன்னு மறைக்கப் பாக்கறே.

சபா:—அப்படித்தா னிருக்கட்டுமே! உன்னிடம் சொல்வதால் என் மன வருத்தம் தீருமா? இதெல்லாம் உனக்கென்னத்திற்கு? இப்படி உட்கார்! வேறு ஏதாவது பேசலாம்.

ஜே:—அதெல்லாம் முடியாது. நீ ஏன் வருத்தப்படறே, அதைச் சொல்லு!

சபா:—சொல்லித் தானாக வேண்டுமா? அப்படியானால் உட்கார்ந்து கொள். சொல்கிறேன்.

(ஜெயா சபாபதியின் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறாள்.)

சபா:—ஜெயா! எங்க அத்திம்பேர் பிச்சுமணி என்பவருக்கு 500-ரூ. கடன் கொடுக்கவேண்டும். அதை நாளேக்குள் கொடுக்காவிட்டால் பிச்சுமணி எங்கத்திம்பேர்மேல் கேஸ் போடுவார். பணமில்லாததால் எங்கத்திம்பேர் ஜெயிலுக்கு போகும்படியாகும்.

ஜே:—(நடுவில்) எங்கேயாவது பணம் பார்த்து கொடுக்கப்படாதோ?

சபா:—எங்கேயிருந்து பணம் கொடுக்கறது? நாங்களோ ஏழை! எங்களே நம்பி யார் பணம் கொடுப்பா? எங்கத்திம்பேர் எவ்வளவோ அலேஞ்சு பாத்தா. ஒத்தரும் கொடுக்கமாட்டேங்கரு. என்னுலேதானே எங்கத்திம்பேர் கஷ்டப்பப்படரு. அதனுலே எப்படியாவது நான் பணம் கொண்டுவரேன்னு ஆத்திலே சொல்லிவிட்டு வந்தவன், நேரே இங்கே வந்து எப்படி பணத்துக்கு வழி பண்றதுன்னு மன வருத்தப்பட்டுண்டுருந்தேன். ஒன்னும் தோனுததுனுலே 'கடவுளே! ஒரு வழியுமில்லேயா?" என்று என்னேயுமறியாமல் சொன்னேன். இதுதான் சமாசாரம்.

ஜே:—அடடா! நோக்கு இவ்வளவு கஷ்டமா? எங்காத்துலே எங்க சித்தம்மை என்னே வைவாளே, அதைத் தவிர வேற கஷ்டமில்லே.

சபா :—என்ன! உங்க சித்தம்மையா அந்த அம்மாமி? அன்னிக்கு வண்டியிலே வந்தது உங்கம்மா இல்லே!

ஜே :—இல்லேயே! எங்கம்மா நான் குழந்தையாயிருக்கிற போதே செத்துப்போயிட்டா. எங்க அப்பாவுக்கு இரண்டாவது ஆம்படையான்னு!

சபா :—அப்படியா, உங்க அப்பா பேரென்ன? உங்க ஊரு எந்த ஊரு ?

ஜே :—நோக்குத் தெரியாதா இன்னும். எங்கப்பா பேரு சிவராமய்யர். நாங்க சிறு மருதூரு. எங்களுக்கு காணி, வீடு, எல்லாம் அங்கே தானிருக்கு.

சபா :—இதுவரையில் எனக்குத் தெரியாது. இப்பத்தான் தெரிந்துகொண்டேன்—என்று சொல்லி சிறிது நேரம் மௌனமாக ஏதோ யோசனை செய்கிறான்.

ஜே :—என்ன யோசனை செய்யறே! பணத்துக்குத்தானே?

சபா : ஆம்.

ஜே :—நான் ஒன்னு சொல்றேன் கேப்பயா? கேட்டாக்கே நோக்கு பணம் கிடைக்கும்.

சபா :—நிஜமாகவா? உன்னால் என்ன முடியும்? நீ சிறுமி யல்லவா !

ஜே :—நான் சிறுமியாயிருந்தா என் யோசனையை கேட்கப் படாதா? நான் சொல்றபடி கேட்டா பணம் கட்டாயம் கிடைக்கும்.

சபா :—அப்படியானால் சொல்!

உடனே ஜெயா தன் கழுத்திலிருந்து 25-பவுன் பெறும்படியான தங்கச் சங்கிலியை எடுத்து சபாபதி

யிடம் நீட்டி "இந்தா, இந்த தங்கச் சங்கிலியை வாங்கிக்கோ. இதை போன வருஷம்தான் எங்கப்பா 25 பவுனுக்குப் பண்ணினு. இதை வித்து உங்க அத்திம்பேர் கடனை அடைத்து விடலாம்" என்று சொல்கிருள்.

சபா :—ஜெயா! என்ன இது? நீதான் சொல்லுகிருயா? வேண்டாம், வேண்டாம்! இந்த தங்கச் சங்கிலியை நீயே வைத்துக்கொள்!

ஜே :—ஏன் வேண்டாங்கறே! என்னைக்கண்டா நோக்குப் பிடிக்கலையா?

சபா :—இல்லை, ஜெயா! நீயோ பணக்காராத்துப் பெண். ஏழையான நான் இதை வாங்கிக்கொண்டா யாராவது ஏதேனும் நினைப்பார்கள். ஒரு சமயம் நோக்கு இதால் கஷ்ட மேற்பட்டாலும் ஏற்படும்.

ஜே :—அப்படியெல்லாம் ஒன்றும் பயப்படவேண்டாம். இதை கட்டாயம் நீ வச்சுக்கத்தான் வேண்டும்.

சபா :—ஆமாம். உங்காத்துலே நகை யெங்கேன்னு கேட்டா என்ன சொல்லுவே?

ஜே :—கெட்டுப் போயிடுத்துன்னு சொல்றேன்.

சபா :—அப்படி ஏன் செய்யவேண்டும்? வா, உங்கப்பா கிட்டே போவோம். அவர் கிட்டேயே சொல்லி இந்த நகையை எனக்குக் கொடுத்துவிடு.

ஜே :—ஐயோ! அப்படி யொன்றும் வேண்டாம். எங்க சித்தம்மைக்கு தெரிஞ்சா கொடுக்கப்படாதுன்னு தடுத்துப்புடுவ. இதை நீ பயப்படாமே வச்சுக்கோ. அதனுலே ஒரு தப்பும் வராது.

(சபாபதி தயக்கத்துடன் நகையை பெற்றுக்கொள் கிறான். அவனது முகத்தில் கவலைக்குறி மறைந்து பிரகாசம் உண்டாகிறது).

சபா :—ஜெயா! உன் அன்பே அன்பு. நீ வயதில் சிறியவ ளானாலும் குணத்தில் சிறந்து விளங்குகிறாய். உன் உதவியை என்றும் நான் மறக்கமாட்டேன்.

ஜெ :—அதிருக்கட்டும். எவ்வளவு நாழிதான் நாம் இங் கேயே உட்கார்ந்திருப்பது? இப்படி ஆற்றங்கரையோர மாக சிறிது தூரம் போவோம்.

சபா :— சரி, வா போகலாம்.

இருவரும் எழுந்திருந்து ஆற்றங்கரையோரமாக செல்கிறார்கள். சிறிது தூரம் செல்வதற்குள், இதுவரை யில் தாழைப்புதரில் ஒளிந்திருந்த இரண்டு முரடர்கள் இவர்களை நோக்கி ஓடிவருகிறார்கள். சபாபதி திடுக்கிட்டுப் பயந்து இரண்டடி பின் வாங்குகிறான். அடுத்த நிமிஷத் தில் முரடர்கள் தங்கள் கையிலிருந்த தடியால் சபாபதி யின் மண்டையில் அடிக்கிறார்கள். சபாபதி பொறிகலங்கி "ஐயோ! அப்பா!" என்று கதறி கீழே விழுகிறான். உடனே முரடர்கள் ஜெயாவின் கைகால்களை ஒரு கயிற் றால் கட்டி, வாயில் துணியடைத்து தாங்கள் கொண்டு வந்திருந்த சாக்கில் போட்டு மூட்டையாக கட்டி, தலையில் வைத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள்.

## அங்கம் 7—காட்சி 1

காலம்:—மாலை 6-மணி.

இடம்:—துரைராஜய்யர் வீட்டுத் திண்ணை.

[திண்ணையில் துரைராஜய்யரும், சிவராமய்யரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.]

சிவ:—துரைராஜா! எங்கே ஜெயா இன்னும் வரவில்லை? வாய்க்காலுக்குப்போய் ரொமப நாழியாய் விட்டதே.

துரை:—ஆம். அஸ்தமிச்சுப் போச்சே. குப்பனை விட்டு பார்த்துக்கொண்டு வரச் சொல்லுங்களேன்.

சிவ:—குப்பனைத்தான் மத்தியானமே ஊருக்கு அனுப்புச் சுட்டேனே! வயல் காரியத்தை பார்க்கும்படியா அனுப்புச்சேன். எங்கே, உன் தலையாறியைத்தான் கூப்பிடு?

துரை:—அவன் இங்கே எங்கே யிருக்கிறான்? குடிகாரப் பயல் குடிக்கவல்லவா போயிருக்கிறான். வாங்கோ நம்ப ரெண்டு பேருமா போய் பார்த்துண்டு வரலாம்.

(இருவரும் ஆற்றங்கரைக்கு செல்லுகிறார்கள்.)

## காட்சி I (a)

காலம்:—மாலை 6-மணி.

இடம்:—ஆற்றங்கரைக்கு போகும் வழி.

[அடிபட்டு கீழே விழுந்த சபாபதி ஜெயாவைக் காணுமல் திடுக்கிட்டு இதைப் பற்றி சிவராமய்யரிடம் தெரிவிக்க ஓடி வருகிறான். நடு வழியில், ஓடிவரும் சபாபதியைக் கண்ட சிவராம ஐயர் "சபாபதி! என்ன இவ்வளவு ஓட்டம்? வாய்க்காங்கரையில் ஜெயாவைக்கண்டாயா?" என்று கேட்கிறார்.]

சபா:—(திடுக்கிட்டு) ஜெயா ஆத்துக்கு வல்லையா? அவளைப் பற்றி விசாரிக்கத்தான் ஓடி வந்தேன்.

சிவ:—(பயத்துடன்) ஜெயா ஆத்துக்கு இன்னும் வரவில்லையே! அவளைக் காணுமென்று தானே நாங்கள் தேடிக்கொண்டு வருகிறோம். நீ சொல்வதைப் பார்த்தால் ஏதோ விபரீதம் நடந்திருப்பதாகவல்லவா தெரிகிறது. என்ன நடந்தது? உடனே சொல்!

சபா:—அப்படியானால் அந்த முரடர்கள் அவளைத் தூக்கிக்கொண்டு போய் விட்டார்களோ என்னவோ தெரியவில்லையே!

துரை:—என்னடா உளறுகிறாய்? எந்த முரடர்கள் அவளைத் தூக்கிக் கொண்டு போனார்கள்? ஆடு திருடின குறவன் போல் பேந்த பேந்த முழிக்கிறாயே! வாய்க்காங்கரையில் என்ன நடந்ததென்பதை விபரமாகச் சொல்லேண்டா?—என்று சொல்லி சபாபதியின் தோளைப் பிடித்து குலுக்குகிறார்.

அச்சமயத்தில் அவனது மடியிலிருந்து தங்கச் சங்கிலி நழுவி விழுகிறது. சிவராமய்யரும் துரைராஜ ஐயரும் சங்கிலியைக் கண்டு ஆச்சர்யமடைகின்றனர். சபாபதி ஒன்றும் புரியாமல் முழிக்கிறான்.

சிவ:—(சங்கிலியை கையில் எடுத்துக்கொண்டு) சபாபதி! இச் சங்கிலி ஜெயாவுதுன்னா! இது எப்படி உன்னிடம் வந்தது? ஜெயா எங்கே?

சபா:—மாமா இச் சங்கிலியை பார்த்து விட்டு என் மேல் வீண் சந்தேகம் கொள்ள வேண்டாம். நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன். மாலை 5-மணி சுமாருக்கு நான் ஆற்றங்கரையில் மன வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தேன். அச் சமயத்தில் ஜெயா அங்கு வந்தாள். என் மன வருத்தத்திற்கு காரணம் என்னவென்று கேட்டாள். என் அத்திம்பேர் என்னால் கடன் பட்டு அவஸ்தைபடுவதாவும், அதைத் தீர்க்க என்னிடம் பணமில்லாததால் வருத்தப் படுவதாகவும் சொன்னேன். அதனால் என்னிடம் இரக்கங் கொண்ட ஜெயா இந்த நகையை எனக்குக் கொடுத்து, என் கடனை

அடைக்கச் சொன்னாள். பின் நாங்களிருவரும் ஆற்றங்கரை யோரமாக உலாவச் சென்றோம். சிறிது தூரம் சென்றிருப்போம். அச்சமயத்தில் என் தலையில் யாரோ இரண்டு முரடர்கள் தங்கள் கையிலிருந்த தடிகளால் அடித்தார்கள். அப்படியே நான் கீழே விழுந்துவிட்டேன். அவ்வளவு தான் எனக்குத் தெரியும். பின் எழுந்திருந்து பார்த்தபோது அஸ்தமித்திருந்தது. பக்கத்தில் ஜெயாவைக்காணோம். ஆத்துக்கு அவள் போய்விட்டாளா அல்லது அந்த முரடர்கள் தூக்கிக் கொண்டு போய் விட்டார்களா என்று எனக்குத் தெரியவில்லை. எதற்கும் உங்களிடம் இதைப் பற்றி தெரிவிப்போம் என்று ஓடி வந்தேன்

சிவ:—ஐயோ! அப்படியா? என் ஜெயா போயிட்டாளா? எந்தப் பாவிகள் என் ஜெயாவை தூக்கிக் கொண்டு போனார்களோ தெரியவில்லையே! என் ஜெயா யாருக்கு என்ன கெடுதல் செய்தாள்? ஏ, ஈசா! உனக்கு கண்ணில்லையா? என் அருமைப் பெண்ணை பிரிந்து எப்படி நான் உயிர் வாழ்வேன்—என்று புலம்பலானார்.

துரை:—என்ன மாப்பிள்ளை! அந்த வாண்டுப் பயல் கட்டிவிட்ட கதையைக் கேட்டு ஏமாந்து கதறுகிறீரே? கேழ்வரகில் நெய் ஒழுகுகிறதென்றால் கேட்பாருக்கு மதி யில்லையா? இந்தப் பயல் தான் ஜெயாவை ஏதோ செய்திருக்கிறான்.

சபா:—ஐயோ! என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை யில்லையா? நான் சொல்வதெல்லாம் நிஜந்தான்.

துரை:—எலே! யாரிடம்டா கதையளக்கிறாய்? மரியாதையாக உண்மையைச் சொல்லிவிடு? ஜெயாவை என்ன

செய்தாய்? உங்க அத்திம்பேர் கடனை அடைக்க் ஜெயாவின் சங்கிலி தான் அகப்பட்டதோ?

சபா:—ஐயோ, மாமா! வீணாக என் மேல் பழி சுமத்தாதீர். ஜெயாவைப் பற்றி இதற்கு மேல் எனக்கொன்றுமே தெரியாது.

துரை:—பயலே! மரியாதையாக உண்மையைச் சொன்னால் போச்சு. இல்லாவிட்டால் உன்னை போலீஸில் பிடிச்சுக்கொடுப்பேன். என்னை யாருன்னு நினைச்சே? நான் இந்த ஊர் கிராம முன்சிபாக்கும்.

இது வரையில் ஒன்றும் தோன்றாமல் நின்று கொண்டிருந்த,

சிவ:—துரைராஜா! வேண்டாம். சிறு பயல் அவன் என்னத்தைக் கண்டான்; விட்டு விடு. ஒரு சமயம் அவன் சொன்னது நிஜமாயிருந்தாலும் இருக்கும். நாம் ஜெயாவைத்தேட வழி பார்ப்போம், வா!

துரை:—என்ன! நீங்க இப்படிச் சொல்றேள்? இந்தக் காலத்திலே ஒத்தரையும் நம்பக்கூடாதுன்னு. எனக்கென்னமோ இந்தப் பயல் பேரிலே சம்சயம்தான். நீங்க என்ன சொன்னாலும் இவனை நான் விடப் போறதில்லே.

இச் சமயத்தில் தாண்டவராயன் அங்கு குடி வெறியில் வருகிறான்.

தாண்:—என்னுங்க புள்ளையைக் காணுமாமே! வீட்டுக்குப் போனேனுங்க. புள்ளையைத் தேடிக் கிட்டு ஆத்தங்கரைக்குப் போயிருக்காங்கன்னு சொன்னாங்க. அதுக்குத்தானுங்க வந்தேன்.

துரை:—ஆமாடா குடிகாரா! குடிக்கப்போனு எவ்வளவு நாழிடா? சீக்கிரம் குடி தெருவுக்குப் போய் நாலு ஆளை லேட்டோட கூட்டிட்டுவா. இந்தா, முதலிலே இந்தப் பயலை பிடிச்சு நம்ப வீட்டு திண்ணைத் தூணுலே கட்டிவை.

(துரைராஜய்யரும், தாண்டவராயனும் இரகசியமாக ஒருவருக்கொருவர் கண்ணைச் சிமிட்டிக் கொள்கிறுர்கள். தாண்டவராயனும் கர கரவென்று சபாபதியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகிறுன்.)

துரை :—(சிவராமய்யரிடம்) வாங்கோ, ஆத்துக்குப் போகலாம். இங்கே என் வீணுக நிற்கவேண்டும். நான் ஆள்களை அனுப்பி ஜெயாவை தேடச் செய்கிறேன். கவலைப்படாதீர்கள்.

சிவ :—துரைராஜா! என் கண்மணியைப் பிரிந்து எப்படியடா நானிருப்பேன். சீக்கிரம் உன் ஆட்களைக் கொண்டு தேடச் செய்யேன். எதற்கும் வாய்க்காங்கரைப் பக்கம் பார்த்துவிட்டு வருகிறேன்.

துரை :—சரி, நானும் வருகிறேன் வாங்கோ?

(இருவரும் போகிறுர்கள்)

## காட்சி 2.

காலம் :—மாலை $6\frac{1}{2}$ மணி.

இடம் :—முருங்கப் பேட்டையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் ரோட்.

[ஜெயாவை தூக்கிக்கொண்டுபோன முரடர்களிருவரும் வீரனும், சூரனும்தான். சிறிது தூரம் குறுக்குப்பாதையாக வயல்களின்

வழியாக ஓடி, பின் ரஸ்தாவை அடைகிறார்கள். அச்சமயம் நன்றாக இருட்டிவிட்டது. ரஸ்தாவில் அதிக நடமாட்டமில்லை. முருங்கப் பேட்டையிலிருந்து நான்கு மைல் தூரம் வந்திருப்பார்கள்.]

சூரன்:—(தலையில் சாக்கு மூட்டையை வைத்துக்கொண்டு) வீரா! நீயும் நானுமாத்தானே மாத்தி மாத்தி தூக்கிட்டு வறோம். அப்படியும் இந்த நாலுமைல் வரத்துக்குள்ளே கழுத்தெல்லாம் வலிக்குதே! இன்னும் நாலுமைல் தூரம், எப்படிடா இந்தக் குட்டியைத் தூக்கிட்டுப் போறது?

வீரன்:—ஏண்டா இப்படி கஷ்டப்படணும்? இதோ கன்னியப்பஞ்சாவடி வந்துடுத்து. அங்கேயிருக்கிற ஆல மரத்து பொந்துலே இந்த மூட்டையை வப்போம். அதோ கூப்பிடு தூரத்திலே இருக்கிற கள்ளுக் கடைக்குப் போயி ஆளுக்கு ரெண்டு புட்டி போடுவோம் வா. அப்புறம் மைல் பத்தில்லே, இந்த மூட்டையை கஷ்டமில்லாமே தூக்கிட்டுப் போகலாம்.

சூரன்:—ஆமாடா! நீ சொல்றதுதான் சரியான ரோசனை. ஆனா, இந்த மூட்டையை ஒத்தரும் தொடமாட்டாங்களே!

வீரன்:—அதெல்லாம் ஒத்தரும் தொடமாட்டான். எவன் இந்த இருட்டு வேளையிலே இங்கு வரான்.

இப்படி பேசிக்கொண்டே இருவரும் கன்னியப்பஞ் சாவடி என்று சொல்லப்படும், ரஸ்தாவிற்கு சமீபத்தி லுள்ள, புராதனமான இடிந்து கிடக்கும் பாழுஞ் சாவடியை அடைகிறார்கள். அங்கேயுள்ள பிரும்மாண்ட மான ஆலமரத்தின் பொந்தில் மூட்டையை வைத்து விட்டு, கள்ளுக்கடையை நோக்கி செல்லுகிறார்கள்.

இதையெல்லாம் தற்செயலாக கள்ளுக்கடைக்குப் போக வந்த கந்தன் ஒளிந்திருந்து கவனிக்கிறான். வீரனும், சூரனும் சென்றதும் அவர்கள் வைத்துவிட்டுபோன மூட்டையில் என்ன இருக்கிறது என்றறிய ஆவல் கொண்டு மூட்டையை எடுக்க கந்தன் ஆலமரத்தை அடைகிறான்.

## காட்சி 3.

காலே :—இரவு 7 மணி.

இடம் :—துரைராஜய்யர் வீடு.

[துரைராஜய்யர் வீட்டுத் திண்ணையிலுள்ள தூண் ஒன்றில் சபாபதி கயிற்றால் கட்டப்பட்டிருக்கிறான். அவனது கண்களில் நீர் ஆறாகப்பெருகுகிறது. அவனைச்சுற்றிலும் ஒரு சிறு கும்பல். தாண்டவராயன் கையில் ஒரு தடியோடு பக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறான். சிவராமய்யர் ஏக்கத்தோடு குட்டித்திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவருக் கெதிர்த்தாற்போல் பெரிய திண்ணையில் துரைராஜய்யர் உட்கார்ந்திருக்கிறார். தன் மச்சுனன் செய்கையைக் கேட்டு மனம் பதறி ராமநாதன் அங்கு வந்து சபாபதியைக் கண்டபடி கோபித்துக்கொள்கிறான்.]

ராம :—சபாபதி! ஏண்டா உன் மனம் இப்படி போக வேண்டும்? இது நாள் வரையில் ஒழுங்காய் இருந்தாயே! இப்பொழுது ஏன் இந்த திருட்டுப்புத்தி தோன்றிற்று? இதற்குத்தான் நான் எப்படியாவது பணம் கொண்டு வருகிறேன் என்று சொன்னாயோ? போயும் போயும் அந்த பெண்ணின் சங்கிலியைத் திருட எப்படியடா மனம் துணிந்தது? ஆமாம். அந்தப் பெண்ணை என்ன செய்தாய்? உண்மையைச் சொல்லிவிடு!

சபா :—ஐயோ, அத்திம்பேரே! தாங்களுமா என்னை சந்தேகிக்கிறீர்? உண்மையில் நான் ஒரு பாபத்தையும்

அறியாதவன். ஜெயாதான் எனக்கு அந்த சங்கிலியைக் கொடுத்தாள். இப்பொழுது ஜெயா இருந்தால் நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிப்பேன். வெய்யிலில் கஷ்டப்பட்ட என்னை தன் வண்டியில் ஏற்றிக்கொண்ட அந்த மஹானுபாவரின் பெண்ணுக்கா கெடுதல்செய்வேன்.

துரை:—ஆமாடா! நீ மகா யோக்கியன்தான். வாயை மூடுடா! எல்லாம் போலீஸ்காரர்கள் நாளைக்கு வந்தால் உண்மையை கக்குகிறாய்.

சிவ:—துரைராஜா! வேண்டாம்டா. அந்த பையனை விட்டுடு. பார்த்தால் பரிதாபமாயிருக்கு. வீணாக அவனை ஏன் வருந்தச்செய்யவேண்டும்? அதனால் ஜெயா வந்துவிடப்போகிறாளா? எனக்கேற்க அப்பையன் குற்றம் செய்தவனாகக் காணப்படவில்லை.

துரை:—நீங்க செத்தே பேசாமே இருங்கோன்னா! உங்களுக்கொன்றும் தெரியாது — என்று சொல்லிக் கொண்டிருக்கையில் இரண்டு ஆட்கள் அங்கு வந்து "சாமி நாங்க எல்லா இடமும் தேடிப்பார்த்தாச்சுங்க. ஒரு இடத்திலேயும் புள்ளையைக்காணுங்க." என்கிறார்கள்.

சிவ:—என்ன! ஒரு இடத்திலுமாயில்லை. இதென்ன மாயம்? ஐயோ! ஜெயா நீ எங்கே இருக்கிறாய்? எந்த மஹாப் பாவிகளிடம் சிக்கி அவதிப்படுகிறாயோ தெரியவில்லையே! ஆ, ஜெகதீசா! உமக்கு என்மேல் கருணையில்லையா? இன்னுமா என்னை சோதிக்கவேண்டும்? திருப்பதி வெங்கடாஜலபதி! என் கண்மணி ஜெயாவை உயிருடன் கொண்டு வந்துவிட்டால் உன் மலைக்கு வந்து

அபிஷேகம் செய்து வைக்கிறேன்,—என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி புலம்பலானார்.

இச்சமயத்தில் உள்ளேயிருந்த மீனாக்ஷியம்மாள் ரேழி வாசற்படிக்கு சமீபத்தில் வந்து நின்றுகொண்டு "என்ன அண்ணா! பாத்திண்டிருக்கேளே! அவாளை சமாதானப் படுத்துங்கோ! இன்னும் நாலு ஆளை அனுப்பிச்சு நன்னா தேடிப் பாக்கச் சொல்லுங்கோ! எங்கண்மணி ஜெயா சித்தம்மை, சித்தம்மைன்னு எங்கிட்டே உசிரை விட்டுண்டிருந்தாளே! அவ இல்லாமே எனக்கு இனிமே எப்படி ஆத்துலே காரியம் ஓடும்?" என்று கூறுகிறாள். கண்ணில் நீலிக் கண்ணீர் வருகிறது.

துரை:—நீங்க வாங்கோ உள்ளே போகலாம். வீணாக மனசை ஏன் அலட்டிக்கிறேள்? கவலைப்படாதேங்கோ. நான் எப்படியாவது ஜெயாவை கண்டு பிடிக்கிறேன். நாளைக்கு போலீஸிலேயும் எழுதிவைக்கிறேன்.—என்று சொல்லிவிட்டு அங்கே வந்திருந்த இரண்டு ஆட்களையும் பார்த்து "ஏ முருகா! சப்பாணி! நீங்க ரெண்டுபேருமாக இன்னும் ரெண்டு ஆளைக் கூட்டிட்டு இன்னொரு தரம் நல்லா சுத்திப்பாத்துட்டு வாங்கடா!" என்று கூறுகிறார். பின் வலுக்கட்டாயமாக சிவராமய்யரை உள்ளே அழைத்துக்கொண்டு போகிறார். சிறிது சிறிதாக கும்பல் கலைகிறது.

ராமநாதன் "சபாபதி! நான் என்ன செய்வது? உன் தலைவிதியை நீ அனுபவிக்கத்தானே வேண்டும். 'இளங் கன்று பயமறியாது' என்பதுபோல் சிறுபிள்ளைத்தனமான காரியத்தைச் செய்துவிட்டு ஏன் மாட்டிக் கொண்டாய்? தெய்வந்தான் உனக்கு உதவி புரியவேண்

டும்.'' என்று மன வருத்தத்துடன் கூறிவிட்டு செல்கிறான்.

## காட்சி 2, (a)

காலம் :—இரவு 7-மணி,

இடம் :—கன்னியப்பஞ்சாவடி.

[தஞ்சாவூர் தாசி ரமணியின் வேலைக்காரனான கந்தன் சாக்கு மூட்டையை ஆவலுடன் பிரிக்கிறான். அதில் ஒரு பெண் பிரக்ஞையற்று கயிற்றால் கட்டப்பட்டிருப்பதைக்கண்டு ஆச்சர்யமடைகிறான். "அடேடே! பொண்ணை பாத்தா சோக்காயிருக்கே. நம்ப தாசி ரமணியம்மாகிட்டே கொண்டுபோய் விட்டா என்ன சந்தோசப்படுவாங்க. பொண்ணு பேருலே அஞ்சாறு நகைகூடயிருக்கே." என்று சொல்லிக்கொண்டே ஜெயாவை தூக்கிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு கிளம்புகிறான். அச்சமயத்தில் அங்கே ஒரு ஆட்டுக்குட்டி 'மே! மே!' என்று கத்திக்கொண்டு வருகிறது. ஆட்டுக்குட்டியைம் பார்த்ததும் கந்தன் மனதில் பளிச்சென்று ஒரு யோசனை உதிக்கிறது. அதன்படி அவன் ஜெயாவை கீழே வைத்துவிட்டு ஆட்டுக்குட்டியைப் பிடித்து அதன் கால்களையும், வாயையும் ஜெயாவைக் கட்டியிருந்த கயிற்றால் இருகக்கட்டி சாக்கில் போட்டு முன் மாதிரி அது இருந்த விடத்தில் மூட்டையாக வைத்துவிடுகிறான். பின் ஒரு நிமிஷமும் அங்கு தாமதிக்காமல் ஜெயாவை தூக்கிக்கொண்டு தஞ்சாவூர் திசையில் ஓடுகிறான். அரை மைல் தூரம் சென்றதும், ரஸ்தாவிற்கு பக்கத்திலிருந்த ஆற்றங்கரையில் ஜெயாவைக்கிடத்தி சிறிது தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்து மூர்ச்சயை தெளிவிக்கிறான்.]

ஜெ :—(படுத்தவண்ணம் கண்களை திறந்து பார்த்து.) குப்பா நீயா? நான் எங்கே இருக்கிறேன்? அந்த முரடர்கள் எங்கே?

கந்:—நான் குப்பன் இல்லை. குப்பனுக்கு வேண்டியவன் தான். அந்த முரடர்களிடமிருந்து உன்னைவிடுவித்துக் கொண்டு வந்துவிட்டேன். சீக்கிரம் எழுந்திருந்து என்னோடு வா. நான் உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். இல்லாவிடில் அந்த முரடர்கள் மறுபடியும் உன்னைப் பிடிக்கவந்தாலும் வந்துவிடுவார்கள்.— என்று சொல்லவே மிகவும் பயந்துபோன ஜெயா மெதுவாக எழுந்திருந்து கந்தனின் கையைப் பிடித்துக்கொள்கிறாள். இருவரும் ரஸ்தாவில் செல்லுகிறார்கள்.

(வழியில் ஒரு ஆட்டிடையன் சந்திக்கிறான்.)

இடையன்:—அண்ணே! இந்தப் பக்கம் ஏதாவது ஆட்டுக்குட்டியை பாத்தியா? மந்தையிலேந்து தப்பி ஓடி வந்திடுச்சு. ரெண்டு நாளியா தேடறேன் ஆப்படலே!

கந்:—ஓஹோ! உன் ஆட்டுக்குட்டியா அது? அரை மைல் தூரத்திலே ரெண்டு ஆளுங்க ஒரு ஆட்டுக்குட்டியை சாக்குலே போட்டுக்கொண்டு போகிறார்கள். சீக்கிரம் ஓடிப்போய் பாரு.

"அப்டீங்களா? நல்லவேளையா சொன்னீங்களே!" என்று கூறிவிட்டு ஓடுகிறான் இடையன்.

(கந்தன் ஜெயாவுடன் தன் வழியில் செல்கிறான்)

ஆட்டிடையன் கன்னியப்பஞ் சாவடியை அடைவதும், வீரனும் சூரனும் கள்ளுக்கடையிலிருந்து திரும்பி வந்து மூட்டையை எடுத்து தலையில் வைத்துக்கொண்டு கிளம்புவதும் ஒரே சமயமாயிருந்தது. இடையனைக் கண்டதும் வீரனும், சூரனும் ஓட ஆரம்பிக்கிறார்கள். இடையன் குப்பன் சொன்ன ஆட்கள் அவர்கள் தானென அறிந்து "டேய், பசங்களா! மரியாதையாக குட்டியை கொடுத்

துடுங்க. இல்லாட்டி உங்களை லேசுலே விடமாட்டேன்.'' என்று சொல்லிக் கொண்டே வீரனையும் சூரனையும் விரட்டுகிறான். ஜெயாவை தேடிக்கொண்டுதான் அந்த ஆள் வந்திருக்கிறான் என்றெண்ணி மிகுந்த பயத்துடன் வீரனும், சூரனும் முன்னிலும் அதிக வேகத்துடன் ஓடுகிறார்கள். இப்படியாக சிறிது நேரம் துரத்தி சென்ற பின் இடையன் களைத்துப்போய் நின்று விடுகிறான். சூரனும், வீரனும் குறுக்குப்பாதைகளில் விழுந்தடித்துக்கொண்டு ஓடி, கடைசியாக தப்பித்துக்கொண்டு விடுகிறார்கள்.

## காட்சி 3 (a)

காலம் :—இரவு மணி $7\frac{1}{2}$

இரவு :—துரைராஜய்யர் வீடு.

[சபாபதி தூணில் கட்டப்பட்டிருக்கிறான். பக்கத்தில் தாண்டவராயன் காவலுக்காக நின்றுகொண்டிருக்கிறான். வேறு ஒருவரும் இல்லை. குடி வெறி அதிகமாகப்போய் நிலை தடுமாறிக்கொண்டிருக்கிறான் தாண்டவராயன். போலீஸாரிடம் ஒப்புவிக்கப்பட்டால் தான் அவமானமடைய நேரிடுமென்றெண்ணிய சபாபதி, தான் தப்பிச் செல்ல இதுதான் சமயமென்று கருதுகிறான். உடனே பின்கட்டுமுறையாக கட்டப்பட்டிருந்த கயிற்றை தூணில் மேலுங் கீழுமாக உறைக்கிறான். தூண் கருங்கல்லானதால் கயிறு தேய்ந்து போய் கட்டு அவிழ்கிறது. விடுவித்துக்கொண்ட கைகளால் கால் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு, தாண்டவராயனை ஒரு காலால் உதைத்து கீழே தள்ளிவிட்டு, எடுக்கிறான் ஓட்டம்! இச்சமயத்தில் ஜெயாவை தேடிவிட்டு வந்த ஆட்கள் (உண்மையில் தேடவே இல்லை) சபாபதி கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்து "அடேடே! பையன் கயத்தை அறுத்துண்டு ஓடறாண்டா. விடாதே! பிடி! பிடி!" என்று கூக்குரலிட்டுக்கொண்டு சபாபதியை துரத்துகிறார்கள்.

இந்த சப்தத்தைக் கேட்டு உள்ளே இருந்த துரைராஜய்யர் வெளியே ஓடி வந்து சமாசாரத்தையறிந்து கீழே விழுந்து கிடந்த தாண்டவராயனை "டேய், தாண்டவராயா! தடிப் பயலே எழுந்திருடா." என்று விசிறிக் கட்டையால் தட்டி எழுப்பி, "குடிகாரப்பயலே! ஏண்டா அந்த புள்ளேயைத் தப்பவிட்டே?" என்று கேட்டுக் கொண்டே விசிறிக் கட்டையால் அடிக்கிறார்.

"இல்லீங்க சாமி! இனிமே குடிக்கலீங்க." என்று அடி பொறுக்க முடியாமல் உளறுகிறான் தாண்டவராயன். "என்ன? என்ன?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே யிருந்து வருகிறார் சிவராமய்யர்.]

துரை:—பாத்துண்டேளா அந்த பையனின் போக்கிரித் தனத்தை! என்னமோ சொன்னேளே குற்ற மற்றவனென்று. இப்ப பாரும் சபாபதி தப்பிச்சுண்டு போனதை! ஒரு குற்றமும் செய்யாவிட்டால் இப்படி பயந்துண்டு ஓடுவானா?

சிவ:—என்னமோ! யாரப்பா கண்டா? எல்லாம் ஈசுவரனுக்குத் தான் வெளிச்சம். எப்படியாவது என் கண்மணி ஜெயா திரும்பி வந்தால் அதுவே போதுமானது. சபாபதியை துரத்திச் சென்ற ஆட்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பி வந்து "சாமி! அந்த புள்ளே சிட்டா பறந்து ஓடிப்போயிடுச்சிங்க. எங்களாலே பிடிக்க முடியலீங்க" என்று சொல்லுகிறார்கள்.

"சரி, சரி. போங்கடா! அந்த சிறு பிள்ளேயை பிடிக்க முடியாமல் நீங்களும் ஒரு ஆளுன்னு வந்து நிக்கிறீங்களே!" என்று எரிந்து விழுந்துவிட்டு சிவராமய்யரோடு உள்ளே போகிறார் துரைராஜய்யர்.

காலம்:—இரவு 8½ மணி.

இடம்:—தஞ்சாவூரில் கம்பளித்தேவனின் அறை.

[மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க வீரனும், சூரனும் சாக்கு மூட்டையைக் கொண்டு வந்து கம்பளித்தேவனுக்கு முன்னால் வைக்கிறார்கள்.]

க. தேவன்:—பலே, தேவலாமே! சொன்னால் சொன்னபடி கொண்டு வந்து விட்டீர்களே.

வீரன்:—சூரன், வீரன்னு சும்மாத்தானுங்களா எங்க பேரு. இன்னிக்கி ரொம்ப கயிட்டப்பட்டு இந்த குட்டியைக் கொண்டு வந்திருக்குங்க, இதுக்கு இன்னும் 100 ரூ. சேத்துக் கொடுக்கனுங்க.

சூரன்:—போரும் போறுததற்கு அவங்க வீட்டு ஆளு ஒத்தன் எங்களை புடிக்க வந்துட்டானுங்க. அவங்கிட்டேந்து தப்புச்சுக்கிட்டு வரத்துக்குள்ளே எம்பாடு ஓம்பாடு ஆயிடுத்துங்க.

க. தேவன்:—சரி, மூட்டையை அவுங்க பார்க்கலாம்.

சூரனும், வீரனும் மூட்டையை அவிழ்க்கிறார்கள். அதில் எதிர்பாராத விதமாக ஒரு ஆட்டுக்குட்டி இருப்பதைப் பார்த்து அப்படியே திகைத்துப்போய், ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு முழிக்கிறார்கள். இதைப் பார்த்துக் கோபங்கொண்ட கம்பளித் தேவன் "மடையர்களே! உங்களை ஆட்டுக்குட்டியையா கொண்டு வரச் சொன்னேன்? எங்கேடா அந்தப் பெண்? மூடர்களே! இதென்ன கேலிக்கூத்து? என் முன் நில்லாதீர்கள்! தொலையுங்கள் வெளியில்!" என்று சொல்லி இருவர் தலை மயிரையும் பிடித்து ஒருவன் தலையோடு மற்றவன் தலையை முட்டி வெளியே பிடித்துத் தள்ளுகிறான்.

# அங்கம் 8—காட்சி 1.

காலம்:—காலை மணி-7

இடம்:—மாங்குடி கிராமத்தில் வயல் வெளி.

[தன்னை துரத்தி வந்த ஆட்களை பலவித தந்திரங்கள் செய்து ஏமாற்றிவிட்டு தப்பி வந்த சபாபதி, தான் எங்கு செல்வதென்று தெரியாமல் தன் கால்கள் போன போக்குப்படியே குறுக்கே வயல் பாதையில் சென்று கொண்டிருக்கையில் மாங்குடி என்ற கிராமத்தின் எல்லைக்குள்ளிருந்த வயல் ஒன்றில் கல் தடுக்கி அப்படியே வரப்பில் விழுந்து விடுகிறான். வயிற்றுக்கு ஆகாரமில்லாததாலும், வெகு தூரம் ஓடிவந்த படியாலும் களைத்துப்போன அவன், தன் ஸ்மரணையை யிழந்து அங்கேயே படுத்துக்கிடக்கிறான். மறு நாள் காலையில் சூரிய கிரணங்கள் அவன்மேல் பட்டும் எழுந்திருக்க வில்லை. அச்சமயம் வயல் வேலை செய்ய வந்த சில ஆதிதிராவிடர்கள் பின் வருமாறு பேசிக் கொள்கிறார்கள்.

முதலில் சபாபதியைக் கண்ட ஒருவன், வயலின் மற்ற பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்களை கூப்பிட்டு "அண்ணே, அண்ணே! ஓடியாங்கோ. இந்த புள்ளையை வந்து பாரு!" என்கிறான். உடனே மற்றவர்களும் கிட்டே வந்து பார்க்கிறார்கள்.]

ஒருவன்:—ஏ, அண்ணே! இந்த புள்ளை யாரு அண்ணே? இந்த வயக் காட்லே இப்படி வந்து படுத்திருக்கே.

இரண்டாவன்:—பொளுது விடிஞ்சு மூணு நாளியாகியும் இன்னும் இந்த புள்ளை தூங்கிட்டு கிடக்கே. எளுப்பு அண்ணே யாருன்னு கேக்கலாம்.

மூன்றாவன்:—(ஒருவரும் எளுப்பாமல் இருப்பதை பார்த்துவிட்டு,) ஏண்டா கருப்பா! நீ தான் எளுப் பேண்டா.

கருப்பன்:—என் அண்ணே! புள்ளேயைப் பாத்தா பாப்பார புள்ளே யாட்டமா இருக்கே, நானு தொடலாமா?

சுடலே:—தொட்டா என்னடா?

கருப்பன்:—ஏய்! அப்படிச் சொல்லாதேடா. என்ன பாவம் பண்ணியோதான் நாமெல்லாம் இந்த சாதியிலே பொறந்து கயிட்டப் படறமே. பாப்பார புள்ளேயைத் தொட்டு அந்த பாவத்தை வேறு கட்டிக்கனுமா?

சுடலே:—ஏய்! அதெல்லாம் ஒங்க பாட்டன் காலம். இப்பத்தான் காங்கிரசுக்காரங்க வந்து எல்லாரையும் ஒன்ணுக்கருங்களேடா. பாவமாவது சீவமாவது. அதுவும் ஆவத்துக்கு பாவமில்லேடா.

கருப்பன் கையால் தொட மனம் வராமல் கையிலிருந்த குச்சியால் "சாமி, சாமி! யாரு சாமி? எளுந்திரு சாமி" என்று தட்டி எழுப்புகிருன். சபாபதி கண்ணை முழித்துப் பார்க்கிருன். தன்னைச் சுற்றி சிலர் நின்று கொண்டிருப்பதையும், சூரியன் உதித்து வெகு நேரமாகி யிருப்பதையும் கண்டு எழுந்திருக்கிருன்.

அதே சமயத்தில் "என்னடா கருப்பா! வயல் காரியம் அப்படியே கிடக்கு, நீங்க பாட்லே அங்கே கூடிகிட்டு வம்பு பேசறீங்களே!" என்று கேட்டுக் கொண்டே 60 வயது மதிக்கக்கூடிய வெங்கட்டராமையர் என்னும் பிராமணர் ஒருவர் அங்கே வருகிருர்.

"டேய், எசமாண்டா! எட்டி நில்லுங்கடா. எல்லாரும் பேசாமே இருங்கடா." என்று சொல்லி எல்லோரும் எட்டி விலகி நிற்கிருர்கள்.

கிட்டே வந்து சபாபதியைப் பார்த்த வெங்கட்டராம ஐயர் "யாருடா இந்தப் பையன்? இப் பையன் இங்கே எங்கே வந்தான்?" என்று கேட்கிறார்.

கருப்பன்:—தெரியலீங்க! நாங்க வயலுக்கு வந்த போது இந்த புள்ளை வரப்புலே படுத்து கிடந்ததுங்க. யாருன்னு தெரிஞ்சுக்கத்தான் இப்ப எளுப்பினேனுங்க.

வேங்:—"அப்படியா?" என்று கூறி விட்டு, சபாபதியை நோக்கி "நீ யாரப்பா? இந்த வயக்காட்டில் வந்து படுத்திருப்பானேன்?" என்று கேட்கிறார்.

சபா:—ஐயா! நான் வெளியூர். தாய் தந்தையற்ற அனாதை. நேற்றிரவு இந்த வயல் வழியாக வந்து கொண்டிருந்த பொழுது கல் தடுக்கி கீழே விழுந்துவிட்டேன். ஆகாரம் சாப்பிடாமல் களைத்துப்போய் இருந்ததால் அப்படியே தூங்கிப்போயிருக்கிறேன். இப்பொழுது தான் இவர்கள் வந்து என்னை எழுப்பினார்கள்.

வேங்:—அடாடா! ரொம்ப பரிதாபமா இருக்கே. இரவெல்லாம் பட்டினியா? என்னுடன் என் வீட்டிற்கு வருகிறாயா? ஏதாவது ஆகாரம் செய்யலாம்.

சபா:—ஆஹா! வருகிறேன்.

உடனே வெங்கட்டராமய்யர் "ஏய், கருப்பா! நான் வீட்டுக்குப் போயிட்டு வரேன். வம்பு பேசாதே வயல் காரியத்தைப்பாரு." என்று சொல்லிவிட்டு சபாபதியோடு போகிறார்.

# காட்சி 2.

காலம்:—காலை 8-மணி.

இடம்:—துரைராஜய்யர் வீட்டு வாசல்.

[ஜெயாவைக் காணமல் சிவராமய்யர் மனங் கலங்கி ஊருக்குப் புறப்படுகிருர். வாசலில் வண்டி நிற்கிறது. மீனுக்ஷியும், சிவராம ஐயரும் வண்டியில் ஏறிக் கொள்கிருர்கள்.

துரை:—(சிவராமய்யரிடம்) கவலைப்படாதேங்கோ. எப்படியும் ஜெயா திரும்பி வந்துவிடுவாள். அவளைக் கண்டு பிடிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். என்று கூறி மீனுக்ஷியிடம் "அம்மா மீனுக்ஷி! அவர் உடம்பை கவனமா பார்த்துக்கோ" என்று சொல்லுகிருர்.

மீனுக்ஷி:—என்ன அண்ணு, அப்படிச் சொல்றே? நான் என்ன அறியாதவளா? தெரியாதவளுக்கு சொல்ற மாதிரின்னு சேல்றே.

துரை :—இல்லேம்மா! அவர் மனசு இப்ப ரொம்பவும் இடிஞ்சுபோயிருக்கு. ஏதாவது செய்யாத காரியத்தை செஞ்சுண்டா என்ன செய்யறது. அதுக்காக சொன்னேன்." என்று சொல்லிவிட்டு அங்கே நின்றுகொண்டிருந்த தாண்டவராயனிடம் "தாண்டவராயா! ஜாக்கிரதையா அய்யாவையும், அம்மாவையும் ஊரிலே கொண்டு போய் விட்டுவிட்டு வா." என்கிருர்.

"ஆகட்டுங்க." என்று கூறி தாண்டவராயன் வண்டியை ஓட்டிச் செல்கிருன்.

## காட்சி 3.

காலம் :—காலை 8 மணி.

இடம் :—தஞ்சாவூரில் தாசி ரமணி வீடு.

வீட்டின் ஹாலில் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த கட்டிலில் ஜெயா தூங்கிக் கொண்டிருக்கிறாள். பக்கத்தில் ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டு ஜெயாவை கவனித்துக் கொண்டிருக்கிறாள் தாசி ரமணி. சிறிது தூரத்தில் ஜெயாவை தூக்கிக்கொண்டு வந்த வேலைக்கார கந்தன் நின்று கொண்டிருக்கிறான்.

ரமணி :—ஏண்டா கந்தா, மணி ஏழாச்சு, இந்தப் பெண் இன்னும் எழுந்திருக்கவில்லையே.

கந்தன் :—பாவம்! நாலு மைல் என்னோடே நடந்து வந்திருக்கோல்யோ. அந்த களைப்பு தான்.

இச்சமயத்தில் கம்பளித்தேவன் வருகிறான். கட்டிலில் ஜெயா படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சர்ய மடைகிறான்.

க. தேவன் :—ரமணி! இப்பெண் எப்படி இங்கே வந்தாள்?

ரமணி :—ஏன், நம்ப கந்தன்தான் இவளை நேற்றிரவு கூட்டிக் கொண்டு வந்தான். யாரோ இரண்டு முரடர்கள் இப் பெண்ணை ஒரு சாக்கில் கட்டிப் போட்டுக் கொண்டு போன போது அவர்களிடமிருந்து விடுவித்துக் கொண்டு வந்தானும்.

க. தேவன் :—அப்படியா சமாசாரம்? நல்ல வேளை! இப் பெண் உன்னிடம் வந்து சேர்ந்ததே. அது வரையில் நல்லதாயிற்று.

ரமணி :—என்னது ! நீ சொல்வதைப் பார்த்தால் இப் பெண்ணைப் பற்றி உனக்கு முன்பே தெரியும் போலிருக் கிறதே.

க. தேவன் :—ஆம். எனக்குத் தெரியும். இப் பெண்ணைப் பற்றி உன்னிடம் சில விஷயங்கள் சொல்லுகிறேன். வா, காம்ரா உள்ளுக்குப் போகலாம்.

(கம்பளித் தேவனும், ரமணியும் காம்ரா உள்ளுக்குச் சென்று தனித்துப் பேசுகிறார்கள்.)

க. தேவன் :—ரமணி! இப் பெண் யார் தெரியுமா? சிரு மருதூர் சிவராமய்யரின் ஒரே புதல்வி ஜெயா. இவளை ஒழிக்கும்படிதான் துரைராஜய்யர் என்பவர் எனக்கு 1000 ரூ. கொடுத்தது. நேற்றைய தினம் இப்பெண்ணை அபகரித்து வரும்படி என் ஆட்களை அனுப்பி யிருந் தேன். முட்டாள் பயல்கள் ஒரு ஆட்டிக்குட்டியை கொண்டு வந்து நின்றார்கள். இப்பொழுதுதான், நீ சொல்லிய பிறகு இதெல்லாம் கந்தனின் வேலைத்தனம் என்பதை தெரிந்து கொண்டேன்.

ரமணி :—(சிரித்துக்கொண்டே) ஆம். நம்ப கந்தனுக்கு எப்பவுமே இந்தமாதிரி விஷமத்தனம் செய்ய ரொம்ப வும் பிடிக்கும். தான் ஆட்டுக் குட்டியை சாக்கில் போட்டு கட்டி விட்டு வந்ததைப் பற்றி என்னிடம் நேற்றிரவு சொல்லி, சொல்லி, சிரித்தான்.

க. தேவன் :—போனது போகட்டும். நம்முடைய நற் காலம் இப்பெண் உன்னிடம் வந்து சேர்ந்தாள். இவளை வெளியே போக முடியாமல் பார்த்துக்கொள். இவள் மூலம் நாம் நிறைய பணம் சம்பாதிக்கலாம்.

ரமணி :—நிஜமாகவா?

க. தேவன் :—ஆம். சுமார் பதினையிரம் ரூபாய்க்கு குறையாது. இதில் உனக்கு பாதி பாகம் உண்டென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். இன்று இரவு வரையில் நீ இவளை ஜாக்கிரதையாக கவனித்துக் கொண்டால் போதுமானது. அதற்கப்புறம் இவளை நான் என் பாழ் வீட்டிற்கு எடுத்துச் சென்று விடுகிறேன்.

ரமணி :—சரி அப்படியானால் ஒரு ஈ, காக்காய் கூட இந்த வீட்டில் நுழைந்து இவளைக் கொண்டு போகாமல் பார்த்துக்கொள்கிறேன்.

க. தேவன் :—அதுதான் நான் கோறுவது. ஞாபகமிருக்கட்டும்.—என்று கூறி விடை பெற்று செல்கிறான்.

## காட்சி 4.

காலம் :—காலை மணி 11.

இடம் :—சிரு மருதூரில் சிவராமய்யர் வீடு.

[சிவராமய்யர் வீட்டு வாசலில் வண்டி வந்து நிற்கிறது. சிவராமய்யரும் மீனாக்ஷியம்மாளும் கீழே இறங்கி உள்ளே போகிறார்கள். சிவராமய்யர் வாடி வதங்கிய முகத்துடன் உள்ளே போகிறார். தன் எஜமானனின் வரவிற்காக காத்திருந்த குப்பன் தன் எசமான் இருக்கும் நிலைமையைக் கண்டு, அவரைப் பின்தொடர்ந்து உள்ளே சென்று "சாமி, சாமி! என்ன உடம்புங்க உங்களுக்கு? புள்ளை எங்கே, வல்லீங்களா? என்று கேட்கிறான்.

சிவ.—(கண்களில் நீர் ததும்ப) குப்பா! நான் என்னடா சொல்வேன். என் கண்மணி ஜெயாவை பரிகொடுத்து விட்டேண்டா.

குப் :—ஐயோ, சாமி! நீங்க என்ன சொல்றீங்க? ஒன்னுமே புரியலீங்களே.

சிவ :—அடே! ஜெயா காணுமல் போய்விட்டாளடா! ஜெயாவை யாரோ தூக்கிக்கொண்டு போய் விட்டார்களடா.

குப் :—நிசமாவா சாமி! ஐய்யய்யோ! இடி விளுந்தாப் போல யிருக்கே.

சிவ :—ஆமாடா, எல்லா இடத்திலேயும் தேடிப்பாத்தாச்சுடா. இனிமே போலீசுக்குத்தான் தெரியப்படுத்தனும்.

குப் :—அப்டீங்களா! நா வாணு போலீசு இஞ்சுபெக்டரய்யாவை கூட்டிட்டு வரட்டுங்களா?

சிவ :—ஆமாம். நீதான் போகனும். நான் ஒரு கடுதாசி தரேன். அதைக் கொண்டு போயி போலீஸ் இன்ஸ்பெக்டர் அய்யா கிட்டே கொடுத்து நான் கூட்டிண்டு வரச் சொன்னதாகச் சொல்லி கையோட கூட்டிட்டு வா.

குப் :—சரிங்க. இப்பவே கடுதாசி கொடுங்க. ஒரு எட்டுலே தஞ்சாவூருக்குப் போறேன்.

(சிவராமய்யர் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கிருர். அதைப் பெற்றுக்கொண்டு குப்பன் செல்லுகிருன்.)

## காட்சி 5.

காலம் :—மாலே 1 மணி.

இடம் :—தாசி ரமணி வீட்டில் ஒரு அறை.

[ஜெயா ஒரு கட்டிலில் உட்கார்ந்திருக்கிருள். பக்கத்தில் ஒரு ஸ்டூலில் இரண்டு தட்டு நிறைய ஆகாரம் வைத்திருக்கிறது. கீழே ஒரு பாத்திரத்தில் ஜலம் இருக்கிறது.]

ஜெயா :—நான் எங்கே இருக்கிறேன்? இவர்கள் என்னை ஏன் இங்கே பிடித்து வைத்திருக்கிறார்கள்? என்னை வெளியில் செல்ல விடமாட்டேன் என்கிறார்களே. ஐயோ, ஈசா! இப்படியும் நான் கஷ்டப்படணுமா? சபாபதி என்னவானாரோ தெரியவில்லையே! என்னைக் காணாமல் அப்பா எப்படி தவிக்கிறாரோ? ஐயோ, அப்பா! உங்களை விட்டு ஒரு நாளும் நான் பிரிந்ததில்லையே. எனக்கு இவ்விடத்தில் தனியாய் இருக்க பயமா யிருக்கே. ஆ, தெய்வமே! என்னைக் காப்பாற்றக் கூடாதா?—என்று கண்ணில் நீர் பெருக கதறுகிறாள்.

அப்பொழுது அங்கே ஒரு வேலைக்காரன் வந்து "ஏம்மா! இன்னும் ஆகாரம் சாப்பிடலையா? சும்மா அழு துண்டே யிருக்கியே, சீக்கிரம் சாப்பிட்டு விட்டு தட்டைக் கொடு.' என்கிறான்.

ஜெயா :—ஆகாரம் அப்பறம் சாப்பிடுகிறேன். இப்ப நான் எங்கே யிருக்கிறேன்? அதைச் சொல்லு! என்னை எதுக் காக வெளியே விடாமே இந்த உள்ளேயே பூட்டி வைத் திருக்கா?

வேலை :—நீ தஞ்சாவூர்லே ஒரு வீட்டிலே யிருக்கேங்கற தைத்தவிர வேறொன்றும் என்னால் சொல்ல முடியாது. வீணாக பட்டினி கிடக்காமே ஆகாரத்தை சாப்பிட்டு விட்டு தட்டைக் கொடு. இன்னும் உனக்கு ஏதாவது வேணும்னா கேளு, கொண்டாந்து தாரேன்.

ஜெ :—எனக்கொன்றும் வேண்டாம்.

வேலை :—சரி உன்னிஷ்டம்போல செஞ்சுக்கோ. போயிட்டு வாரேன். சீக்கிரம் தட்டைக் காலி பண்ணி வை. (போகிறான்)

## காட்சி 6.

காலம் :—மாலை 4-மணி.

இடம் :—சிவராமய்யர் வீடு.

[வீட்டுக்கூடத்தில் ஒரு சாய்மான நாற்காலியில் சிவராமய்யர் சாய்ந்துகொண்டிருக்கிறார். பக்கத்திலுள்ள ஒரு நாற்காலியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவரது கையில் ஒரு டைரியும், பென்ஸிலும் இருக்கின்றன. வாசல் திண்ணையில் ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளும், குப்பனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வாசலில் ஒரு குதிரை வண்டி நிற்கிறது.]

பொன்னு :—அப்படியானால் சபாபதி பேரில் உங்களுக்கு சந்தேகமில்லையே?

சிவ :—அப்பையன் கையில் சங்கிலி இருந்தது வாஸ்தவமானாலும் எனக்கென்னமோ அவன்பேரில் சந்தேகமில்லை. அப்பையன் சொல்வதுபோல் யாராவது முரடர்கள்தான் ஜெயாவை தூக்கிச்சென்றிருக்க வேண்டும்.

பொன்னு :—பின் அப்பையன் தப்பி ஓட வேண்டிய காரணம்?

சிவ :—சிறு பையனல்லவா, ரோசம் வந்திருக்கும். ஜெயிலுக்குப் போவதைவிட தப்பிச் செல்வதே நலமென்று நினைத்திருக்கலாம்.

பொன்னு :—சரி, தாங்களே சொல்லும்பொழுது அப்புறம் எனக்கென்ன? இருக்கட்டும், ஜெயா காணமற்போவதால் யாருக்காவது நன்மையுண்டா? அல்லது உங்களுக்கு யாராவது விரோதிகளுண்டா?

சிவ:—என் மனதிற் கெட்டியவரையில் அப்படி ஒருவரு மில்லையே—என்று கூறி ஒரு நிமிஷ நேரம் ஏதோ யோசித்துவிட்டு "ஆனால் ஒன்று" என்கிறார்.

பொன்னு:– என்ன அது? தயங்காமல் சொல்லுங்கள்.

சிவ:—(சுற்றுமுற்றும் பார்த்து தன் மனைவியில்லை யென்பதை அறிந்து) கிட்டே வா, காதோடு சொல்ல வேண்டும்.

(இன்ஸ்பெக்டர் சிவராமய்யரின் கிட்டே நெருங்கி உட்காருகிறார்.)

சிவ:—(தன் வாயை இன்ஸ்பெக்டரின் காதிடம் கொண்டு போய் மெதுவாக) என் மனைவிக்கும், அவள் அண்ணா துரைராஜனுக்கும் ஜெயாவைக் கண்டால் பிடிக்காது.

பொன்னு:—"அப்படியா!" என்று சொல்லி தன் டைரியில் ஏதோ எழுதிக்கொண்டு "இவ்வளவுதானே! இன்னும் ஏதாவது சொல்ல வேண்டியதுண்டா?" என்று கேட்கிறார்.

சிவ:—அவ்வளவுதான். இனிமேல் ஜெயாவை கண்டு பிடிக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

பொன்னு:—சரி மாமா! உத்தியோக தோரணையில்லாமல் ஜெயா என் சொந்த மருமாள் என்ற ஹோதாவிலும் அவளை எப்படியாவது கண்டு பிடிக்கிறேன். தாங்கள் விசாரப்படாமல் இருங்கள். நான் சென்று வரட்டுமா?

சிவ:—ஆகா போய் வா. ஞாபகமிருக்கட்டும்.

(பொன்னுசாமி அய்யர் போலீஸ் கான்ஸ்டேபிளோடு வாசலில் காத்துக்கொண்டிருந்த குதிரை வண்டியில் ஏறிச் செல்கிறார்.)

## காட்சி 7

காலம் :—இரவு 10-மணி.

இடம் :—முருங்கப்பேட்டை கிராமச்சாவடி.

பிச்சுமணி :—துரைராஜய்யரே! உமது மனோபீஷ்டம் பூர்த்தி யாயிற்ரு?

துரைராஜய்யர் :—ஜெயாவைப் பற்றியவரையில் பூர்த்தி தான். சுந்தரி விஷயம் வேறு இருக்கே.

பிச்சு :—அதற்கு நான் என்ன செய்வது? அது உம்முடைய விஷயமல்லவா? என் வரையில் நான் சொன்ன படி செய்துவிட்டேன்.

துரை :—ஆமாம். ஜெயா என்னவாளுள்?

பிச்சு :—கம்பளித்தேவன் அவளை தன் வீட்டில் சிறை வைத்திருக்கிருன்.

துரை :—ஏன் அவளைக் கொல்லவில்லையா?

பிச்சு :—அதற்குள்ளாகவா கொல்வது? தகுந்த காலம் வரும்பொழுது கம்பளித்தேவனுக்கு அவளைக்கொல்லத் தெரியும். அதைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம். யானை வாய்க்குள் போன கரும்பு மாதிரி தான் கம்பளித் தேவனிடம் அகப்பட்ட ஆத்மா என்பதை தெரிந்து கொள்ளும்.

துரை :—அப்படியானல் சரி! இந்தா, நான் உனக்குக் கொடுப்பதாகச் சொன்ன பணம். (200 ரூ. கொடுக்கிருர்.)

பிச்சு :—(பணத்தை எடுத்துக்கொண்டு) என்ன இவ்வளவு தானு?

துரை :—இப்பொழுது இதை வைத்துக்கொள். பின்னுல் உனக்கு வேண்டும் பொழுது ஏதாவது தருகிறேன்.

பிச்சு :—சந்தோஷம். நான் சென்று வருகிறேன். எப்பொழுதாவது என் உதவி வேண்டுமானுல் தெரியப் படுத்தலாம்.

துரை :—அதற்கென்ன, ஆகட்டும்.

(இருவரும் பிரிந்து செல்கிருர்கள்.)

## அங்கம் 9—காட்சி 1.

காலம் :—காலை 8-மணி.

இடம் :—சுந்தரியின் வீடு.

[ராமநாதன் பள்ளிக்கூடம் செல்ல ஷர்ட்டையும், அங்க வஸ்திரத்தையும் எடுத்து அணிந்து கொள்கிருன். கையில் குடையை எடுத்துக்கொண்டவுடன் "சுந்தரி! நான் சென்று வரட்டுமா?" என்கிருன்.

அப்பொழுது தான் ராமநாதன் காலை யாகாரம் சாப்பிட்ட இடத்தை சுத்தி செய்துகொண்டிருந்த சுந்தரி, கையை அலம்பி விட்டு ராமநாதனிடம் வந்து "நாதா! இன்றொரு நாள் லீவ் எடுத்துக்கொள்ளக்கூடாதா? எனக்கென்னமோ இன்று மனது திக், திக் என்று அடித்துக்கொள்கிறது." என்கிருள்.]

ராம :—கண்ணே! மன விசாரப் படாதே. நானும் பார்க்கிறேன், இரண்டு நாளாக நீ சரியானபடி காரியம் செய்யாமல் கண்டபடி மனதை அலட்டிக்கொள்கிருய்.

சுந் :—தாங்கள் சொல்வது சரிதான். ஒரு பக்கம் கடன் விசாரம். மற்ரொருபுறம் சபாபதி தங்கச்சங்கிலியைத்

திருடினுன் என்ற பழியுடன் ஓடிப்போனதைப்பற்றிய துக்கம். இவ்விரண்டையும் என்னுல் எவ்வளவு அடக்கப் பார்த்தும் முடியவில்லையே! நமது வாழ்க்கையை நினைத்துப் பார்த்தால் நாம் இப்புவியில் துன்பத்தை யனுபவிக்கவே பிறந்திருக்கிருேம் என்று தோன்றுகிறது.

ராம:—ஆம். நாம் இப்புவியில் பிறந்திருப்பதே இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கத்தானே! ஒருவன் துன்பமே படாமலிருந்தால் இன்பத்தின் ருசி அவனுக்கு எப்படித்தெரியும்? நிழலின் அருமை வெய்யிலில் போனுல்தானே தெரியும். எப்பொழுது நமக்குத் துன்பம் நேரிடுகிறதோ அப்பொழுது அது இன்பத்தையடைய முதல்படி என்றுணர்ந்து ஈசுவரனை தியானிக்க வேண்டும். அதை விட்டுவிட்டு வீணுக மனம் நொந்து கொள்வதில் ஒரு பிரயோஜனமும் இல்லை.

சுந்:—ஏதோ தாங்கள் கூறுகிறீர்கள். ஆனுல் வாழ்க்கையில் அவ்வாறு நம்மால் இருக்க முடிகிறதா?

ராம:—ஆரம்பத்திலேயே முடியவில்லை, முடியவில்லை என்று சொன்னுல் எந்தக்காரியமும்தான் முடியாது. கூடிய வரையில் முயற்சி செய்து பார்த்துவிட்டுச் சொல்லவேண்டும். நீ ஏதாவது பக்தர் சரிதையை எடுத்து வாசித்துப்பார். அப்பொழுது தெரியும். கவலைப்படாமலிரு, பள்ளிக்கூடத்திற்கு நாழியாய் விட்டது. போய் வருகிறேன்.

(ராமநாதன் பள்ளிக்கூடத்திற்கு செல்லுகிருன். வழியில் பிச்சுமணியை சந்திக்கிருன்.)

பிச்சு:—என்னப்பா ராமநாதா! பணம் எங்கே? மூன்று நாட்களுக்கு மேலாய்விட்டதே.

ராம :—(கோபத்துடன்) கிடக்கட்டும். அன்று நான் வீட்டில் இல்லாத சமயத்தில் நீ வந்து மானக்குறைவான வகையில் நடந்துகொண்டாயாமே. இது நியாயமா?

பிச்சு :—நியாயத்தையும், அநியாயத்தையும் நீதான் கண்டாயாக்கும். பணம் எங்கே என்று கேட்டால் இல்லாததையெல்லாம் வம்பிழுக்கிருயே. என் பணத்தை எறிந்துவிட்டால் நான் ஏன் உன் வீட்டிற்கு வருகிறேன்.

ராம :—ஓஹோ! அப்படியா? இருக்கட்டும்.—என்று சொல்லி செல்லத் தொடங்குகிருன்.

பிச்சு :—(ராமநுதனின் சட்டையைப் பிடித்திழுத்து) எங்கே போகிருய்? நில்லு! என் பணத்திற்கு வழி சொல்லிவிட்டுப் போ.

ராம :—சட்டையை விடு, கிடக்கட்டும். என்னிடம் இப்பொழுது ஒரு பைசாகூட கிடையாது. நாலு மாதம் கழித்துதான் பணம் கொடுக்க முடியும்.

பிச்சு :—கடன் வாங்கினதில் குறைச்சலில்லே; ராங்கியைப் பார்! மயிலே மயிலே என்ருல் இறகு போடுவாயா? கோர்ட்டில் போட்டு வாரண்டில் பிடித்தால்தான் வழிக்கு வருவாய்.

ராம :—நீ என்ன வேண்டுமாலுைம் செய்துகொள். நான் எல்லாவற்றிற்கும் துணிந்துவிட்டேன். வெள்ளம் தலேக்குமேல் போனபிறகு சாண் போனுலென்ன, முழம் போனுலென்ன?—என்று கூறி சட்டையை விடுவித்துக்கொண்டு விர்ரென்று போய்விடுகிருன்.

பிச்சுமணி சிறிது நேரம் ராமநாதன் செல்லும் திசையை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தன் வழியே செல்கிருன்.

## காட்சி 2.

காலம் :—காலே 10-மணி.

இடம் :—துரைராஜய்யர் வீடு.

துரை :—டேய்! தாண்டவராயா! பாத்துண்டாயாடா அந்த பிச்சுமணி பய ஆசையை!

தாண் :—ஆமாங்க. ரொம்ப ஆசை பிடிச்சு தானுங்க அலேயரு௫. 200 ரூபாயைவிட எவ்வளவு கொடுப்பாங்க?

துரை :—கிடக்கிருன் அவன். இனிமேல் அவன் இங்கு வந்தால் வாயில் மண்ணைப் போட்டுத்தான் அனுப்பு வேன்.

தாண் :—சரிங்க. இன்னிக்கு அந்த பொண்ணை பாத்துட்டு வரட்டுங்களா?

துரை :—என்னடா என்னை கேக்கறே? இன்னிக்கித்தான் தகுந்த நாள். நம்ப அம்மா கூட அப்பளாமிட அடுத்த வீட்டுக்குப் போகப்போறது. மத்தியானம் ஒரு மணிக்கு அம்மா வீட்டிலே இருக்காது. அப்ப போயி நம்ப அம்மா கூப்படறதுன்னு சொல்லி சம்சயத்துக்கு இட மில்லாமே அந்த பொண்ணை மாடிக்கு அழைச்சுக்கிட்டு வாடா.

தாண் :—ஆகட்டுங்க.

(போகிருன்.)

## காட்சி 3.

காலம் :—காலே 10-மணி.

இடம் :—மாங்குடி கிராமத்தில் வெங்கட்டருமய்யர் வீட்டுத் திண்ணை.

[வெங்கட்டராமய்யர் தூணில் சாய்ந்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருக்கிருர். அவருக்கு பக்கத்தில் சபாபதி உட்கார்ந்து கொண்டிருக்கிருன்.]

வேங் :—அப்பா சபாபதி! நீ சொன்னுயே ஜெயா என்ற பெண்ணைப் பற்றி அவள் யார் தெரியுமா? அவள் என்னுடைய பெண் வயிற்றுப் பேத்தியாகவேண்டும்.

சபா :—உண்மையாகவா? அப்படியானுல் ஜெயாவுக்கு நீங்க தாத்தாவாக வேண்டுமென்று சொல்லுங்கள்.

வேங் :—ஆம் அப்பா! என்னுடைய பெண் சரஸ்வதியைத் தான் மூத்த தாரமாக சிவராமய்யருக்குக் கொடுத்திருந் தேன். கால வித்யாசத்தால் ஜெயாவை பிரசவித்தவுடன் அவள் இறந்துவிட்டாள்.

சபா :—மாமா! இப்பொழுது என்னைவிட ஜெயாவைத் தேடுவதில் தங்களுக்குத்தான் பாத்யம் அதிகமுண்டு.

வேங் :—வஸ்தவந்தான். ஜெயாவை கண்டுபிடிக்க உனக்கு எவ்வளவு ஆவல் இருக்கிறதோ அவ்வளவு ஆவல் எனக்கும் உண்டு. என் பிள்ளை பொன்னுசாமி இப்பொழுது தஞ்சாவூரில் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிருன். அவன் வாரத்திற்கு ஒரு நடை என்னைவந்து பார்த்து விட்டுப் போவான். அவன் இன்று அநேகமாக வருவான். வந்தால் அவனிடம் ஜெயா காணுமற்போன விஷயத்தை தெரிவித்து அவளை கண்டுபிடிக்கச் சொல்லுகிறேன். —என்று சொல்லிக் கொண்டிருக்கையில் ஒரு குதிரை வண்டிவந்து வாசலில் நிற்கிறது.

அதிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யர் கீழே யிறங்கி, வண்டிக்காரனுக்கு சில்லரை கொடுத்து அனுப்பிவிட்டு தன் தகப்பனரிடம் வந்து நமஸ்காரம் செய்துவிட்டு "அப்பா! கேட்டேளா ஜெயா சமாசாரத்தை?" என்று சொல்ல வாயெடுத்தவர் பக்கத்திலிருந்த சபாபதியைப் பார்த்துவிட்டு "இப்பையன் யார்?" என்று கேட்கிருர்.

வேங்:—இப்பையன் முருங்கப்பேட்டை பெயர் சபாபதி. இவனைப்பற்றி அப்புறம் சொல்கிறேன். நீ என்னமோ ஜெயாவைப்பற்றி சொல்ல வந்தாயே அது என்ன?

போன்:—அதான் நம்ப ஜெயா காணுமற் போய்விட்டாளாம். நேற்று சிவராம மாமா என்னைக் கூப்பிட்டு அனுப்பிச்சா. போய் எல்லாவற்றையும் விசாரித்தேன். அவர் சொன்ன சபாபதி இப்பையன்தான் போலிருக்கிறது.

வேங்:—ஜெயாவைப் பற்றிய விஷயமெல்லாம் இப்பையன் மூலம் நான் முன்பே தெரிந்து கொண்டு விட்டேன். சிவராமய்யர் சொன்ன சபாபதி இப்பையன்தான். சபாபதியைப் பற்றி சிவராமய்யர் அபிப்பிராயமென்ன?

போன்:—சபாபதியின் பேரில் அவருக்கு சந்தேகமில்லை. துரைராஜய்யர் இப்பையனை இம்சித்து விட்டதாகவும் அதனுல் அவன் தப்பி ஓடிவிட்டதாகவும் கூறினுர்.

வேங்:—இப்பையன் தன்மேல் ஒரு குற்றமுமில்லை யென்றும், தான் எப்படியாவது ஜெயாவை கண்டு பிடித்து உலகத்தாருக்கு தான் நிரபராதி என்பதை ரூபிக்கப் போவதாகவும் கூறுகிருன்.

போன் :—அப்படியா? மிகவும் சந்தோஷம். நானே இப் பையனைக் கண்டுபிடித்து இவனிடமிருந்து முழு விவரங் களையும் அறிய வேண்டுமென்று இருந்தேன். தேடப் போன மூலிகை காலில் சிக்கியதுபோல் இவனே நம்மை யடைந்தது நல்லதாகப் போயிற்று. (சபாபதியை நோக்கி) ஏனப்பா! அன்றையதினம் ஆற்றங்கரையில் நடந்தவற்றை விவரமாகச் சொல்கிறாயா?

சபா :—ஆஹா. சொல்லுகிறேன்.

வேங் :—பொன்னுசாமி! அப்பையன் எங்கே போகிறான்? அப்புறம் சாவகாசமாக எல்லாவற்றையும் விசாரியேன் இப்ப சாப்பிடற காரியத்தைப் பாரு. வா, உள்ளே போகலாம்.—என்று கூறவே மூவரும் உள்ளே போகி றார்கள்.

## காட்சி 4.

காலம் :—பகல் 1-மணி

இடம் :—சுந்தரியின் வீடு.

[சுந்தரி கூடத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்து தன் நாதன் சொன்னபடி பக்தர் சரிதை ஒன்றை வாசித்துக் கொண்டிருக் கிறாள். தாண்டவராயன் அங்கே வருகிறான்.]

தாண் :—(உள்ளே வந்து) அம்மா, அம்மா!

சுந் :—(திரும்பிப் பார்த்து) யாரப்பா நீ? எங்கே வந்தாய்?

தாண் :—நானு இந்த ஊரு தலையாரியுங்க. முன்சிப்தாரு வீட்டு அம்மா உங்களை கூட்டியாரச் சொன்னாங்க.

சுந்தரி :—என்னை எதுக்காக அந்த அம்மா கூப்பிடனும்? முன் பின் பழக்கமில்லையே!

தாண் :—பளக்கம் பண்ணிக்கத்தானுங்க. இந்த ஊருக்கு வந்தப்புறம் நீங்க அவுங்க வீட்டுக்கு வந்ததேயில்லை யாம். உங்களைப் பாத்துப் பேச எங்க அம்மா ரொம்ப ஆவலாயிருக்காங்க.

சுந்தரி :—அப்படியா! வீட்டில் ஒருவருமில்லையே; வீட்டுக் காரரை கேட்காமல் நான் எப்படி வருகிறது?

தாண் :—என்ன அம்மா இப்படி சொல்றீங்க? கதவைச் சாத்தி பூட்டிக்கிட்டு வாங்களேன். பெரிய வீட்டு அம்மா கூப்பிடறபோது வர சௌகர்யமில்லேன்னு சொல்லலாங்களா?

சுந்தரி :—நான் என்னப்பா செய்வது? கதவை சாத்திக் கொண்டு போனால் என் புருஷன் வந்து காக்க நேரிடுமே.

தாண் :—ரொம்ப நாளியாகுன்னு பாக்கறீங்களா? அஞ்சு நிமிச நேரந்தானுங்க. போன கையோடயே வந்துட லாங்க. உங்க வீட்டு அய்யா வரத்துக்குள்ளயே வந்துடலாங்க.

சுந்தரி :—இவ்வளவுதூரம் சொல்றபோது, அதுவும் பெரி யாத்து பேர் கூப்பிடறபோது, அதைத் தட்டறது நன்னாருக்காது. செத்தே இரு, வந்துவிட்டேன்—என்று கூறி புஸ்தகத்தை மடித்து வைக்கிறாள்.

பின் கூடியவரையில் தன்னை சீர்திருத்திக் கொண்டு, வீட்டுக் கதவைச்சாற்றி பூட்டிவிட்டு, தாண்டவராயனோடு முன்சீபு வீட்டிற்குச் செல்லுகிறாள்.

## காட்சி 5

காலம் :—பகல் $1\frac{1}{2}$ மணி.

இடம் :—துரைராஜய்யர் வீடு.

[துரைராஜய்யர் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். தாண்டவராயன் சுந்தரியை அழைத்துக்கொண்டு உள்ளே போகிறான். கூடத்தில் மாடிக்குச் செல்லும் வாசற்படியை நெருங்கியதும் "வாங்கம்மா மாடிக்கு, மாடியில் தான் எங்கம்மா இருக்காங்க." என்று சொல்லி மாடியறைக்கு சுந்தரியை அழைத்துச் செல்லுகிறான்.

சுந்தரி :—(மாடி யறையில் ஒருவருமில்லாததைக் கண்டு) என்ன, ஒருவரையும் காணோமே! எங்கே உங்கம்மா ?

தாண் :—ஒரு சமயம் கிளே காரியமா போயிருப்பாங்க. நீங்க இங்கேயே இருங்க. நான் போய் கூட்டிகிட்டு வரேன்.

(கிழே இறங்கி வந்து துரைராஜய்யரிடம் சொல்கிறான்.)

தாண் :—சீக்கரம் போங்க. நம்ப அம்மா வரத்துக்குள்ளே காரியத்தைப் பாத்துடுங்க.

துரை :—சரி, நான் போகிறேன். மாடியறைக் கதவை வெளிப் பக்கமாக சாத்திக்கோ. அம்மா வந்து கேட்டா நான் வெளியிலே போயிருக்கேன்னு சொல்லு.

தாண் :—ஆகட்டுங்க, ரொம்ப நாளியாக்காதீங்க.

துரை :—அதெல்லாம் எனக்குத் தெரியுண்டா—என்று சொல்லி மாடிக்குச் செல்லுகிறார்.

தாண்டவராயன் துரைராஜய்யர் சொல்லியபடி மாடியறைக் கதவை வெளிப்பக்கமாக சாத்திக்கொண்டு மாடி வாசற்படியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

(உள்ளே வந்த துரைராஜய்யரைக் கண்டு சுந்தரி திடுக்கிடுகிருள்)

துரை :—ஏனம்மா, என்னைக் கண்டு பயப்படுகிருய்? இவ்வளவு நேரம் காக்க வைத்ததற்காக மன்னித்துக்கொள்.

சுந்தரி :—ஆ, ஈசா! இவர் என்னமோ சொல்லுகிருரே; இந்த வீட்டின் அம்மாள் எங்கே? அவாளை அழைக்கப் போன வேலைக்காரனைக் காணேமே.

துரை :—இந்த வீட்டு அம்மா வெளியில் அல்லவா போயிருக்கிருள். அவள் வர இன்னும் ஒரு மணி நேரமாகும். நான்தான் அவள் புருஷன். எனக்காகத்தானே உன்னை இங்கே கூட்டிக்கொண்டு வரச்சொன்னேன். ஏன் அந்த மூலையில் நின்றுகொண்டிருக்கிருய்? கிட்டே என்னருகில் வா!

சுந்தரி :—இதென்ன! மோசடியாய் இருக்கிறதே. இவர்கள் சூது செய்து என்னை ஏமாற்றி விட்டார்கள் போலிருக்கிறதே! ஐயோ தெய்வமே! நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

துரை :—எதற்காக இப்படியெல்லாம் கத்துகிருய்? உன்னைக் காப்பாற்ற நானிருக்கும் பொழுது தெய்வத்தை எதற்காக கூப்பிடுகிருய்? கிட்டே வா. எனக்கொரு முத்தம் கொடு.

சுந்தரி :—ஐயா, பிரபுவே! இப்படி தகாத வார்த்தையெல்லாம் பேசாதீர். தெரியாமல் நான் வந்து அகப்பட்டுக் கொண்டேன். தயவு செய்து என்னை வெளியே போக விடும்—என்று சொல்லி கதவின் பக்கம் செல்லுகிருள்.

துரை :—கண்ணே! எதற்காக இந்த வீண் வேஷம் போடு கிருய்? உன் குணம் எனக்குத் தெரியாதா? உன்னைப் பார்த்தது முதல் நான் விரகதாபத்தால் எப்படி வாடுகிறேன் என்பதை நீ அறிவாயா? சரியானபடி என்னிடம் சிக்கிக்கொண்ட பின் உன்னை நான் அணையா மல் விடுவேனு?—என்று கூறிக்கொண்டே சுந்தரியை செல்லவிடாமல் தன் கைகளை நீட்டி தடுக்கிருன்.

சுந்தரி :—ஐயா, தங்களுக்கு மனைவியில்லையா? அபலையா கிய என்னையா கெடுக்கவேண்டும். என்னை பங்கப் படுத்தி என் பதிக்கு பிரயோசனமில்லாமல் செய்து விடாதீர். வேண்டாம்! வேண்டாம்! என்னைப்போக விடும்.—என்று கூறி பக்கவாட்டில் பாய்ந்து சென்று கதவைத் திறக்க முயலுகிருள்.

“அடியே! என்ன சொல்லியும் கேழ்க்காமல் ஒரே பிடி வாதமாகச் சொல்லுகிருயே. மரியாதையாக சம்மதித்தா லாச்சு. இல்லாவிடில் பலாத்காரம் செய்வேன். உன்னை லேசில் இவ்விடத்தை விட்டுச் செல்லவிடுவேனு?” என்று சொல்லி சுந்தரியை கதவைத் திறக்க வொட்டாமல் தடுத்து கையைப் பிடித்து இழுக்கிருர்.

உடனே சுந்தரி ‘ஐயோ, பாவி! என் கையைப் பிடித்து இழுக்கிருனே. அநியாயமாக என்னை மானபங்கப் படுத்துகிருனே. என்னைக் காப்பாற்றுபவர் ஒருவரு மில்லையா?” என்று கத்துகிருள்.

இந்த சப்தம் தற்செயலாக வீட்டிற்குத் திரும்பி வந்த துரைராஜய்யரின் மனைவி லட்சுமியின் காதில் விழு கிறது. மாடிக்குச் செல்லும் வாசற்படியில் தாண்டவ ராயன் உட்கார்ந்திருப்பதை லட்சுமி பார்க்கிருள்.

லட்சுமி :—ஏண்டா, தாண்டவராயா! மாடியில் என்னடா சப்தம்?

தாண் :—மாடியில் ஒன்றுமில்லிங்க. அடுத்த வீட்டுலே போலிருக்கு.

லட்சுமி :—(மறுபடியும் சுந்தரியின் சப்தத்தைக் கேட்டு விட்டு) மாடியில்போலதாண்டா யிருக்கு. நம்ப அய்யா எங்கே? மாடிக்கதவு ஏண்டா சாத்தியிருக்கு?

தாண் :—அய்யா ஆத்தங் கரைக்குப் போயிருக்காங்க. நானு இங்கேயேதானே யிருக்கேன். மாடியிலே யாரு வந்து சத்தம் போடப்போறுங்க.

(மறுபடியும் சுந்தரி கதறும் சப்தம் கேட்கிறது.)

லட்சுமி :—ஏண்டா நாயே! என்னை ஏமாத்தப் பாக்கறயா? யாரு வீட்டுப் பெண்ணை கொண்டுவந்து மாடியிலே விட்டுருக்கே. உள்ளத்தைச் சொல்லுடா? என்று கையி லிருந்த அப்பளாக்குழவியால் நாலு சாத்து, சாத்து கிறுள் தாண்டவராயனுக்கு

"ஐயோ! இல்லீங்கம்மா. நானு ஒன்னும் செய்ய லீங்க அம்மா. அய்யாத்தான் கூட்டியாரச்சொன்னுரு." என்று சொல்லி துள்ளிக்கொண்டே வாசல் பக்கம் ஓடி விடுகிறுன்.

லட்சுமியம்மாள் படபடவென்று கதவைத் திறந்து கொண்டு மாடியறைக்குச் சென்று பார்க்கிறுள். துரை ராஜய்யர் பலவந்தமாக சுந்தரியை இழுப்பதையும், சுந்தரி அவரது பிடியிலிருந்து திமிறுவதையும் காண்கிறுள்.

லட்சுமி :—பேஷ், பேஷ்! நன்னாருக்கே. ரொம்ப ஒழுங்காயிருக்கே காரியம். ஆரம்பிச்சுட்டேளா மறு படியும் காமலீலைக்கு? இந்த தாண்டவராயன் இருக்கிற வரைக்கும் நீங்க உருப்படபோறதில்லை. முன்னே அப் படித்தான் அந்த சூத்தரச்சி கருப்பியைக் கட்டிண்டு அழுதேள். அவளோட சண்டை பிடிச்சு துரத்தறத் துக்குள்ளே தஞ்சாவூர் தங்கத்தை இந்த ஊருக்கே கூட் டிண்டு வந்து கொம்மாளம் அடிச்சேள். ரெண்டு பேரையும் ஊரைவிட்டு துரத்தறத்துக்குள்ளே சந்தி சிரிச்சுப்போச்சு. போரும் போராததற்கு இப்ப ஒரு பிராமணப் பெண்ணை கெடுக்க ஆரம்பிச்சுட்டேளா? இந்த மாதிரி ஊருப்பெண்ணெல்லாம் கெடுத்தாக்கே நம்ப குடி கெட்டுப்போகாமே என்ன செய்யும்? புள்ளை எங்கேயிருந்து பொறக்கும்! வேண்டாம் விட்டுடுங்கோ! அந்தப் பெண்ணை மரியாதையா விட்டாப்போச்சு. இல் லாவிட்டால் ஊரைக்கூட்டி அமக்களம் பண்ணிப்புடு வேன் என்றாள்.

எதிர்பாராதவிதமாக அங்கு வந்து ராமபாணம்போல் வர்ஷித்த தன் மனைவியின் வார்த்தைகளைக்கேட்டு மிகவும் பயந்துபோன துரைராஜய்யர் சுந்தரியை தன் பிடியி லிருந்து விட்டுவிடுகிறார்.

சுந்தரி லட்சுமியம்மாளிடம் ஓடிப்போய் அவளைக்கட் டிக்கொண்டு "அம்மாமி! நீங்கள்தான் என் மானத்தைக் காப்பாத்தினேள். ஈசுவரன்தான் தகுந்த சமயத்தில் உங் களை இங்கே கொண்டுவந்துவிட்டார். உங்கள் வீட்டு வேலைக்காரன் நீங்கள் கூப்பிடுவதாகச் சொன்னதால் நான் இங்கு வந்தேன். இவர்கள் சூது செய்து என்னை ஏமாற்று

வார்களென்று நினைக்கவில்லை." என்று கூறி கண்ணீர்விடு கிறாள்.

லட்சுமி :—பெண்ணே! வருந்தப்படாதே. இதுவே என் புருஷனுக்கு வாடிக்கையாகப் போய்விட்டது. நானும் எவ்வளவோ தரம் சொல்லியாய்விட்டது. இதை நீ மனசுலே வச்சுக்காதே! உன் புருஷனிடத்திலும் சொல்லவேண்டாம். யாருக்கும் இது தெரியவேண் டாம். இந்த விஷயம் நமக்குள்ளாக இருக்கட்டும். இனிமேல் என் புருஷனை உன் வழிக்கு வராமல் பார்த் துக்கொள்கிறேன்." என்று பலவிதமாக தேற்றுகிறாள்.

பின் சுந்தரியை சமாதானப்படுத்தி மாடியிலிருந்து கீழே கூட்டிக்கொண்டு வந்து தெரு வாசற்படிவரை கொண்டுபோய் விட்டுவிட்டு வருகிறாள்.

துரைராஜய்யர் மிகுந்த ஏமாற்றத்துடன் பேந்தபேந்த விழித்துக்கொண்டு மாடியிலிருந்து கீழே இறங்கி வரு கிறார். சுந்தரியை விட்டு விட்டு வந்த லட்சுமி அவரை சந்திக்கிறாள்.

லட்சுமி :—இனிமே மானமா ஒழுங்கா குடித்தனம் பண்ற தாயிருந்தா இந்த வீட்டிலே யிருக்கேன். இல்லாட்டா இப்பவே ஊரைக்கூட்டி உம்ம யோக்யதையை பறை யடிச்சுப்புட்டு பொறந்தாத்துக்குப் போயிடுவேன். என்ன சொல்றேள் ?

துரை :—இல்லேடி! வேண்டாமடி. ஊரைக்கூட்டி என் மானத்தைப் போக்காதேடி. இனிமேல் ஒழுங்காயிருக் கேண்டி. இந்தத் தடவை மாத்திரம் மன்னிச்சுப்புடுறீ.

லட்சுமி :—முத முதல்லே அந்த தாண்டவராயனை

வீட்டை விட்டு ஒழிக்கணும். இனிமே அவன் இந்த வீட்டிலே காலடி எடுத்து வைக்கக்கூடாது.

துரை :—ஆகட்டுண்டி. இனிமேல் அவன் மூஞ்சியிலேயே முழிக்கல்லேடி.

லட்சுமி :—அப்பன்னு சரி, வாங்கோ உள்ளே. காப்பிப் போட்டுத்தரேன். குடிச்சுப்புட்டு கிருஷ்ணு ராமான்னு உங்க காரியத்தைப் பாருங்கோ.

(இருவரும் போகிறுர்கள்)

## காட்சி 6.

காலம் :—பகல் 2 மணி

இடம் :—மாங்குடியில் வெங்கட்டராமய்யர் வீட்டுக்கூடம்.

[வெங்கட்டராமய்யர் ஒரு ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டிருக்கிறுர். அவருக்கு முன் உள்ள ஒரு பெஞ்சியில் பொன்னுசாமி அய்யரும், சபாபதியும் உட்கார்ந்துகொண்டிருக்கிறுர்கள்.]

பொன் :—(சபாபதியை நோக்கி) சபாபதி! நான் இப்பொழுது கேட்கும் கேள்விகளுக்குச் சற்று பதில் சொல்லு. நீயும், ஜெயாவும் எத்திசையை நோக்கி நடந்தீர்கள்? உன்னை அடித்த முரடர்கள் எப்பக்கத்திலிருந்து வந்தார்கள்?

சபா :—நானும், ஜெயாவும் மேற்கு நோக்கி நடந்தோம். சுமார் 60-அடி தூரம் செல்வதற்குள் எங்களுக்கு வலது புறத்திலிருந்து ஒரு ஆளும், இடது புறத்திலிருந்து ஒரு ஆளுமாக ஓடி வந்தார்கள்.

பொன் :—அந்த முரடர்களின் அங்க அடையாளங்களை உன்னுல் சொல்ல முடியுமா?

சபா :—நான் அவ்வளவாக கவனிக்கவில்லை. சாதாரண உயரமும், நல்ல கட்டுமஸ்தான தேகமும் உடையவர்களென்று சொல்லலாம். அவர்களில் ஒருவனுக்கு நன்கு அடர்ந்து வளர்ந்த மீசையிருந்ததாக நினைக்கிறேன்.

போன் :—அம்முரடர்களை நேரில் பார்த்தால் உன்னால் அடையாளம் கண்டு பிடிக்க முடியுமா ?

சபா :—முடியும்.

போன் :—அவர்கள் வந்த திசையில் யாராவது ஆள்கள் ஒளிந்துகொள்ளுமாறு தாழைப்புதர்கள் உண்டா ?

சபா :—ஆற்றங்கரையானபடியால் ஏராளமான தாழைப் புதர்கள் இருக்கின்றன.

போன் :—இவ்வளவுதான் எனக்கு வேண்டும். நாளைய தினம் முருங்கப்பேட்டைக்குப் போய் அந்த ஆற்றங் கரை பக்கமெல்லாம் சோதிக்கப்போகிறேன். முரடர் களைப்பற்றி ஏதேனும் துப்பு கிடைத்தாலும் கிடைக் கலாம். இவ்விஷயத்தில் உன் உதவி எனக்கு வேண்டி யிருக்கிறது. ஆகையால் நீ என்னுடன் வரவேண்டி யது. ஜெயாவைக் கண்டு பிடிக்கும் வரையில் என் வேலைக்காரன்போல் நீ நடந்துகொண்டு ஜெயாவைத் தேடுவதில் ஒத்தாசை செய்.

சபா:—என்னுடைய விருப்பமும் அதுதான். என்னைத் தங்களுடன் வைத்துக்கொள்ளும்படி நானே கேட்கலா மென்றிருந்தேன்.

வேங் :—ஆம். அப்பா ! அதுதான் சரி. சபாபதியை உன் னுடன் அழைத்துச்செல்வதால் அவன் உனக்கு உதவி

யாக இருப்பதோடுகூட அவனது எண்ணமும் நிறைவேறும்.

போன் :—தங்களுடைய அபிப்பிராயமும், சபாபதியின் விருப்பமும் என் எண்ணப்படியே இருப்பது மிகவும் சந்தோஷம். இன்றிரவு நான் தஞ்சைக்கு அவனை என்னுடன் அழைத்துச் செல்லுகிறேன்.

வேங் :—சரி. நான் சென்று சற்று சிரமபரிகாரம் செய்து கொள்கிறேன். நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்.

(எழுந்திருந்து போகிறார்)

போன் :—இல்லை. எனக்கும் அலுப்பா யிருக்கு. நானும் சிறிது நேரம் படுக்கப்போகிறேன். சபாபதி! நீ வேண்டுமானால் இக்கட்டிலில் படுத்துக்கொள்.

(பொன்னுசாமி அய்யரும் போகிறார்.)

## காட்சி 7.

காலம் :—இரவு மணி 10.

இடம் :—தாசி ரமணி வீடு

[கம்பளித்தேவன் தன்னிரு ஆட்களோடு ஒரு குதிரை வண்டியில் தாசி ரமணி வீட்டு வாசலில் வந்து இருக்கிறான். வீட்டு வாசற் கதவை இரண்டு தடவை மெதுவாகத் தட்டவே ரமணி வந்து கதவைத் திறக்கிறாள். கம்பளித்தேவன் தன் ஆட்களோடு உள்ளே செல்லுகிறான்.]

க. தேவன் :—ரமணி! அப்பெண் என்ன செய்கிறாள்?

ரமணி :—நன்றாகத் தூங்கினாள். அவளுக்கு ஆகாரத்தோடு மயக்க மருந்தையும் கொடுத்திருக்கிறேன். இப்

போதைக்கு அவள் எழுந்திருக்கமாட்டாள். அவளை தூக்கிச் செல்வதில் ஒரு இடைஞ்சலும் இருக்காது.

க. தேவன் :—"அப்படியா! ரொம்பவும் சரி." என்று கூறி தன் ஆட்களை நோக்கி "ஏ வீரா, சூரா! நீங்களிருவரும் அந்த உள்ளே படுத்திருக்கும் பெண்ணின் கை கால்களைக் கட்டி அப்படியே அசங்காமல் தூக்கி வண்டியில் கொண்டுபோய் வையுங்கள்." என்று உத்தரவு செய்கிறான்.

(வீரனும், சூரனும் அவ்வுத்தரவை நிறைவேற்றுகிறார்கள்).

க. தேவன் :—ரமணி! நான் சென்று வருகிறேன். இவ் விஷயம் உன் மனதில் இருக்கட்டும். யாரிடமும் வெளியிடாதே.—என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்து வண்டியில் ஏறிக்கொள்கிறான்.

(உடனே வண்டி புறப்பட்டுச் செல்கிறது.)

## காட்சி 7 (a)

காலம் :—இரவு மணி 11.

இடம் :—தஞ்சாவூரில் கம்பளித் தேவனின் பாழ் வீடு.

[அதிக ஜன நடமாட்ட மில்லாத ஏழை ஜனங்கள் வசிக்கும் ஒரு தெருவில் கம்பளித்தேவனின் வீடு இருக்கிறது. அவ்வீட்டு வாசலில் குதிரை வண்டி வந்து நிற்கிறது. அதிலிருந்து கம்பளித் தேவன் இறங்கி வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போகிறான். கம்பளித்தேவனை பின் தொடர்ந்து வீரனும், சூரனும் ஜெயாவை தூக்கிக் கொண்டு உள்ளே போகிறார்கள். இவர்கள் கீழே யிறங்கியதும் குதிரை வண்டி சென்று விடுகிறது.

உள்ளே சென்ற கம்பளித் தேவன் ஒரு அறையைத் திறந்து "எய், இந்த உள்ளேயுள்ள கட்டிலில் அப்பெண்ணை கிடத்துங்கள். இனிமேல் நீங்களிருவரும் இப் பெண் வெளியே செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது. அவ்வப்போது இப்பெண்ணுக்கு வேண்டிய ஆகாராதிகளைக் கொடுக்க வேண்டியது. இப் பெண் ஏதாவது கேட்டால் பதில் சொல்லாதீர்கள். எங்கேயாவது வெளியில் செல்லவேண்டி யிருந்தால் கதவைப் பூட்டிச் செல்ல மறந்து விடாதீர்கள்." என்று கட்டளையிடுகிறான்.

வீரனும், சூரனும் ஜெயாவை கட்டிலில் படுக்கவைத்து அவளது கை கால்களுடைய கட்டுகளை அவிழ்த்துவிட்டு, "சரிங்க. நீங்க சொன்னபடி நடந்துக்கிறோங்கோ." என்கிறார்கள்.

பின் மூவரும் வெளியே வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு போகிறார்கள்.]

## அங்கம் 10—காட்சி 1

காலம் :—காலை மணி 7.

இடம் :—தஞ்சாவூரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யரின் அறை.

[பொன்னுசாமி அய்யரும், சபாபதியும் ஒரு மேஜைக்கருகே உட்கார்ந்து கொண்டு காப்பி சாப்பிடுகிறார்கள்.]

பொன் :—சபாபதி! காப்பிக்கு சர்க்கரை போதுமா? வேண்டுமானால் கொஞ்சம் போட்டுக்கொள்.

சபா :—வேண்டாம். சரியாய் இருக்கிறது.

பொன் :—(காபி சாப்பிட்டபின்.) சரி, ட்ரஸ் செய்து கொண்டு புறப்படு. முருங்கப்பேட்டைக்குப் போகலாம்.

(உடனே சபாபதி ஒரு வேலைக்கார பையன் போல் வேடமணிந்து வருகிறான்.)

போன் :—பேஷ்! வேஷம் பொருந்தியிருக்கே. அந்த பெட்டியை எடுத்துக்கொள். வா போகலாம்.

(சபாபதி மேஜையின்மேலிருந்த ஒருசிறு பெட்டியை எடுத்துக்கொள்கிறான். இருவரும் வெளியே செல்கிறார்கள்.)

## காட்சி 2.

காலம் :—காலை 9 மணி.

இடம் :—கம்பளித்தேவனின் பாழ்வீடு.

[முதல் நாளிரவு கொடுத்த போதையினால் தன் நினைவையிழந்து தூங்கிக்கொண்டிருந்த ஜெயா மணி ஒன்பதுக்கு எழுந்திருக்கிறாள். தான் இப்பொழுது இருக்குமிடம் புதியதாய் இருப்பதையும், முன்னிருந்த இடத்தைவிட தூசி படிந்து அசுத்தமாயிருப்பதையும் கண்டு ஆச்சர்யமுற்று சுற்றிமுற்றிப் பார்க்கிறாள். வாசற்படிக்கு அருகில் இரண்டு முரடர்கள், தன்னை அன்று தூக்கிவந்த முரடர்கள், ஏதோ பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிடுகிறாள்.]

வீரன்:—ஏய், சூரா! அந்தப் புள்ளே எளுந்திடுச்சுடா; போய் பால் கொண்டுட்டு வாடா.

சூரன்:—அப்படியா! இதோ கொண்டுட்டு வாறேன்.

(சூரன் எழுந்து சென்று ஒரு தகரக்குவளையில் பசும் பால் கொண்டு வருகிறான். அதை ஜெயாவிடம் அளிக்கிறான்.)

ஜெயா:—(வாங்கிக்கொள்ள மறுத்து) அப்பா! எனக்குப் பால் வேண்டாம். நான் இப்பொழுது எங்கிருக்கிறேன்

என்று சொல். நான் முன்னிருந்த இடத்தை விட்டு எப்படி இங்கு வந்தேன்?

சூரன்:—அம்மா! அதெல்லாம் என்னைக் கேக்காதே. நீ என்ன கேட்டாலும் சொல்லக்கூடாதுன்னு எங்க எசமான் சொல்லியிருக்காரு. இன்னும் கொஞ்சம் நாளிக்கெல்லாம் எங்க எஜமான் வருவாரு, அவரையே எல்லாத்தையும் கேட்டுக்கோ.

ஜேயா:—உங்க எசமான் யார்? அதையாவது சொல்லக் கூடாதா?

சூரன்:—என்னாலே ஒன்னும் சொல்ல முடியாது. நான் பாலே இங்கேயே வச்சுட்டுப் போறேன். குடிச்சாகுடி, இல்லாட்டா போ.

வீரன்:—(வெளியே இருந்த வண்ணம்) ஏண்டா, சூரா! அந்த புள்ளே பால் குடிக்க மாட்டேங்கறதா?

சூரன்:—ஆமா, அண்ணே!

வீரன்:—சரி, பாலே கீளே வச்சுட்டு வா. அது என்னவாணு செஞ்சுக்கட்டும்.

(சூரன் பாலே கீழே வைத்துவிட்டு வெளியே செல்கிறான். கம்பளித் தேவன் அப்பொழுது அங்கு வருகிறான்)

க. தேவன் :—அந்தப் புள்ளே என்னடா செய்கிறது?

வீரன் :—இப்பத்தானுங்க எளுந்துகிட்டுது. பால் கொண்டுபோய் கொடுத்தோம். வேண்டாம்னு சொல்லிப் பிடுச்சு.

க. தேவன் :—சரி வா, போய் பார்க்கலாம்.

(மூவரும் ஜெயாவின் அறைக்குள் செல்லுகிருர்கள். கம்பளித்தேவனின் உருவத்தைக் கண்டு ஜெயா பயப்படு கிருள்.)

ஜெயா :—ஐயோ அப்பா! பயமாயிருக்கே! வருகிறது யார்? கரும்பூதமா? பிசாசா? என்று சொல்லி முகத்தை கையால் மறைத்துக் கொள்கிருள்.

க. தேவன் :—பெண்ணே! பயப்படாதே. நான் பிசாசு மல்ல, பூதமுமல்ல. மனிதன்தான் இவ்விதம் உடை யணிந்திருக்கிறேன்.

ஜெயா :—(மெதுவாக கண்ணைத்திறந்து பார்த்து) மனி தனு? அப்படியானுல் நீ யார்? ஏன் இவ்விதம் உடை யணிந்திருக்கிருய்?

க. தேவன் :—நான்தான் கம்பளித்தேவன்! உன்னை அப கரித்துக்கொண்டுவந்தவன்.

ஜெயா :—கம்பிளித்தேவனு? கொள்ளைக்கார கம்பிளித் தேவனு? ஐயோ! கேட்க பயமாயிருக்கே. என்னை எதற்காக அபகரித்து வந்தாய்? என்னை என்ன செய் யப்போகிருய்?

க. தேவன் :—உனக்கு ஒரு கெடுதலும் செய்யமாட்டேன். வீணுக கலவரப்படாதே. நான் சொல்லுகிறபடி நடந்து கொண்டால் நீ உன் தகப்பனுரை அடையமுடியும்.

ஜெயா :—எப்படி? என் தகப்பனுரையடைய எது செய்யச் சொன்னுலும் செய்கிறேன்,

க. தேவன் :—அப்படியானல் இந்தக் கடிதத்தில் நான் சொல்கிறபடி எழுது.

(ஒரு கடிதத்தையும் பென்ஸிலேயும் ஜெயாவிடம் அளிக்கிருன்.)

ஜெயா :—(கடிதத்தையும் பென்ஸிலேயும் பெற்றுக் கொண்டு) என்ன எழுதவேண்டும் சொல்.

(கம்பளித்தேவன் பின் வருமாறு சொல்கிருன். ஜெயா அவ்விதமே எழுதுகிருள்.)

அப்பா அவர்களுக்கு ஜெயா அநேக நமஸ்காரம். இப்பவும் நான் சில முரடர்களால் தஞ்சாவூருக்குத் தூக்கிக்கொண்டு வரப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு ஏதாவது கொஞ்சம் பணம் கொடுத்தால் விட்டுவிடு கிறேன் என்கிருர்கள். ஆகையால் தாங்கள் இக்கடிதம் கண்டவுடன் ஒரு நிமிஷநேரங்கூட தாமதம் செய்யாமல் பாங்கு செக் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு இக்கடிதம் கொண்டுவரும் ஆளோடு புறப்பட்டு வரவும். இக்கடிதம் கொண்டுவரும் ஆளே ஒன்றும் கேட்கவேண்டாம். இக் கடிதத்தைப்பற்றி ஒருவரிடமும் சொல்லவேண்டாம். இக் கடிதத்தில் கண்டபடி நடக்காமலும், தாங்கள் இங்குவராம லும் இருந்தால் இன்னும் 24-மணி நேரத்திற்குள் நான் உயிர் இழப்பது நிச்சயம். இப்படிக்குத் தங்கள் வரவை எதிர்பார்க்கும்,

தங்கள் பிரியமுள்ள குமாரி,

ஜெயா.

ஜெயா :—(கடிதத்தை எழுதி முடித்ததும்) ஆமாம். இக் கடிதத்தைக்கொண்டு என்ன செய்யப்போகிருய்?

க. தேவன் :—உன் தந்தையை இவ்விடம் வரவழைத்து அவரிடமிருந்து சிறிது பணம் பெற்றுக்கொண்டு உன்னை அவரிடம் ஒப்பிவித்துவிடுவோம்.

ஜெயா :—அவர் அப்படி வரத்தவறினுல் இக்கடிதத்தில் கண்டபடி நான் இறக்கவேண்டியதுதானு?

க. தேவன் :—இல்லை. உன் தந்தை கட்டாயம் இங்கு வருவதற்காக அப்படி எழுதச்சொன்னேன். முக்கால் வாசியும் அவர் வந்து விடுவார். அப்படி ஒரு சமயம் அவர் வரத்தவறினுல் நீ இவ்விடத்தில்சிறைகிடக்கவேண்டியதுதான்.—என்று கூறி பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சூரனிடம் "டேய் சூரா! நீ ஒரு குதிரைவண்டியில் சிறு மருதூர் சென்று சிவராமய்யரிடம் இக்கடிதத்தைக்கொடு. அவர் உன்னை ஏதர்வது கேட்டால் பதில் சொல்லாதே. கடிதத்தைக் கண்டதும் உன்னேடு புறப்பட்டு வந்தால் இவ்விடம் அழைத்து வா. ஆனுல் அவரை நீ அழைத்து வருவது ஒருவருக்கும் தெரியக் கூடாது. உன்னேடு புறப்பட்டு வராமல் உன்னைப் பிடிக்க ஏதாவது ஏற்பாடு செய்தால் தப்பி ஓடி வந்துவிடு. தெரிந்ததா?" என்று சொல்லி ஜெயா எழுதின கடிதத்தைக் கொடுக்கிறுன்.

"அப்படியே செய்கிறேன்." என்று விடை பெற்றுக்கொண்டு கடிதத்தோடு வெளியே செல்கிறுன் சூரன்.

க. தேவன் :—(சூரன் சென்றதும்) பெண்ணே! வீணுக பட்டினி கிடக்காதே; இந்தப் பாலைக்குடி. இன்னும் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஆகாரம் கொண்டு வந்து தரச்சொல்கிறேன். அதை சாப்பிட்டுவிட்டுப்படுத்துக்

கொள். இன்று மாலை உன் தந்தை வந்ததும் உன்னிடம் அழைத்து வருகிறேன்." என்று சொல்லி விட்டு வீரனோடுகூட வெளியே சென்று விடுகிறான்.

## காட்சி 3.

காலம் :—பகல் 2-மணி.

இடம் :—முருங்கப்பேட்டை ஆற்றங்கரை.

[சபாபதி தான் முரடர்களால் அடிபட்டு கீழேவிழுந்துகிடந்த இடத்தை பொன்னுசாமி அய்யருக்குக் காட்டுகிறான்.]

சபாபதி :—இதோ இந்த இடத்தில்தான் அம்முரடர்கள் என்னை அடித்தார்கள். அதோ அந்த தாழைப்புதர் இருக்கு பாருங்கள், அப்பக்கத்திலிருந்து ஒரு ஆள் ஓடி வந்தான். எனது இடதுகை பக்கத்திலிருந்து ஒரு ஆள் வந்தான்.

போன் :—ஓஹோ! அப்படியா? வா, அந்த தாழைப்புதர் பக்கம் சென்று ஆராய்ந்து பார்ப்போம்.

(இருவரும் தாழைப்புதர் பக்கம் சென்று சிறிது நேரம் ஆராய்ந்து பார்க்கிறார்கள். சபாபதி கசங்கிப்போன ஒரு சிறுகடிதத்தைக் கண்டெடுக்கிறான்.)

சபா :—(ஆச்சரியமும், சந்தோஷமும் கொண்டு) இதோ பாருங்கள் இக்கடிதத்தை!

(கடிதத்தைக் கொடுக்கிறான்)

பொன்னுசாமி அய்யர் கடிதத்தை வாசிக்கிறார். அதில் பின் வருமாறு எழுதியிருக்கிறது :—

சூரனுக்கு க. தே. எழுதியது. மிகவும் அவசரமான காரியம். நீ உடனே வீரனை அழைத்துக் கொண்டு என் பாழ் வீட்டிற்கு வரவும். தாமதம் செய்யாதே; அவசரம்.

இப்படிக்கு,
க. தே.

(கடிதத்தை வாசித்து முடித்ததும் பொன்னுசாமி அய்யரின் முகம் சந்தோஷத்தால் மலர்கிறது.)

**பொன் :—**சபாபதி! நான் எதிர்பார்த்த படியே ஒரு துப்பு கிடைத்துவிட்டது. இதிலிருந்து நாம் மற்றவைகளை சுலபமாக கண்டு பிடித்துவிடலாம். இக்கடிதத்தால் உனக்கு ஏதாவது புலப்படுகிறதா ?

சபா :- புலப்படுகிறது. இக்கடிதத்தில் காணப்படும் சூரன், வீரன் என்பவர்கள்தான் என்னை அடித்த முரடர்கள் என்று நினைக்கிறேன். க. தே. என்ற மனிதனால் இவர்கள் ஏவப்பட்டு ஜெயாவைத் தூக்கிச்செல்ல வந்திருக்கவேண்டும். ஜெயாவோடு நானிருப்பதையறிந்து தகுந்தசமயத்தில் அவளைஎன்னிடமிருந்து அபகரித்துச் செல்ல இப்பக்கத்தில் ஒளிந்துகொண்டிருக்கவேண்டும். அப்பொழுது இவ்விடத்தில் ஒளிந்துகொண்டிருந்த சூரன் என்பவனிடமிருந்து இக்கடிதம் அவனை யறியாமல் நழுவி விழுந்திருக்கவேண்டும். இப்பொழுது நாம் சூரன், வீரன், க. தே. இம்மூவர்களில் யாராவது ஒரு ஆளைக் கண்டுபிடித்துவிட்டால் ஜெயா இருக்குமிடத்தை சுலபமாக அறிந்துகொள்ளலாம்.

போன் :—தேவலாமே! நீ நல்ல யூகசாலியாய் இருக்கிறுயே! நீ சொல்லியபடி இம்மூவர்களில் யாராவது ஒரு ஆளைக்கண்டுபிடித்தால் போதுமானது. முதலில் க. தே. என்பது எப்பெயரைக் குறிக்கிறது என்பதை கண்டறியவேண்டும்.

சபா :—சரி. நமக்கு இனிமேல் இங்கு என்ன வேலை? போகலாமே!

போன் :—போகவேண்டியது தான். பெட்டியை எடுத்துக் கொள்; நாம் இப்பொழுது சிருமருதூருக்குப் போவோம்.

சபா :—சிருமருதூருக்கா? அங்கு என்ன வேலை?

போன் :—சிவராமய்யரிடம் இக்கடிதத்தைப் பற்றி அறிவித்து அவர் அபிப்பிராயத்தையும் அறியப்போகிறேன்.

சபா :—அப்படியானுல் தாங்கள் மாத்திரம் சென்றுல் போதாதா? நான் அதற்குள் என் தமக்கையைப்பார்த்து விட்டு வருகிறேன்!

போன் :—இந்த உடையுடனு செல்வது? இப்பொழுது வேண்டாம். இன்னொரு சமயம் வந்து பார்த்துக்கொள். வா போகலாம்.

(போகிறுர்கள்.)

## காட்சி 4.

காலம் :—பகல் 2-மணி.

இடம் :—சிருமருதூரில் சிவராமய்யரின் வீடு.

[சாப்பாட்டிற்குப் பின் சிவராமய்யரும், துரைராஜய்யரும் பேசிக்கொண்டிருக்கிறுர்கள்.]

துரை :—போலீஸுக்குத் தெரியப்படுத்தி யிருப்பதாகச் சொன்னீர்களே. இதுவரையில் ஏதாவது தகவல் வந்ததா ?

சிவ :—இதுவரையில் ஒன்றும் வரவில்லை. எப்படியும் ஜெயாவைக் கண்டுபிடித்து விடுவதாகச் சொல்லிப் போயிருக்கிறான் பொன்னுசாமி.

துரை :—எந்த பொன்னுசாமி? ஜெயாவின் மாமா பொன்னு சாமியையா சொல்லுகிறீர்கள் ? அவர் இங்கே எங்கே வந்தார் ?

சிவ :—பொன்னுசாமிதானே இப்பொழுது தஞ்சாவூர் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிறான் ! இது தெரி யாதா நோக்கு ?

துரை :—எனக்கு இது தெரியவில்லையே ! தஞ்சாவூருக்கு மாத்தி எவ்வளவு நாளாச்சு ? இதற்கு முன் திருச்சி யில் அல்லவா இருந்தார்.

சிவ :—ஆம் திருச்சியிலிருந்து இங்கு மாத்தி ஒரு மாத காலமாகிறது. எனக்குக்கூட முதலில் தெரியாது, அவன் சொல்லிய பிறகுதான் தெரிந்துகொண்டேன். இப்பக்கத்தில் கொள்ளையடித்துவரும் பிரபல கொள்ளைக் காரன் கம்பிளித்தேவனைப் பிடிப்பதற்காக ஸ்பெஷலாக அவனை இங்கு மாற்றியிருக்கிறார்களாம்.

இதைக்கேட்டதும் துரைராஜய்யருக்குத் திக்கென் கிறது. அவரது முகம் கலவரத்தால் வெளுக்கிறது. இதை அவர் சமாளித்துக்கொண்டு "அப்படியா சமா சாரம் ?" என்கிறார்.

இச்சமயத்தில் வாசலில் வந்து நின்ற குதிரை வண்டியிலிருந்து சூரன் இறங்கி உள்ளே வருகிறான்.

சூரன் :—(சிவராமய்யரை நோக்கி) தாங்கள் தானே சிவராமய்யர் ?

சிவ :—ஆம். என்ன வேண்டும் ?

சூரன் :—சற்று வாசற்பக்கம் வாருங்கள். ஒரு சமாசாரம்.

சிவராமய்யர் எழுந்திருந்து சூரனோடு வாசற்திண்ணைக்குப் போகிறார். சூரன் தான் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுக்கிறான். கடிதத்தை வாசித்துப் பார்த்து சிவராமய்யர் திகைப்பும், ஆச்சர்யமும் அடைந்து "சற்று இரு. இதோ என் செக் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வருகிறேன்." என்று கூறி உள்ளே சென்று அவசர அவசரமாய் பீரோவைத் திறந்து செக் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு, துரைராஜய்யரிடம் சொல்லிக்கொள்ளாமல் கூட சூரனோடு புறப்பட்டுப் போய்விடுகிறார்.

இவைகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு ஒன்றும் புரியாமல் கற்சிலையாய் உட்கார்ந்திருக்கிறார் துரைராஜய்யர். சிவராமய்யர் போகும் அவசரத்தில் தனக்கு வந்த கடிதத்தை கை நழுவி விட்டுவிடுகிறார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த துரைராஜய்யர், சிவராமய்யர் சென்றதும் அக்கடிதத்தை எடுத்து வாசிக்கிறார். உடனே "மீனா! மீனா!!" என்று தன் தங்கையைக் கூப்பிடுகிறார்.

"என்ன அண்ணா? எதுக்காக கூப்பிடறேள்?" என்று கேட்டுக்கொண்டே சமையலறையிலிருந்து வருகிறாள்.

துரை :—இந்தா, இந்த கடிதத்தைப் பார். நமக்கு விநாச காலம் வந்துவிட்டது.

மீனாக்ஷி :— என்ன அண்ணா! அப்படிச்சொல்றேள்? கடித மாவது விநாசகாலமாவது, அவர் எங்கே காணோம்?

துரை :—உன் புருஷன் தானே! அவருக்குத்தான் இந்த கடிதம் வந்தது. யாரோ ஒரு ஆள் கொண்டுவந்து கொடுத்தான். கடிதத்தை வாசித்ததும் அவசரம் அவ சரமாக செக் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு அவ னோடு போய்விட்டார்.

மீனாக்ஷி :—(கடிதத்தை வாங்கி வாசித்துவிட்டு.) அய் யய்யோ! அப்ப நம்ப காரியமெல்லாம் கெட்டுப் போச் சுன்னு சொல்லு! கம்பளித்தேவனுக்கு 1000 ரூ. அழு ததுதானு மிச்சம்!

(இவ்வார்த்தைகள் அப்பொழுதுதான் சிவராமய் யரைப்பார்ப்பதற்காக ரேழி நடையில் வந்துகொண்டிருந்த பொன்னுசாமி அய்யர், சபாபதி இவர்களின் காதில் விழு கிறது. இதைக்கேட்டதும் இருவரும் பேராச்சர்யங் கொண்டு தயங்கி நிற்கிறார்கள்.)

துரை :— உஸ்! பலக்கப்பேசாதே. வருகிறவா யார் காதி லாவது விழப்போகிறது. முதல்லே வாசற் கதவைச் சாற்றிவிட்டு வா.

(மீனாக்ஷி வாசற் கதவைச்சாற்ற வருகிறாள். அவள் வரும் சப்தத்தைக்கேட்டு பொன்னுசாமி அய்யரும், சபா பதியும் சட்டென்று ரேழி நடையில் அடுக்கியிருந்த நெல்லுச்சாக்கு மூட்டைகளுக்குப்பின் ஒளிந்துகொள்ளு

கிறார்கள். மீனாக்ஷி கதவைச்சாற்றிவிட்டு கூடத்துக்குப் போகிறாள்.)

துரை :—அந்த அயோக்கியப் பயல் என்னிடமிருந்து 1000 ரூ. வாங்கிக்கொண்டது போதாதென்று உன் புருஷனிடமிருந்து வேறு பணம் பறிக்கப் பார்க்கிறான். இருக்கட்டும்! அவனை லேசில் விட்டுவிடுவேனா?

மீனாக்ஷி :—பணம் போனால் போகட்டும். அந்தப் பாவி நம்மைப்பற்றி என் புருஷனிடம் சொல்லாமலிருக்க வேண்டுமே!

துரை :—அதைப்பற்றி நீ பயப்படவேண்டாம். ஜெயாவை ஒழிப்பதில் நீ சம்பந்தப்பட்டிருப்பது அவனுக்குத் தெரியாது. சொன்னால் என்னைப்பற்றித்தான் சொல்ல வேண்டும். இதற்கெல்லாம் நான் கவலைப்படப்போற தில்லை. எப்படியும் இதிலிருந்து தப்பித்துக்கொள்ள எனக்குத் தெரியும்.

மீனாக்ஷி :—இந்த துன்பத்துக்குத்தான் நான் மூணும் மனுஷ்யா விவகாரமே வேண்டாம்னு சொன்னேன். சிவனேனு நம்ப தாண்டவராயனைக்கொண்டு இந்த வேலையை முடிச்சிருந்தா இப்படி விசாரப்படவேண் டாம் பாரு.

துரை :—தாண்டவராயன்மட்டும் கிழிச்சானுக்கும்.இப்பப் பார் அந்த நாயை! உண்ட வீட்டுக்கு ரெண்டு நினைக் கிறது. இப்ப 1000 ரூ. கொடுத்தாப்போச்சு இல்லா ட்டா நம்ப சாமாசாரத்தை வெளியிலே விட்டுடு வேன்னு பயமுறுத்தறான்.

மீனுக்ஷி :—அட பாவமே! அவன் வேறே நமக்கு எமனு வந்திருக்கானு?

துரை :—என்ன செய்யறது? ஒரு காரியத்துலே தலையிட்டுண்டா பல சங்கடம் வந்து சேறது. முதமுதல்லே அந்த தாண்டவராயனுக்குப் பணத்தைக் கொடுத்துத் தொலைக்கனும். அதுக்குத்தான் உங்கிட்டே பணம் கேட்டு வாங்கிண்டு போகலாம்னு வந்தது. வந்த இடத்திலே இந்த விபரீதம் வேறே வந்திருக்கு.

மீனு :—ஆமாம். இப்ப ஜெய்யா திரும்பி வந்துவிட்டால் நாம் செய்த காரியமெல்லாம் வீண்தானே? இதற்கென்ன செய்கிறது?

துரை:—அதுக்கு நான் ஒருயோசனை சொல்கிறேன் கேள். நீ இன்னும் ஒரு 1000 ரூ. கொடு. நான் மறுபடியும் கம்பிளித்தேவனைக்கண்டு அவனுக்கு இப்பணத்தைக் கொடுத்து இனிமேல் அவன் நமது வழிக்கு வராமலும்; ஜெயாவை ஒரேயடியாய் ஒழிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்கிறேன்.

மீனு :—சரி. தாண்டவராயனுக்கும் கம்பளித்தேவனுக்குமாக இப்பொழுது 2000 ரூ. தருகிறேன். இதற்குள் எல்லா காரியத்தையும் பார்த்துக்கொள்ள வேண்டியது. இனிமேல் என்னை நீ ஒரு பைசாகூட கேட்கக்கூடாது.

துரை : – இல்லை. சீக்கிரம் பணத்தைக்கொண்டுவா. கார்யம் மிஞ்சுவதற்குள் எல்லாவற்றையும் சரிப்படுத்தவேண்டும்.

உடனே மீனுட்சி உள்ளே சென்று இரும்புப் பெட்டியைத் திறந்து 2000 ரூ. நோட்டுகளாகக் கொண்டுவந்து துரைராஜய்யரிடம் அளிக்கிறுள். துரைராஜய்யர் மலர்ந்த முகத்துடன் பணத்தைப் பெற்றுக்கொண்டு 'மீனுக்ஷி! நீ

ஒன்றும் பயப்படாதே, தைரியமாயிரு. நான் எல்லா வற்றையும் பார்த்துக்கொள்கிறேன்." என்று சொல்லி விட்டு தன்னிருப்பிடத்திலிருந்து எழுந்திருந்து வெளியே போகிறார்.

மீனாக்ஷியும் அவரோடுகூட சென்று வாசற்கதவைத் திறந்து வழியனுப்பி விட்டு உள்ளே போகிறாள். இவ்வளவு நேரம் வரையில் சாக்கு மூட்டைகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு எல்லா சம்பாஷணைகளையும் கேட்டுக்கொண்டிருந்த பொன்னுசாமி அய்யரும், சபாபதியும் தங்களிருப்பிடத்தைவிட்டு வெளிவந்து வாசற்பக்கம் சென்று விடுகிறார்கள்.

## காட்சி 5.

காலம் :—மாலை மணி 4.

இடம் :—கம்பளித்தேவனின் பாழ்வீடு.

[பாழ்வீட்டில் ஓர் அறை. அவ்வறை அசுத்தமாய் இருக்கிறது. அவ்வறையில் சில இடங்களில் எரிந்துபோன சிகரெட், பீடி துண்டுகளும், சில இடத்தில் கிழிந்த கடுதாசிகளும் வாரியிறைந்திருக்கின்றன. அறையின் நடுவில் ஒரு வட்டமேஜையும், அதன்பக்கத்தில் ஒரு நாற்காலியும் போடப்பட்டிருக்கிறது. இந்த நாற்காலியின்மேல் வேண்டா வெறுப்புடன் சிவராமய்யர் உட்கார்ந்திருக்கிறார்.]

சிவ :—(தனி மொழியில்) எங்கே அந்த ஆள் இன்னும் வரக்காணும்? தன் எசமானையும், ஜெயாவையும் கூட்டி வருவதாகச் சொன்னானே. அவர்கள் வந்து எவ்வளவு பணம் கேட்பார்களோ தெரியவில்லையே! எவ்வளவு கேட்டால்தான் என்ன! கொடுக்கத் தயார். எப்படியாவது என் ஜெயாவை நான் அடைந்தால் சரி.—என்று அவர் சொல்லி முடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் கம்பளித் தேவன் தன் ஆட்களோடு அங்கு வருகிறான்

(கம்பளித் தேவனைக் கண்டு சிவராமய்யர் பிரமிப் படைகிறார்.)

க. தேவன் :—(சிவராமய்யருக்கு எதிர் பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு) என்னைக் கண்டு தாங் கள் ஆச்சரியமோ, பயமோ அடையவேண்டாம். நான் யார் என்பதை முதலிலேயே உங்களுக்குச்சொல்லிவிடு கிறேன். நான்தான் பெயர்பெற்ற கம்பளித்தேவன்.

சிவ :—(திகைப்புடன்) கம்பளித்தேவனா?

க. தேவன் :—ஆம். தங்கள் பெண்ணை அபகரித்து வந்த வனும் நான்தான். இப்பொழுது தாங்கள் நான் கேட் கும் தொகையை அளித்தால் உங்கள் பெண்ணை உங்க ளிடம் ஒப்பிவித்து விடுகிறோம்.

சிவ:—எவ்வளவுதொகைவேண்டுமானாலும் கொடுக்கிறேன். முதலில் என்பெண் இருக்குமிடத்தைக் காண்பியுங்கள்.

க. தேவன் :—உமது பெண் பக்கத்தறையில் தூங்கிக் கொண்டிருக்கிறாள். இப்பொழுது தாங்கள் 5000-ரூக்கு செக் எழுதுங்கள். அதற்குள் நாங்கள் உங்கள் பெண்ணை அழைத்து வருகிறோம்.

சிவ :—சரி, யார் பெயருக்கு செக் எழுதுவது?

க. தேவன் :–வீரய்யாவாண்டையார் (வீரன்) என்ற பெய ருக்கு எழுதுங்கள்.

(கம்பளித்தேவன், வீரன், சூரன் மூவரும் வெளியே செல்கிறார்கள். சிவராமய்யர் தன்னிடமுள்ள பேனாவால் செக் எழுதுகிறார்.).

வெளியே வந்த கம்பளித்தேவன் தன் ஆட்களிடம் இரகசியமாக "ஏய்! நீங்களிருவரும் அவர் செக் எழுதி

முடிந்ததும் உள்ளேசென்று அவரை நாற்காலியிலேயேகட்டிப்போட்டுவிட்டு எழுதின செக்கையும், புஸ்தகத்தையும் எடுத்துக்கொண்டு வந்து விடுங்கள்." என்று உத்திரவு செய்கிறான். "ஆகட்டும்." என்பதற்கறிகுறியாக இருவரும் தலையை ஆட்டுகிறார்கள்.

சிவராமய்யர் செக் எழுதி மேஜையின்மேல் வைத்துக்கொண்டு தன் பெண்ணின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார். அச்சமயத்தில் வீரனும் சூரனும் உள்ளே வந்து திடீரென்று சிவராமய்யர் மேல் பாய்ந்து அவரை ஒரு கயிற்றால் நாற்காலியோடு வைத்துக் கட்டிவிடுகிறார்கள். பின் செக்கையும், செக் புஸ்தகத்தையும் கையில் எடுத்துக் கொள்கிறார்கள்.

சிவ :—(எதிர் பாராத இச்செய்கையால் திகைப்பும், கோபமும் கொண்டு) அட திருட்டுப் பயல்களா! என்னை எதற்காக இப்படி கட்டிப் போட்டீர்கள்? என் பெண் எங்கே? மரியாதையாக என்னை விடுவியுங்கள்.

வீரன்—(கேலிச் சிரிப்புடன்) ஐயா எதற்காக இப்படி கத்துகிறீர்கள்? கத்துவதில் பிரயோசனமில்லை. இச் செக்கை பணமாக மாற்றும் வரையில் அதாவது நாளை மாலை 2 மணி வரையில் நீர் இந்த ஸ்திதியில்தான் இருக்கவேண்டும். எங்கள் கையில் பணம் வந்த பின் நீரும் உமது பெண்ணும் விடுவிக்கப் படுவீர்.—என்று கூறிவிட்டு சூரனோடு அவ்வறையின் கதவைச் சாற்றிக் கொண்டு வெளியே சென்று விடுகிறான்.

"ஆஹா! நான் ஏமாந்து போனேன். ஆழந்தெரியாமல் காலிட்டுக் கொண்டேன். கடவுளே! நீர் தான் என்னை இம்முரடர்கள் கையிலிருந்து காப்பாற்றவேண்டும்." என்று அங்கலாய்த்துக் கொள்கிறார் சிவராமய்யர்.

## காட்சி 6.

காலம் :—இரவு 7 மணி.

இடம் :—போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யர் அறை.

[பொன்னுசாமி அய்யரும், சபாபதியும் ஒரு மேஜைக்கருகில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள்].

பொன் :—சபாபதி! இன்று நாம் எதிர்பார்த்ததைவிட நல்ல புலன் நமக்குக் கிடைத்துவிட்டது. ஜெயா காணாமற் போனதற்கு தானே காரணமாய் இருந்துகொண்டு துரைராஜய்யர் அனுவசியமாக உன்னை இம்சித்திருப்பதைப் பார்த்தாயா? க. தே. என்பது நான் தேடிக்கொண்டிருக்கும் கம்பளித்தேவனைத் தான் குறிக்கிறதென்பது துரைராஜய்யர் சம்பாஷணையிலிருந்து நாம் தெரிந்துகொண்டுவிட்டோம். இனிமேல் நாம் கம்பளித்தேவன் ஜெயாவை எங்கு சிறைவைத்திருக்கிறான் என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

சபா :—துரைராஜய்யரைப் பின்தொடர்ந்து அவரைக் கண்காணித்தால் கம்பளித்தேவனைக் கண்டுபிடித்து விடலாம் என்று நினைக்கிறேன்.

பொன் :—ஆம். அதோடுகூட தாண்டவராயனை பயமுறுத்தி அதட்டிக்கேட்டால் துரைராஜய்யரைப்பற்றி அவனுக்குத்தெரிந்த இரகசியங்களைச்சொல்லிவிடுவான்.

சபா :—அப்படியானால் நாளைக்கு நாம் மறுபடியும் முருங்கப்பேட்டைக்குப் போவோமா?

பொன் :—நாளையதினம் எனக்கு வேறுகாரியம் இருக்கிறது. உன்னால் முடியுமானால் நீ மாத்திரம் மாறுவேடமணிந்து முருங்கப்பேட்டைக்குப்போய் துரை

ராஜய்யரின் நடவடிக்கைகளை கவனித்துவா. அப்படியே உன் அக்காவையும் பார்த்துவிட்டு வரலாம்.

சபா :—முருங்கப்பேட்டைக்குச் செல்ல எனக்கு மிகவும் சந்தோஷமே! நான் நாளையதினம் செல்லும்பொழுது தயவுசெய்து நான் கேட்ட உதவியைச் செய்யவேண்டும்.

போன் :—என்ன, பணம்தானே? அதற்கென்ன? நாளைக்கு 'லட்சுமி பாங்கு'க்கு ஒரு செக் தருகிறேன். பெற்றுக்கொண்டுபோ. வா, ஏதாவது ஆகாரம்செய்து விட்டு வரலாம், ரொம்பவும் பசிக்கிறது.

(இருவரும் எழுந்து செல்கிறார்கள்.)

## காட்சி 7.

**காலம் :**—இரவு 10 மணி.

**இடம் :**—கிராமச் சாவடி.

**துரை :**—தாண்டவராயா! வீணாக வம்பு செய்யாதே. உன்னை வேலையில் வைத்துக்கொள்ள அம்மாவுக்கு இஷ்டமில்லை. சிவனேனு நான் கொடுக்கும் 500ரூபாயை எடுத்துக்கொண்டு போய்விடு. இனிமேல் என் வழிக்கு வராதே.

**தாண் :**—அதெல்லாம் முடியாதுங்க. ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பைசாகூட குறையமாட்டேனுங்க.

**துரை :**—அட துரோகி! என்னமோ கொடுத்து வச்சிருக்கிறவன் மாதிரி கேட்கிறாயே! உண்ட வீட்டுக்கு ரெண்டு நினைக்கிற பாவி. இதுவரையில் உனக்காக எவ்வளவு பணம் செலவழித்திருக்கிறேன் என்பதைக்கூட நினைக்காமல் ஒரே பிடிவாதம் பிடிக்கிறாயே.

தாண்:—சும்மாத்தானுங்களா எனக்குப் பணம் செலவளிச்சீங்க? உங்களுக்காக நான் எவ்வளவு பண்ணுத அக்கிரமத்தெல்லாம் பண்ணி பாவத்தைக் கட்டிண்டுருக்கேன். அதுக்கு நீங்க லச்ச ரூபா கொடுத்தாக்கூட போருதே; என்னமோ இந்த ஆயிரம் ரூபாய்க்குக் சொல்ல வந்துட்டீங்களே.

துரை:—அப்பன்னு இந்த ஆயிரம் ரூபாய்க்குக் குறைஞ்சு வாங்கமாட்டாயா?

தாண்:—அதான் ஒரு பைசாகூட குறைய மாட்டேன்னு முன்னடியே சொல்லிட்டேனுங்களே!

துரை:—அப்படியா? அட எஜமானத் துரோகி; இந்தா உன் பணம். இனிமேல் என் வழிக்கு வராதே. என் முகத்திலும் முழிக்காதே.—என்று ஆத்திரத்துடன் 1000 ரூபாய் நோட்டுகளையும் எறிகிறார்.

தாண்டவராயன் மிகுந்த ஆவலுடன் கீழேகுனிந்து நோட்டுகளைப் பொருக்குகிறான். இதுதான் சமயமென்று துரைராஜய்யர் தாண்டவராயன்மேல் பாய்ந்து அவனை மல்லாக்காக தரையில் தள்ளி, அவன்மேலேறி உட்கார்ந்து கொண்டு "அடே பாதகா! நீ இருக்கும் வரையில் எனக்கு ஆபத்துதான். உன்னை இப்பணத்துடன் செல்லவிட்டால் நீ மறுபடியும் என்னைவந்து பயமுறித்திப் பணம் பறிப்பாய். மேலுலகத்திற்கு உன்னை யனுப்பினால்தான் நான் கவலையற்று இருக்கமுடியும்." என்று சொல்லி தாண்டராயனின் கழுத்தை தன்னிருகைகளாலும் அமுக்கிக் கொல்கிறார்.

தன்னை விடுவித்துக்கொள்ள தாண்டவராயன் கைகால்களை உதைத்துக்கொண்டு, பிரயோசனப்படாமல் கடைசி

யாக மூச்சுத்திணறி முழிபிதுங்க விறைத்தக்கட்டையாய் விடுகிருன். "பயல் ஒழிந்தான், இனிமேல் இவனது தொல்லே இல்லே." என்று கூறிக்கொண்டே துரைராஜய்யர் தாண்டவராயனே விட்டுவிட்டு, கீழே இறைந்துகிடந்த நோட்டுகளைப் பொருக்கி ஒன்றுசேர்த்துத் தன் மடியில் வைத்துக்கொள்கிருர். பின், "இப்பயலே இங்கேயே விட்டுச்சென்ருல் நாளேயதினம் இவனேப் பார்ப்பவர்கள் நம் மேல் சந்தேகிப்பார்கள். ஒரேயடியாய் இவனே ஆற்றில் கொண்டுபோய் எறிந்துவிடுவதுதான் நலம்." என்று சொல்லியவண்ணம் தாண்டவராயனின் உடலேத் தூக்கிக் கொண்டுபோய் சமீபத்தில் இருந்த ஆற்றில் எறிந்துவிட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்றுவிடுகிருர்.

ஆற்றில் ஏதோவொன்று தொப்பென்று விழுந்த சப்தத்தை அச்சமயம் ஆற்றுப் பக்கமாக வந்துகொண்டிருந்த ராமநாதன் கேட்கிருன். அதோடு ஒரு ஆள் (துரைராஜய்யர்) சிறிது தூரத்தில் ஓடுவதையும் பார்க்கிருன். உடனே ராமநாதன் ஆற்றில் இறங்கி யாருடைய உடலோ தண்ணீரில் அமுங்குவதைக் கண்டு, அதை சிரமப்பட்டுத் தூக்கி வந்து கரையில் சேர்க்கிருன். நிலா வெளிச்சத்தில் அவ்வுருவத்தைப் பார்க்க அவ்வூர் தலேயாரி தாண்டவராயன் என்று அறிகிருன். தாண்டவராயனின் தேகத்தைப் பரிசோதித்துக் கொண்டே "அடாடா! இவன் இவ்வூர் தலேயாரி தாண்டவராயன் அல்லவா? இவனே இப்படி ஆற்றில் எறிந்துவிட்டுச் சென்ற ஆள் யாரேன்று தெரியவில்லேயே? இப்படி மூச்சுப் பேச்சற்றுக் கிடக்கும் இவனே என்ன செய்வது? தேகத்தில் சிறிது உஷ்ணம் இருப்பதால் ஆள் இறக்கவில்லே என்று தோன்றுகிறது. சரி வந்தது வரட்டும்; நானே இவனே என் வீட்டிற்கு மெதுவாக எடுத்

துச்சென்று தகுந்த சிகிச்சை செய்கிறேன்.'' என்று தானு கவே கூறிக்கொள்கிருன். பின் சிரமப்பட்டு தாண்டவரா யனைத்தூக்கித் தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு செல்கிருன்.

## அங்கம் 11.—காட்சி 1.

காலம் :—காலை 9-மணி.

இடம் :—தஞ்சாவூர் லட்சுமி பாங்கு.

பாங்கில் சிலர் பணம் போடுவதும், சிலர் பணம்வாங்குவதும், குமாஸ்தாக்கள் தங்களுக்கிருக்கும் பியூனை ஏதாவது காரியம் ஏவிக் கொண்டும், எழுத்துவேலையைக் கவனித்துக் கொண்டும், காஷியர் பணத்தைத் தட்டிக்கொட்டி வாங்குவதும் இப்படியாக பாங்கு கல கலப்பாக இருக்கிறது.

சபாபதி முஸ்லீம் உடையில் பொன்னுசாமி அய்யர் தனக்குக் கொடுத்த செக்கை மாற்ற இங்கு வருகிருன். பாங்குக்குள் அவன் செல்லும்பொழுது பாங்கியிலிருந்து வீரன் வெளியே வருவதைப் பார்க்கிருன். உடனே ஆச்சர்யமும், சந்தோஷமுமடைந்து "ஆஹா! அன்று என்னை அடித்த முரடர்களில் இவன் ஒருவ னல்லவா? இப்பொழுது நன்ருக ஞாபகம் வருகிறது. அடையாள. மும் நன்கு தெரிகிறது. அதே பயங்கரமான அடர்ந்த மீசை இருக்கிறது. அவ்வாள்தான் இவன். சரி, சரி, செக் அப்புறம் மாற்றிக்கொள்ளலாம். இப்பொழுது இவனை விடாமல் தொடர்ந்து செல்வதுதான் நல்லது." என்று தனக்குள்ளாக சொல்லிக்கொள் கிருன்.

முஸ்லீம் உடையிலிருந்த சபாபதியை வீரன் அடையாளம் தெரிந்துகொள்ளாமல் தன் பாட்டில் விர்ரென்று செல்கிருன் பல சந்து பொந்துகள் வழியாகச் சென்று தஞ்சை டவுனுக்கு வதுக்குப் புறமாயிருந்த ஒரு தெருவில் புகுந்து அங்கிருந்த கம்பளித்

தேவனின் பாழ் வீட்டிற்குள் சென்றுவிடுகிறான். வீரன் சந்தேகங் கொள்ளாவண்ணம் சபாபதி அவனைப் பின்தொடர்ந்து வந்து பாழ் வீட்டை அடையாளங்கண்டுகொண்டு, இது விஷயத்தை இன்ஸ்பெக்டரிடம் தெரிவிக்க விரைந்து செல்கிறான்.

## காட்சி 2.

காலம் :—காலை 9 மணி.

இடம் :—சுந்தரியின் வீடு.

[ராமநாதன் தாழ்வாரத்திலுள்ள ஒரு கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். சிறிது தூரத்தில் சுந்தரி நின்று கொண்டிருக்கிறாள். ராமநாதனின் கால்களைப் பிடித்த வண்ணம் தாண்டவராயன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துகொண்டிருக்கிறான்.]

ராம :—அப்பா, தாண்டவராயா! எழுந்திரு நீ எனக்குச் செய்த குற்றத்தையெல்லாம் மன்னித்து விட்டேன்.

தாண் :—(கண்களில் நீர்பெருக எழுந்து நின்று) சாமி! பாவி, உங்க மனைவிக்கு நான் செஞ்ச தீங்குக்கு என்னை எவ்வளவு தண்டித்தாலும் தோசமில்லை. ஆனா நீங்களோ யமன்வாயிலேயிருந்த என்னைக் காப்பாத்தி, எனது குத்தத்தையும் மன்னிச்சுப்புட்டீங்களே! இது உங்களுடைய பெருந்தன்மையான குணத்தை நல்லா காண்பிக்குது. இந்த உதவிக்கு என் தோலை உங்களுக்கு செருப்பாத் தச்சுப் போட்டாலும் தகும்.

ராம :—அப்பா! அப்படியெல்லாம் சொல்லவேண்டாம். போனது போகட்டும், இனிமேலாவது தீய வழிகளில் செல்லாமல் ஒழுங்காக நடந்துகொள்.—என்று சொல்லி விட்டு சுந்தரியை நோக்கி "சுந்தரி! தாண்டவராயன் சொல்லவிட்டல்லவா துரைராஜய்யர் உன்னை மானபங்

கப்படுத்தினூர் என்ற விஷயம் தெரிகிறது. இதை ஏன் நீ என்னிடம் சொல்லவில்லை." என்று கேட்கிருன்.

சுந்தரி :—நாதா! இதைத் தங்களிடம் தெரிவிக்காததற்காக மன்னிக்கவும். துரைராஜய்யரின் சம்சாரம் இச்சமாசாரத்தைத் தங்களிடம் பிரஸ்தாபிக்கவேண்டாமென்று கேட்டுக்கொண்டார்கள். அதோடுகூட இதை தங்களிடம் தெரிவித்தால் தாங்கள் ஏதாவது நினைத்துக் கொள்வீர்களோ வென்றும், இதைக்கேட்டால் தங்கள் மனதிற்கு மிகவும் கஷ்டமேற்படுமென்றும் நினைத்து பேசாமல் இருந்துவிட்டேன்.

ராம:—எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் புருஷனிடம் தெரிவிக்கும் வழக்கம் உன்னிடம் கிடையாது. அதுபோல் இது விஷயத்திலேயும் இருந்துவிட்டாயாக்கும். உன்னுடைய சுக துக்கங்களை புருஷனிடம் சொல்லிப் பங்கிட்டுக்கொள்ள உனக்கு உரிமை கிடையாதா? இப்படி எவ்வளவு நாள்தான் உன் துக்கங்களை மனதிற் குள்ளாகவே வைத்துக் கொள்ளப்போகிருய்?

சுந்தரி:—அவரவருக்கேற்பட்ட சுகதுக்கங்களை அவரவர்கள் தானே அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணத்தினுல் இதுநாள் வரையில் தங்களிடம் தெரிவிக்காமல் இருந்து விட்டேன். இனிமேல் தங்கள் விருப்பப்படி நடந்து கொள்கிறேன்.

தாண் :—சாமி! இன்னும் ஒரே ஒரு விசயம் உங்களுக்கு சொல்லனுங்க.

ராம :—என்ன அது?

தாண் :—உங்க வீட்டுப்புள்ளை சபாபதி பேரிலே ஒரு குத்தமும் இல்லீங்க. சிவராமய்யா பொண்ணு ஜெயா காணும போனத்துக்கு எங்க எசமாந்தானுங்க—இல்லே, இல்லே—அந்த துரைராசய்யா தானுங்க காரணம்.

ராம :—அப்படியா? நிஜந்தானு இது?

சுந்தரி :—நிஜமாகவா? அப்படியானுல் என் தம்பி சபாபதி குற்றமற்றவனு? எனக்கு அப்பவே தெரியும் தம்பி என் நிரபராதியென்று. சபாபதி! தாய் தந்தையற்ற நீ இப்பொழுது எங்கேயிருக்கிருயோ தெரியவில்லையே.— என்று கூறி ஆச்சர்யமும், சந்தோஷமும் சிறிது வருத்தமும் அடைகிருள்.

தாண் :—ஆமாங்க. உங்க வீட்டுப் புள்ளை ஒரு பாவத்தையும் அறியாதுங்க. அநியாயமா அந்த அய்யா கயிட்டப் படுத்திப் புட்டாங்க.

ராம :—ஆமாம். அந்த பெண் என்னவாயிற்றென்று உனக்குத் தெரியுமா?

தாண் :—துரைராசய்யா கம்பளித்தேவனைக்கொண்டு அப் பெண்ணை எங்கேயோ கொண்டுபோயி சிறை வச்சிருக் கிறதாகக்கேள்வி.

ராம :—அடாடா! கொள்ளைக்கார கம்பளித்தேவனு? அவன் கையில் சென்ற உயிர் மீளாதே. தாண்டவராயா! இப்பொழுது நான் ஒன்று சொல்லுகிறேன், அதன்படி நடக்கிருயா?

தாண் :—என்னுங்க? எது சொன்னுலும் செய்யறேனுங்க.

ராம :—துரைராஜய்யர் உன்னைக் கொல்ல யத்தனித்ததற் காக அவரிடம் போய் சண்டை கிண்டை பிடிக்காதே.

அவர் கண்ணிலும் படதே. நீ இறந்துவிட்டதாகவே அவர் நினைத்துக்கொண்டிருக்கட்டும். நீ இப்பொழுது நேராக சிருமருதூர் சென்று சிவராமய்யரிடம் ஜெயாவைப் பற்றிய விஷயத்தையெல்லாம் உன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்லிவிடு. பின் தஞ்சைக்குச் சென்று போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் துரைராஜய்யர் கொலைசெய்ய எத்தனித்ததைப்பற்றி ரிபோர்ட் செய். போலீஸ் இன்ஸ்பெக்டர் என்ன சொல்லுகிருரோ அதன்படி நடந்துகொள். சாட்சி கேட்டால் நானிருக்கிறேன்.

**தாண் :**—தாங்களும் சற்று என்னுடன் வரக்கூடாதா?

**ராம :**—இன்று எனக்குப் பள்ளிக்கூடம் உண்டே. இல்லாவிடில் உன்னுடன் வருவேன். நீ இப்பொழுது சென்றுவா. அப்படி நான் வேண்டுமானல் நாளையதினம் உன்னுடன் வருகிறேன்.

**தாண் :**—சரிங்க. நான் போயிட்டு வரேன்.

(செல்லுகிருன்.)

**சுந்தரி :**—(தாண்டவராயன் சென்றதும்) நாதா! சபாபதியை எப்படியாவது கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

**ராம :**—கண்ணே! இன்றுடன் எனக்குப் பள்ளிக்கூடம் சாற்றியாய்விடுகிறது. நாளையிலிருந்து நவராத்திரிக்காக 11 நாட்கள் லீவ் உண்டு. இந்த லீவில் நானே பல ஊர்களுக்குச்சென்றும், பத்திரிகைகள்மூலம் விளம்பரப் படுத்தியும் எப்படியாவது சபாபதியைத் தேடிப்பிடிக்கிறேன். இன்று மிகவும் நாழியாய் விட்டது. நான் சென்று வருகிறேன்.—என்று கூறி விடைபெற்றுக் கொண்டு பள்ளிக்கூடம் செல்லுகிருன்.

## காட்சி 3

காலம் :—காலை 11 மணி.

இடம் :—சிருமருதூரில் சிவராமய்யரின் வீட்டு வாசல்.

[சிவராமய்யர் வீட்டிலிருந்து குப்பன் வெளியே வருகிறான். அவனை அங்கு வந்த தாண்டவராயன் சந்திக்கிறான்.]

தாண் :—குப்பா ! அய்யா வீட்டிலே இருக்காரா ?

குப்பன் :—அய்யா இங்கே எங்கேயிருக்கார் ? நேத்தி மத்தியானமே பிடிச்சு அய்யாவைக்காணும்.

தாண் :—எங்கே போயிருக்கார் ?

குப் :—அதானே தெரியல்லே. நேத்து யாரோ ஒரு ஆள்வந்தானும், அவனோடை அவசர அவசரமா எங்கேயோ புறப்பட்டுப் போயிட்டாராம். அம்மாவைக் கேட்டா இதுக்குமேலே ஒண்ணும் சொல்லமாட்டேங்கறாங்க. அய்யா திரும்பி வராத்தேப் பாத்தா எனக்கு என்னமோ பயமாயிருக்கு. நானு இப்ப தஞ்சாவூருக்குப் போயி இத்தே போலீசு இஞ்சுபெக்டரய்யா கிட்டே சொல்லப் போறேன்.

தாண் :—நானுகூட ஒரு காரியமா அங்கேதான் போப் போறேன். வா, நம்ப ரெண்டுபேருமா போகலாம்.

குப் :—ஆமா, உனக்கென்ன காரியம் அங்கே ?

தாண் :—வா, போரத்தே எல்லாத்தையும் சொல்றேன்

(இருவரும் போகிறார்கள்.)

## காட்சி 4.

காலம் :—காலை மணி 11.

இடம் :—தஞ்சாவூரில் போலீஸ் ஸ்டேஷன்.

[பொன்னுசாமி அய்யர் தன் அறையில் போலீஸ் சம்பந்தமான அலுவல்களைக்கவனித்துக்கொண்டிருக்கிறார். சபாபதி அங்குவருகிறான்]

போன் :—(ஆச்சர்யத்துடன்) என்ன சபாபதி! அதற்குள் திரும்பிவிட்டாய்? முருங்கப்பேட்டைக்குப் போக வில்லையா?

சபா :—இல்லை. அதைவிட முக்யமான காரியம் ஒன்றை கவனிக்கும்படி நேர்ந்துவிட்டது.

போன் :—என்ன அது?

சபா :—கம்பளித்தேவனின் பாழ்வீட்டைக் கண்டுபிடிப்ப தற்கு வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. தாங்கள் கொடுத்த செக்கைமாற்றுவதற்காக லட்சுமி பாங்குக்குப் போனேன். அங்கு அதிர்ஷ்ட வசமாக என்னை அடித்த ஒருவனை சந்தித்தேன். உடனே அவனை விடாமல் சென்று பாழ்வீட்டைக் கண்டுபிடித்து விட்டேன்.

போன் :—(சந்தோஷத்துடன்) பாழ்வீட்டைக் கண்டு பிடித்துவிட்டாயா? சபாஷ்! கெட்டிக்காரர், என்றுசொல்லி சபாபதியைத் தட்டிக்கொடுக்கிறார். பின் "ஆமாம். அவ்வீடு எங்கே யிருக்கிறது?" என்று கேட்கிறார்.

சபா :—இங்கிருந்து ஒருமைல் தூரத்தில் ஜன நடமாட்ட மில்லாத ஏழைகள் வசிக்கும் ஒரு தெருவில் இருக்கிறது.

போன் :—அப்படியா?

சபா :—ஆம். இப்பொழுது நாம் போலீஸாருடன் சென் றால் அம்முரடர்களை அரெஸ்டு செய்து கொண்டு வந்து விடலாம்.

பொன் :—சே, சே! அவ்வளவு அவசரப்படாதே. முரடர் களை மாத்திரம் அரெஸ்டு செய்தால்போதுமா? ஜெயா வைக் கண்டு பிடிக்க வேண்டாமா?

சபா :—ஏன் இவர்களை அரெஸ்டு செய்துவிட்டால் பாழ் வீட்டிலிருந்து ஜெயாவைக் கொண்டுவந்து விடலாமே!

போன் :—பாழ்வீட்டில்தான் ஜெயா இருக்கிறாள் என்பது என்ன நிச்சயம்? வேறு எங்கேயேனும் வைக்கப்பட்டிருந்தால் அப்பொழுது என்ன செய்வது?

சபா :—அப்படியானால் ஜெயா அவ்வீட்டில் இருக்கிறாளா இல்லையா என்பதைத் தெரிந்துகொண்டு அம்முரடர்களை அரெஸ்டு செய்யலாம் என்கிறீர்களா?

போன் :—ஆம். ஜெயா அவ்வீட்டில் இல்லாவிடில் மேல் கொண்டு இம்முரடர்களைப் பின்தொடர்ந்து ஜெயாவின் இருப்பிடத்தை அறியலாமல்லவா! அதற்காக இப்போதைக்கு இவர்களை அரெஸ்டு செய்யாமல் விட்டு வைப்பதுதான் நல்லது.

சபா :—தாங்கள் கூறுவது சரிதான். இப்பொழுது மேலே என்ன செய்வது? தாங்கள் அனுமதி கொடுத்தால் நான் அப்பாழ்வீட்டைக் கண்காணித்து ஜெயா அங்கு இருக்கிறாளா இல்லையா என்பதை அறிந்து வருவேன்.

போன் :—உன்னால் முடியுமானால் எனக்கொரு ஆட்சேபணையுமில்லை. ஆனால் அம்முரடர்களிடம் மாத்திரம் எக்கச்சக்கமாக மாட்டிக்கொள்ளாதே. ஜாக்கிரதையாகவும், தந்திரமாகவும் நடந்துகொள்.

சபா :—சரி, நான் சென்று வருகிறேன். நாளையதினம் முருங்கப்பேட்டைக்குப் போய்க் கொள்கிறேன்.

(சபாபதி போகிறான்.)

## காட்சி 5.

காலம் :—காலை 11 மணி.

இடம் :—சம்பளித்தேவனின் பாழ்வீடு.

[சிவராமய்யர் அப்படியே நாற்காலியோடு கட்டிப் போடப்பட்டிருக்கிறார். அவரது கைகள் மாத்திரம் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. சம்பளித்தேவனும் அவனது ஆட்களும் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள்.]

க. தேவன் :—(செக் புஸ்தகத்தை நீட்டி) சிவராமய்யரே! இன்னொரு 5000-ரூக்கு செக் எழுதிக்கொடுக்கப் போகிறீரா இல்லையா?

சிவா :—(செக் புஸ்தகத்தைப் பிடிங்கிக்கொண்டு கோபத்துடன்) முடியாது. ஒரு பைசாவுக்குக்கூட செக் எழுதமாட்டேன். ஏற்கனவே 5000-ரூ. செக்கை பலவந்தமாக பிடிங்கிக்கொண்டு விட்டீர்கள். இப்பொழுது எதற்காக மறுபடியும் 5000-ரூ. கொடுக்கிறது?

க. தேவன் :—எல்லாம் உமது பெண்ணின் நன்மையைக் கருதிதான். உமது பெண்ணை உயிருடன் அடைய விரும்பினால் நீர் மறுபடியும் 5000ரூ. செக் தரவேண்டும்.

சிவ :—முதலில் என் பெண்ணைக் கொண்டுவந்து காட்டுங்கள். அவளைப்பார்த்த பின்தான் செக் எழுத முடியும். அதற்கு முன் என்னை உபத்திரவப்படுத்துவதில் ஒரு பிரயோசனமும் இல்லை.

க. தேவன் :—அதெல்லாம் முடியாது. செக் எழுதினால் தான் உமது பெண்ணைக்கொண்டுவந்து காட்டமுடியும்.

சிவ :—நான் செக் எழுதுவதாக வைத்துக்கொள்ளுங்கள். நேற்று மாதிரி ஏமாற்றாமல் உங்கள் சொல்படி நடப்பீர்கள் என்பது என்ன நிச்சயம்.

க. தேவன் :—இன்றைய தினம் கட்டாயம் நாங்கள் சொன்னபடி நடந்துகொள்வோம். நீர் செக் எழுத வேண்டியதுதான் தாமதம். செக்கை நாங்கள் பணமாக மாற்றிக்கொண்டபின் இன்று மாலை நீரும் உமது பெண்ணும் விடுவிக்கப்படுவீர்கள்.

சிவ :—நான் செக் எழுத மறுத்தாலோ?

க. தே :—மறுத்தால் அதனால் வரும் பலனை அனுபவிக்க நேரிடும். நீரும் உமது பெண்ணும் கொடூரமாகக் கொலை செய்யப்படுவீர்கள்.

சிவ :—அட பாதகர்களே! இப்படி பயமுறுத்தி என்னிடமிருந்து பணம் பறிக்கப் பார்க்கிறீர்களா? அதெல்லாம் ஒருக்காலும் முடியாது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் செக் எழுதப் போவதில்லை.

க. தே :—அப்படியா! இருக்கட்டும். கம்பளித்தேவனின் சுபாவம் தெரியாததால் இப்படி அசட்டுத் துணிச்சலுடன் பேசுகிறீர். போனால் போகிறது. இன்றிரவு வரையில் உமக்கு டைம் கொடுக்கிறேன். அதற்குள் உமது எண்ணத்தை மாற்றிக்கொள்ளாவிட்டால் பின்னால் வருந்த நேரிடும். மறுபடியும் உம்மை இரவில் வந்து பார்க்கிறேன்.—என்று கூறிவிட்டு தன் ஆட்களோடு வெளியே செல்கிறான்.

க. தே :—(வெளியே வந்து தன் ஆட்களிடம்) வீரா, சூரா! நீங்களிருவரும் வெளியே எங்கும் செல்லாமல் இங்கேயே காவல் இருங்கள். நான் இரவு எட்டுமணிக்கு வருகிறேன்.—என்று உத்திரவிட்டு செல்கிறான்.

## காட்சி 6.

**காலம் :**—பகல் 1 மணி.

**இடம் :**—தஞ்சாவூர் போலீஸ் ஸ்டேஷன்.

[பொன்னுசாமி அய்யர் தமது அறையில் மேஜைக்கு முன் உட்கார்ந்திருக்கிறார். கொஞ்ச தூரத்தில் குப்பனும், தாண்டவராயனும் கை கட்டிய வண்ணம் நின்றுகொண்டிருக்கிறார்கள்.]

**பொன் :**—தாண்டவராயா! நீ கூறிய விஷயங்கள் மிகுந்த ஆச்சர்யத்தை உண்டுபண்ணுகின்றன. துரைராஜய்யர் கொலை செய்யக்கூட துணிந்து விட்டாரா?

**தாண் :**—ஆம் எசமானே! அவருடைய இரகசியமெல்லாம் எனக்குத் தெரியுமாதலால் நானிருக்கும் வரையில் அவருக்கு ஆபத்தென்று எண்ணி இப்படி செய்யத் துணிந்தார்.

**குப் :**—சாமி! துரைராஜய்யா இவ்வளவு கெட்டவங்கன்னு இது வரையிலும் தெரியல்லீங்க. தாண்டவராயன் சொல்லவிட்டுன்னு எல்லா சங்கதியும் தெரியுதுங்க. ஜெயாவைக் கொன்னுப்புட்டா எல்லா சொத்தையும் தான் அனுபவிக்கலாம்னு எங்க வீட்டம்மாவோட சேர்ந்து இப்படி யோசனை பண்ணியிருக்காங்க.

**பொன் :**—தாண்டவராயா! நீ சொல்வதற்கு முன்பே ஜெயா காணமற் போனதற்கு துரைராஜய்யர்தான் காரணம் என்று எனக்குத்தெரியும். ஜெயாவைக் கண்டு பிடித்த பின் அவர்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமென்றிருந்தேன். எப்பொழுது அவர் ஒருகொலைக்கு ஆயத்தம் செய்தாரோ அவரை இனிமேல் நாம் சும்மா விட்டு வைப்பது நியாயமல்ல.

தாண் :—ஆமாம். எசமானே! உடனே நீங்கள் இதை கவனிக்காவிட்டால் அவர் எப்படியாவது தந்திரம் செய்து தப்பித்துக் கொண்டுவிடுவார்.

போன் :—(தாண்டவராயனிடம்) சரி. நீ போய் ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டுவா. நான் அதற்குள் என் காரியங்களை முடித்துக்கொண்டு புறப்படுகிறேன். "ஆகட்டுங்க." என்று கூறிச் செல்கிறான் தாண்டவராயன்.

போன்:—(குப்பனிடம்) குப்பா! இப்பொழுது நீ ஊருக்குப் போ. இன்றிரவுக்குள் உங்கய்யா வீட்டிற்கு வருகிறாரா என்று பார். இல்லாவிடில் நாளைக்காலையில் என்னிடம் வந்து சொல். நான் இப்பொழுது முருங்கப் பேட்டைக்குப் போய் துரைராஜய்யரை அரெஸ்டு செய்யப்போகிறேன். இதைப்பற்றி நீ உன் வீட்டு அம்மாவிடம் ஒன்றும் தெரிவிக்காதே. தெரிந்ததா?

"சரிங்க, நான் வரேன்." என்று விடைபெற்றுச் செல்கிறான் குப்பன். அவனோடு கூடத் தாண்டவராயனும் வண்டி பார்க்க வெளியே செல்கிறான்.

## காட்சி 5 (a)

காலம் :—மாலை மணி 2.

இடம் :—கம்பளித்தேவனின் பாழ்வீடு.

[வீரன் வீட்டு வாசற் குறட்டில் நிற்கிறான். அப்பொழுது சபாபதி பிச்சைக்காரப் பெண் வேடத்தில் வெகு இனிமையாகப் பாடிக்கொண்டு தெருவில் வருகிறான்.]

வீரன் :—(உள்ளேயிருக்கும் சூரனைப் பார்த்து) டேய், சூரா! இங்கே வா. இந்தக் குட்டியைப் பார்! எவ்வளவு நல்லா பாடறது.

(சூரன் வெளியே வந்து தெருவில் பாடிக்கொண்டு வரும் சபாபதியைப் பார்க்கிறான்)

சூரன் :—ஆமாடா! குட்டியும் நல்லாருக்கு, அது பாடற பாட்டும் நல்லாருக்கு. இங்கே கூப்பிடு அதை.

வீரன் :—ஏ, குட்டி! இங்கே வா.

(சபாபதி நாணி கோணிக்கொண்டு கிட்டே வருகிறான்.)

சூரன் :—நீ நல்லா பாடறயே. எங்கே ஒரு பாட்டுப்பாடு!

சபா :—ஐயா, தர்மவான்களே! நான் வேண்டிய பாட்டுப் பாடுகிறேன். எனக்கு ஏதாவது கொஞ்சம் ஆகாரம் கொடுங்கள். நேற்றைய முதல் நான் பட்டினி. ரொம்பவும் பசிக்கிறது.

வீரன் :—ஆகாரம் தருகிறோம். முதல்லே ஒரு சின்ன பாட்டுப்பாடு.

(சபாபதி ஒரு துக்கடா பாட்டுப் பாடுகிறான்.)

சூரன் :—அண்ணே! இந்தப் பெண்ணுக்கு ஆகாரம் கொடுத்து இன்னும் நிறைய பாடச் சொல்லி கேப்போம்.—என்றுரைத்து சபாபதியிடம் "வறயா உள்ளே, ஆகாரம் கொடுக்கிறேன்." என்கிறான்.

'உம்.' என்று தலையை ஆட்டுகிறான் சபாபதி.

வீரன் :—சரி, உள்ளே கூட்டிட்டு வா.

(மூவரும் உள்ளே போகிறார்கள்.)

உள்ளே சென்றதும் சபாபதிக்கு ரொட்டியும் பாலும் கொடுக்கிறார்கள்.

வீரன் :—(சபாபதி சாப்பிட்ட பின்.) எங்கே ரெண்டு பாட்டுப்பாடு.

சபாபதி பாடுகிறான். பாதி பாடிக்கொண்டிருக்கையில் மூர்ச்சையடைந்தவன் போல் பாசாங்கு செய்து கீழே சாய்ந்துவிடுகிறான். "அடேடே! என்னடா இது? இப்பத்தானே ஆகாரம் கொடுத்தோம். அதுக்குள்ளே என்னடா வந்துடுத்து?" என்று கூறிக்கொண்டே வீரனும், சூரனும் சபாபதி மூர்ச்சையடைந்திருப்பதைக் கண்டு கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து முகத்தில் தெளித்து மூர்ச்சையைத் தெளிவிக்கிறார்கள். சபாபதி மெதுவாக கண்ணைத் திறந்து "ஐயா, எனக்கு மிகவும் களைப்பாய் இருக்கிறது. பட்டினி கிடந்து ஆகாரம் சாப்பிட்டதால் ரொம்பவும் அலுப்பாயிருக்கு. நான் இப்படியே சிறிதுநேரம் படுத்திருக்க அனுமதி கொடுங்கள்." என்று கேட்கிறான்.

வீரன் :—பாவம் அப்படியானால் கொஞ்சநேரம் படுத்துக் கொண்டிரு. அதனால் பாதகமில்லை.

சூரன் :—சரி இந்தப்பொண்ணு கொஞ்ச நேரம் தூங்கட்டும். நாம் அந்த கட்டிலுக்குப்போய் பேசிக்கிட்டு இருக்கலாம் வா.

(இருவரும் சமீபத்திலிருக்கும் கயிற்றுக் கட்டிலில் போய் உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். சபாபதி அயர்ந்து தூங்குபவன்போல் பொய்க் குறட்டை விடுகிறான்.)

சூரன் :—அண்ணே! அந்தப் பொண்ணுக்கு ரொம்ப சிரமம்போல யிருக்கு, அதான் இவ்வளவு சீக்கிரத்தில் தூங்கிப் போயிடுச்சு.

வீரன் :—சூரன்! அந்த பொண்ணுவாட்லே தூங்கிட்டிருக்கட்டும். நீ வறயா கள்ளுக்கடைக்குப் போகலாம். இங்கேயே குந்திக்கிட்டிருந்தா என்னடா சுகமிருக்கு?

இப்படி தமாசா போயி ஆளுக்கு ரெண்டு புட்டி போட்டுட்டு வறலாம் வா.

சூரன் :—போடா மடையா! அன்னிக்கிப் புட்டி போட போயிதானே குட்டியைக் (ஆட்டுக்குட்டி) கொண்டு வந்தோம். அய்யாவையும் பொண்ணேயும் தப்பிச்சுக்க விட்டுட்டு நம்ப எசமாங்கிட்டெ உதையும் வாங்கிக்கணுங்கறயா?

வீரன் :—என்னடா அப்படிச் சொல்றே? அந்த சிருமரு தூர் அய்யாவைத்தான் நாற்காலியோட வச்சுக் கட்டிப் போட்டிருக்கே. அவரு பொண்ணே பக்கத்துள்ளே வச்சுப் பூட்டியிருக்கே. அப்படி இருக்கிறபோது என்ன மாடா அவங்க தப்புச்சுக்க முடியும்? இதுக்காகவா குடிக்க வல்லேங்கறே. அது கிடக்கிறது வாடா.

(வீரன் கூறியவைகளே சபாபதி கவனமாகக் கேட்டுக் கொள்கிருன்.)

சூரன் :—இதுமாத்திரமில்லே! மொத்தத்திலேயே குடிக்கிறது கெடுதலாண்டா. குடி குடிச்சா நம்ப குடியே கெட்டுப் போயிடுமோம். இந்தக் கள்ளே குடிக்கறதுனலே நம்ப உடம்பு மெலிஞ்சு போயி வியாதியாலே கயிட்டப் படுவோமாம். அப்புறம் கை காசெல்லாம் தொலேஞ்சுபோயி பொண்டாட்டி புள்ளேயெல்லாம் சோத்துக்கில்லாமே தவிக்குமாம். குடி குடிக்கறதே ரொம்ப பாபமாண்டா. அதனலேதான் நான் இனிமே குடிக்கறதில்லேன்னு வச்சுட்டேன்.

வீரன் :—போடா போடா பைத்தியக்காரா! இதையெல்லாம் யாரா நோக்கு சொன்ன?

**சூரன் :**—எல்லாம் அந்த காந்தி குல்லாக்காரங்கதான். நேத்திக்கு அவங்க லச்சர் பண்ணிட்டிருந்தாங்க. நானு என்னடா கூட்டமாயிருக்கேன்னு போய் பாத்தாக்கே அவங்க இத்தெல்லாம் சொல்லிக்கிட்டிருந்தாங்க.

**வீரன் :**—அப்படியா இன்னும் என்னடா சொன்னுங்க?

**சூரன் :**—நீங்கள்ளாம் கள்ளு குடிக்கிறத்தே விட்டுட்டு காசு பணம் சேத்துப் பொண்டாட்டி புள்ளேயோட சௌக்கியமா வாளனும். தினம் குடிக்கப்போற நேரத்திலே கள்ளே மறந்துட்டு கோயிலுக்குப்போயி நல்ல புத்தி கொடுக்கணும்னு சாமியை வேண்டிக்கனும். இப்பவே நீங்க குடிக்கிறத்தே நிறுத்தாட்டா பின்னாலே கள்ளுக் கடையெல்லாம் எடுத்துடறபோது கயிட்டப் படுவேள். இப்ப சேலத்திலே கள்ளுக் கடையெல்லாம் மூடியாச்சு. அடுத்த வருசம் உங்க ஊரிலே கள்ளுக் கடையெல்லாம் மூடிப்புடுவாங்க. அதுக்காக இப்பவே புடிச்சே குடிக்கறத்தே நிறுத்திப் புடுங்கன்னு சொன்னுங்க.

**வீரன் :**—அவ்வளவு தானேடா! இத்தே கேட்டுட்டா மலேச்சுப்போனே நீ. இதெல்லாம் யாருக்குச் சொல்ற வார்த்தை. காசு பணம் இல்லாதவங்களுக்குன்னடா. கம்பளித்தேவரு நமக்குப் பணம் கொடுக்கிற வரைக்கிலும் என்னடா குறைச்சல்? குடியாத வீடு விடியாதுங்கறத்தே நீ கேட்டதில்லேயாடா? ‘குணமது கைவிடேல்’ன்னு ஒரு கிளவி கூட சொல்லியிருக்காளாண்டா.

**சூரன் :**—அப்படீன்னு என்னடா அர்த்தம்?

**வீரன் :**—அப்படின்னுக்கேயா? குணம்-குணத்தைத் தரும் மது-கள்ளே, கைவிடேல்-நீ விட்டுடாதேன்னு அர்த்தம்.

இப்படியெல்லாம் பெரியவங்களே சொல்லியிருக்கிற போது என்னமோ, எவனோ சொன்னான்னு குடிக்க வர மாட்டங்கறயே.

சூரன் :—ஆமாம், இந்தக்குட்டி தூங்கிட்டிருக்கே. இதை இங்கேயே விட்டுட்டுப்போறதா? நம்ப இல்லாத சமயத்திலே எசமான் வந்து பாத்தா என்னடா செய்யறது?

வீரன் :—என்னடா இப்படி பயப்படறே? நம்ப எசமான் இப்போதைக்கு வரமாட்டாரு. ராத்திரி எட்டு மணிக்குன்னு வறேன்னுசொல்லியிருக்காரு. இந்தப்பொண்ணு இங்கேயே இருக்கட்டும். இது விடற குறட்டையைப் பாத்தா இப்போதைக்கு எளுந்திருக்காது போலயிருக்கு. வா, நம்ப ஒரு எட்டுலே போயிட்டு வந்துடலாம்.

(இருவரும் வீட்டுக்கதவைச் சாற்றிக்கொண்டு போகிறார்கள்.)

முரடர்கள் வெளியே சென்றதும் சபாபதி எழுந்திருந்து முன் ஏற்பாட்டுடன் தான் கொண்டு வந்திருந்த சாவிக் கொத்தால் அங்கிருந்த ஒரு அறையின் பூட்டை பல சாவிகள் போட்டுப்பார்த்துக் கடைசியில் ஒரு சாவியால் திறக்கிறான். கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்கிறான். அங்கே சிவராமய்யர் நாற்காலியோடு வைத்துக் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சர்யமும் பிரமிப்பும் அடைகிறான்.

சிவ :—(சபாபதியைப் பெண்ணென்று நினைத்து) யாரம்மா நீ? அம்முரடர்கள் எங்கே? அவர்களா உன்னை இங்கு அனுப்பினார்கள்?

சபா :— நான் பெண்ணல்ல, நான்தான் சபாபதி. இவ்விடத்தில் வந்திருக்கிறேன். ஐயோ! உங்களை இக்கோலத்தில் பார்க்க மனம் துடிக்கறதே!

சிவ :—(ஆச்சர்யத்துடன்) சபாபதியா? அசல் பெண்ணுட்டமாய் இருக்காயே! நீ எப்படி இங்கு வந்தாய்? முரடர்கள் அங்கில்லையா? நீ இப்பொழுது எங்கிருக்கிறாய்?

சபா :—முரடர்கள் வெளியே போயிருக்கிறார்கள். இப்பெண் வேடத்தால் தான் அவர்களை ஏமாற்றி விட்டு இங்கு வர முடிந்தது. இப்பொழுது போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யரோடுதான் இருக்கிறேன். ஜெயா இவ்விடத்தில் இருக்கிறாளா என்பதை அறிந்து போகவே இங்கு வந்தேன். தாங்கள் எப்படி இவர்களிடத்தில் வந்து அகப்பட்டுக் கொண்டீர்கள்?

சிவ :—ஜெயா இங்கு எங்கேயோதான் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். நான் இவ்விடத்திற்கு வந்தால் ஜெயாவை அடையலாம் என்று சொல்லி கம்பளித்தேவனது ஆட்கள் என்னை வஞ்சகமாக அழைத்து வந்து சிறைப்படுத்தி விட்டார்கள். என்னை பலவந்தப் படுத்தி 5000 ரூபாய் செக்கை வேறு பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். மறுபடியும் இன்னொரு 5000 ரூபாய்க்கு செக் எழுதும்படி உபத்திரவிக்கிறார்கள். சபாபதி! முதலில் எனது கட்டுகளை அவிழ்த்துவிடு. எனக்கு இங்கு இருப்பது பரமவேதனையாய் இருக்கிறது.

சபா :—மாமா, தாங்கள் படும் கஷ்டத்தைக் கேட்க எனக்கு மிகவும் வருத்தமாய் இருக்கிறது. இப்பொழுது உங்களை நான் விடுவிக்க முடியாத நிலைமையில் இருக்கி

றேன். ஏனெனில் அம்முரடர்கள் வெளிப்பக்கமாக கதவைச் சாற்றிக்கொண்டு போயிருக்கிருர்கள். அவர்கள் கூடிய சீக்கிரத்தில் திரும்பிவிடுவார்கள். அவர்கள் வருவதற்குள் நான் வெளியே போய்விடவேண்டும். தற்சமயம் தங்களை நான் விடுவித்தால் நாம் வெளியே போகமுடியாததோடு அதனுல் எனது காரியமும் கெட்டுப்போகும். ஆகையால் தாங்கள் இன்னும் நான்கு மணி நேர காலம் பொறுத்திருந்தால் நான் மறுபடியும் போலீஸாரோடு வந்து மீட்டுச் செல்கிறேன்.

சிவ :—எப்படியாவது என் பெண்ணையும், என்னையும் இம்முரடர்களிடமிருந்து காப்பாற்றினுல் சரி. இன்றிரவு எட்டு மணிக்குள் எங்களை விடுவிக்காவிடில் எங்களது உயிர் போய்விடும் என்பதைத் தெரிந்துகொள்.

சபா :—தாங்கள் இனிமேல் கவலைப்படவேண்டாம். நான் வீட்டைவிட்டு வெளியே சென்றதும் உடனே உங்களை விடுவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். நாழியாகிறது, நான் ஜெயாவை வேறு பார்க்க வேண்டும். தாங்கள் விசாரப்படாமல் இருங்கள்.—— என்று கூறிவிட்டு வெளியே வந்து முன்போல் கதவைப் பூட்டிவிடுகிருன்.

பின் சிவராமய்யர் அறைக்கு இடது புறத்திலிருந்த இன்னெரு அறையைத் திறந்து கொண்டு உள்ளே போகிருன். அங்கே ஜெயா ஒரு கட்டிலில் அலங்கோலமாக படுத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிருன். "ஜெயா! ஜெயா!!" என்று மெதுவாக கூப்பிடுகிருன். அரைத் தூக்கத்திலிருந்து ஜெயா எழுந்திருந்து சபாபதியைப் பார்க்கிருள்.

ஜெயா :—அம்மா! நீ யார்? இங்கு எங்கு வந்தாய்? என்னை எதற்காக கூப்பிட்டாய்?

சபா :—ஜெயா! என்னை உனக்குத் தெரியவில்லையா? நான் தான் சபாபதி, இவ்விதம் பெண் வேஷமணிந்து உன்னைப் பார்க்க வந்தேன்.

ஜெயா :—(ஆச்சரியத்துடன்.) சபாபதியா! அசல் பொம்மனாட்டி மாதிரி யிருக்காயே! இவ்வளவு நாள் நீ எங்கே போயிருந்தாய்? நான் இங்கு இருக்கிறேன் என்பது உனக்கு எப்படி தெரிந்தது?

சபா :—ஜெயா! உன்னோடு நான் அதிக நேரம் பேசப் பொழுதில்லை. நீ இவ்விடத்தில் இருக்கிறாயா இல்லையா என்பதை அறிந்து போகவே நான் இவ்வேஷத்தில் வந்தேன். உன்னைக் காவல் புரியும் முரடர்கள் வெளியே போயிருக்கிறார்கள். அவர்கள் வருவதற்குள் நான் இவ்வறையைவிட்டு வெளியே சென்றுவிடவேண்டும்.

ஜெயா :—அப்படியானால் இப்பொழுது உன்னுடன் என்னை அழைத்துச் செல்ல மாட்டாயா?

சபா :—தற்சமயம் உன்னை அழைத்துச்செல்ல முடியாது. இவ்வளவு நாள் இருந்ததுபோல் இன்னும் நான்கு மணி நேரம் பொறுத்துக்கொண்டிரு. நான் வீட்டைவிட்டுச் சென்றதும் போலீஸாரோடு மறுபடியும் வந்து உன்னையும் உன் தந்தையையும் மீட்டுச்செல்கிறேன்.

ஜெயா :—என் தந்தை இங்கிருப்பது உனக்குத் தெரியுமா?

சபா :—தெரியும். பக்கத்தறையில்தான் அவர் இருக்கிறார். அவரை முதலில் பார்த்துவிட்டுத்தான் நான் இங்கு வந்தேன்.

ஜெயா :—சபாபதி! என் தந்தை அம்முரடர்களிடம் படும் துன்பம் சொல்லி முடியாது. பக்கத்தறையில் இருக்கும் என்னுல் அவரைப் பார்க்க முடியாவிட்டாலும் அவர் துக்கத்தால் கதறுவதை என்னுல் கேட்டு சகிக்க முடியவில்லை. நீதான் என் தந்தையையும், என்னையும் காப்பாற்றவேண்டும்.

சபா :—கண்ணே ஜெயா, மனங்கலங்காதே! இன்றிரவுக்குள் உன்னையும் உன் தந்தையையும் இம்முரடர்களிடமிருந்து விடுவித்துவிடுகிறேன். நேரமாகிறது, அம்முரடர்கள் வந்துவிடுவார்கள். நான் சென்று வருகிறேன்.—என்று ஜெயாவை சமாதானப்படுத்திவிட்டு அறைக்கதவைச் சாற்றிப் பூட்டிக்கொண்டு வெளியே வந்து முன்போல் கீழே படுத்துக்கொண்டு அயர்ந்து தூங்குவதுபோல் குறட்டை விடுகிருன்.

(சபாபதி கீழே படுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் முரடர்களிருவரும் அங்கு வருகிருர்கள்.)

வீரன் :—(சபாபதி தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து) ஏ, அண்ணே! நான் சொல்லலையா அப்பவே, இந்தப் பொண்ணு இப்போதைக்கு எளுந்திருக்காதுன்னு! இப்ப பார் இன்னும் தூங்கிட்டிருக்கிறதை!

சூரன் :—சரிடா! அந்தக் குட்டியை எளுப்புடா! ரெண்டு பாட்டுப் பாடச்சொல்லிக் கேப்போம்.

வீரன் சபாபதியிடம் சென்று "ஏ, குட்டி! இன்னுமா தூக்கம்? எளுந்திரு! எளுந்திரு!" என்று தட்டி எழுப்புகிருன். சபாபதி மெதுவாக கண் விழித்து "ஆ! என்ன! நான் ரொம்ப நேரம் தூங்கிவிட்டேனு?" என்று கூறிக்கொண்டு எழுந்திருந்து சுற்று முற்றும் பார்க்

கிறான். வீரனைப் பார்த்து "ஐயா! அசதியால் வெகு நேரம் தூங்கிவிட்டேன், மன்னிக்கவும்." என்கிறான்.

வீரன் :—போனா போகுது. உடம்புக்கு ஒன்னுமில்லையே!

சபா :—இல்லை உடம்பு விச்சாதானிருக்கிறேன்.

சூரன் :—அப்பன்னா ஒரு பாட்டுப் பாடு பாக்கலாம்.

(சபாபதி மதுவிலக்கைக் குறித்து ஒரு பாட்டுப் பாடுகிறான்.)

வீரன் :—சே! சே! அது வேண்டாம். வேறே ஒரு நல்ல பாட்டுப் பாடு.

சபா :—(தேசீய கீதம் ஒன்று பாடி முடிந்த பின்.) ஐயா! எனக்கு நேரமாகிறது. என் பெற்றோர்கள் எனக்காக காத்துக்கொண்டிருப்பார்கள். நான் போகவேண்டும்.

சூரன் :—உனக்கு அப்பா அம்மா இருக்காங்களா? நீ எங்கே இருக்கே?

சபா :—எனக்கு வயது சென்ற தாய் தந்தையர்கள் இருக்கிறார்கள். பிச்சைக்காரங்களுக்கெல்லாம் இடமெங்கே? சத்திரம்தானே! அதுபோல நாங்களும் இந்த ஊரு சத்திரத்திலேதான் இருக்கோம்.

சூரன் :—அப்படியா! நாளைக்கு இங்கு வறயா? இந்தா வச்சுக்கோ!———என்று சொல்லி ஒரு நாலணா சில்லரையைக் கொடுக்கிறான்.

சபா :—(சந்தோஷம் கொண்டவன்போல் நாலணாவைப் பெற்றுக்கொண்டு) ஐயா, தர்மவான்களே! உங்களுக்கு ரொம்பவும் நமஸ்காரம். நாளைய தினமும் நான் வருகிறேன்.—என்றுகூறி விடைபெற்றுக்கொண்டுவெளியே போய்விடுகிறான்.

## காட்சி 7.

**காலம்:**—காலை 4-மணி.

**இடம்:**—முருங்கப்பேட்டையில் சுந்தரியின் வீட்டுவாசல்.

[ராமநாதன் பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறான். வீட்டு வாசற்குறட்டில் காலடிவைக்கும் சமயத்தில் பிச்சுமணி ஒரு கோர்ட்டு சேவகனோடு வருகிறான்.]

**பிச்சு:**—ராமநாதா, அப்படியே நில். உள்ளே போகாதே!—என்று சொல்லி தன்னுடன் வந்த சேவகனிடம் "ஒய், சேவகரே! இவர்தான் ராமநாதய்யர். விடாமல் பிடித்துக்கொள்ளும்." என்கிறான்.

**சேவ:**—ஐயா! இப்படி வாரும். இதோ உமக்கொரு கட்டளை வந்திருக்கிறது. பெற்றுக்கொள்ளும்.

**ராம:**—(திகைப்புடன்) கட்டளை யென்றால் புரியவில்லையே! என்ன அது?

**சேவ:**—வாரண்டு கட்டளை ஐயா! புறப்படும் என்னுடன் கச்சேரிக்கு. (பிச்சுமணியைக் காட்டி) நீர் இவருக்கு கொடுக்கவேண்டிய 582-ரூபாயை கொடுத்தால்தான் உம்மைவிட முடியும்.

**ராம:**—(ஆத்திரம் பொங்க) திடீரென்று இப்படி வந்தால் நான் எங்கிருந்து பணம் கொடுப்பது? இன்னும் இரண்டு நாள் பொறுத்துக்கொள்ளும். அதற்குள் பணம் ஏற்பாடு செய்துகொடுக்கிறேன்.

**சேவ:**—அதெல்லாம் என்னிடம் சொல்லாதேயும். கோர்ட்டில் வந்து சொல்லிக்கொள்ளும். உம், கிளம்பும்!

ராம :—என்ன ஐயா! இப்படி கெடுபிடி பண்ணுகிறீர்? காலையில் ஆகாரம் சாப்பிட்டவன். செத்தே இரும், உள்ளே போய் தீர்த்தம் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்.

சேவ :—முடியாது. நாங்களுந்தான் காலையில் ஆகாரம் சாப்பிட்டவர்கள். கச்சேரிக்குப் போனபின் எல்லாம் பார்த்துக்கலாம். நாழியாகிறது, புறப்படும்.

ராம :—கொஞ்சங்கூட உங்களுக்கு இரக்கமில்லையா? தீர்த்தம் சாப்பிடக்கூட விடமாட்டேன் என்கிறீர்களே! நான் ஓடிப்போய்விடுவேனு?

பிச்சு :—சேவகரே! என்னங்காணும் தாட்சண்யம் பார்க்கிறீர். சிண்டைப்பிடித்து இழுத்து வாரும். இல்லாவிடில் கச்சேரியில் உம்மைப்பற்றிப் புகார் செய்வேன்.

சேவ :—ஐயா! இந்த வாரண்டு கட்டளையில் கையெழுத்துப்போடும். இனிமேல் பேசிக்கொண்டிருக்க முடியாது.

சேவகன் வாரண்டு கட்டளையைக் கொடுக்கிருன். ராமநாதன் அதில் கையெழுத்திடுகிருன். இச்சமயத்தில் வாசலில் ஏதோ இரைச்சல் கேட்கிறதேயென்று சுந்தரி வீட்டிற்குள்ளிருந்து வெளியே வருகிருள்.

சுந் :—(தன் கணவனுக்கு வாரண்டு வந்திருப்பதையறிந்து) என்ன நாதா இது வாரண்டா? ஐயோ! நான் என் செய்வேன்? இப்பொழுது எனக்கொன்றும் தோன்றவில்லையே!" என்று மனங்கலங்கி கண்களில் நீர் பெருக கற்சிலைபோல் பிரமித்து நிற்கிருள்.

பிச்சு :—(ஏளனமாக) சுந்தரி! பார்த்தாயா பிச்சுமணியின் சாமர்த்தியத்தை? அன்று என்னமோ வீராப்பு பேசினயே!

சுந் :—(கோபமடைந்து) சீ, சீ! வாயை மூடு! இவ்வளவு தானா? இன்னு முண்டா? உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள்! தெய்வம் விட்டவழி விடட்டும்.

இதே சமயத்தில் தாண்டவராயன் போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யரோடு அங்கு வருகிறான்.

தாண் :—சாமி என்ன இது! பிச்சுமணி அய்யா இங்கு எங்கு வந்தார்? இச்சேவகன் யார்?

ராம :—தாண்டவராயா? பிச்சுமணிக்கு நான் கடன் கொடுக்கவேண்டும். அதற்காக வாரண்டு வந்திருக்கிறது.

பொன் :—(முன்னால் வந்து) வாரண்டா! எவ்வளவு தொகைக்கு?

சேவ :—582 ரூபாய்க்கு.

பொன் :—582 ரூபாய் தானே! பிச்சுமணி அய்யரே! இந்தாரும் உமது பணம். இதில் 590 ரூ. இருக்கிறது. மீதி எட்டு ரூபாயும், பணம் பெற்றுக்கொண்டதிற்கு ரசீதும் கொடும்.

(590 ரூ. நோட்டுகளாக கொடுக்கிறார்.)

இதைக்கண்டு பிச்சுமணி திகைத்துப்போய் தான் நினைத்த காரியம் பலிதமடையாததால் மிகுந்த ஏமாற்றத்துடன் பொன்னுசாமி அய்யரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்கிறான். எதிர்பாராத இவ்வுதவியால் ராமநாதனும், சுந்தரியும் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைகிறார்கள்.

தாண் :—சாமி! நம்ப என் தெருவிலே நின்னுகிட்டிருக்கனும், அப்படி திண்ணைக்குப் போய் உக்காரலாம்

வாங்கோ.—என்று சொல்லவே எல்லோரும் திண்ணைக்குப்போய் உட்கார்ந்துகொள்கிறார்கள்.

திண்ணையில் நின்றுகொண்டிருந்த சுந்தரி உள்ளே சென்று ரேழி வாசற்படியருகே நின்றுகொண்டு மேலே என்ன நடக்கிறதென்று கவனிக்கிறாள். பிச்சுமணி மீதி ரூபாய் எட்டையும், பணம் பெற்றுக்கொண்டதாக ரசீதும் எழுதி பொன்னுசாமி அய்யரிடம் கொடுத்துவிட்டு "என் பணம் வந்துவிட்டது. வாரும் சேவகரே, நாம் போகலாம்." என்று கூறி கோர்ட்டுச் சேவகனுடன் வெளியே போய்விடுகிறான்.

இதுவரையில் எல்லாவற்றையும் பிரமிப்புடன் கவனித்துக்கொண்டிருந்த ராமநாதன் பொன்னுசாமி அய்யரிடம் சென்று அவரது கைகளைப் பிடித்துக்கொண்டு "ஐயா! தங்கள் நன்றியே நன்றி. முன்பின் அறிமுகமில்லாத எனக்குச் சரியான சந்தர்ப்பத்தில் வந்து உதவி செய்த உங்கள் தாராள குணத்தை என்னென்று கூறுவது? கடவுள்போல் தகுந்த சமயத்தில் பணத்துடன் வந்து உதவிய தங்கள் பெயரை நான் அறியலாமா?" என்று உருக்கத்துடன் கேட்கிறான்.

பொன் :—அப்பா ராமநாதா! நான்தான் தஞ்சை போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யர். என்னைப்பற்றி உனக்குத் தெரியாவிட்டாலும் உன்னையும், உன் நிலைமையைப்பற்றியும் உன் மைத்துனன் சபாபதியின் மூலம் தெரிந்துகொண்டிருக்கிறேன்.

ராம :—(ஆவலுடன்) சபாபதியா! அவனைத் தாங்கள் எங்கே கண்டீர்கள்? அவன் இப்பொழுது எங்கிருக்

கிறுன் என்று சொல்ல முடியுமா? அவன் என்னைப் பற்றித் தங்களிடம் என்ன சொன்னான்?

போன்:—சபாபதி என்னுடன்தான் இருக்கிறுன். அவன் பொருட்டு நீ கடனால் கஷ்டப்படுவதாகவும், அதற்காக என்னை உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டான். அவனது வேண்டுகோளின்படிதான் நான் இப்பொழுது இங்கு பணத்துடன் வந்து உதவி செய்தது.

(இதைக்கேட்டு சுந்தரி குதூகலமும், பூரிப்பும் அடைகிறுள்.)

ராம:—அப்படியா! சபாபதி தங்களுடன் இருக்கிறுன் என்பதை கேட்க என் மனதிற்கு மிகுந்த ஆறுதலும், களிப்பும் உண்டாகிறது. இப்பொழுது சபாபதி ஏன் தங்களுடன் வரவில்லை?

போன்:—அவனே இங்கு பணத்துடன் வருவதாக இருந்தான். ஆனுல் ஜெயா விஷயமாக அவன் ஒரு காரியத்தை கவனிக்கும்படி நேர்ந்துவிட்டதால் நானே துரைராஜய்யரை அரெஸ்டு செய்ய வந்த இடத்தில் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

ராம:—துரைராஜய்யரை அரெஸ்டு செய்தாய்விட்டதா?

போன்:—அரெஸ்டு செய்து தஞ்சை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகும்படி கான்ஸ்டேபிள்கள் வசம் ஒப்புவித்து ஒரு மணி நேரமாகிறதே! அவரை அரெஸ்டு செய்தனுப்பிய பின்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

ராம:—அப்படிச் சொல்லுங்கள்! அதானு தாண்டவராயன் பேசாமல் கம்மென்று இருக்கிறுன். இல்லாவிடில்

உங்களை இவ்வளவு நேரம் இங்கே உட்காரவிடுவானா? என்று கூறி தாண்டவராயனைப் பார்த்து பரிகாசமாக கண்ணைச் சிமிட்டிவிட்டு பொன்னுசாமி அய்யரிடம் "ஆமாம், இனிமேல் தங்களுக்கு வேறு காரியமில்லையே! சிறிது நேரம் தங்கிச் செல்லலாமல்லவா?" என்று கேட்கிறான். அப்படியே சுந்தரியிடம் "சுந்தரி! சீக்கிரம் காப்பி போட்டுக்கொண்டு வா. அதோடு ஏதாவது டிபனும் செய்." என்கிறான்.

பொன்:—இல்லையப்பா! அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். எனக்கு மேலே காரியமிருக்கிறது. சபாபதி எனக்காக காத்துக் கொண்டிருப்பானாதலால் நான் சீக்கிரம் தஞ்சை போகவேண்டும். இன்னொரு சமயம் வந்து உன் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். இப்பொழுது எனக்காக ஒன்றும் செய்யவேண்டாம். கொஞ்சம் தீர்த்தம் கொடு. அதுவே போதும்.

ராம:—சரி. அப்புறம் உங்களிஷ்டம்— என்று கூறி "சுந்தரி! காப்பி வேண்டாம் என்கிறார். ஒரு கூஜாவில் தீர்த்தம் கொண்டு வா." என்று உத்திரவிடுகிறான்.

அதன்படி சுந்தரி ஒரு கூஜாவில் தீர்த்தம் கொண்டு வந்து வைக்கிறாள். பொன்னுசாமி அய்யரும், ராமநாதனும் தாக சாந்தி செய்து கொள்கிறார்கள்.

பொன்:—(தன்னிருப்பிடத்தை விட்டு எழுந்திருந்து.) ராமநாதா! நான் சென்று வருகிறேன்.

ராம:—ஆஹா! போய் வாருங்கள். சபாபதியை நாளைக்கு இங்கு வரச் சொல்லுகிறீர்களா?

போன்:—அங்கு அவனுக்கு ஏதாவது காரியமிருந்தாலும் இருக்கும். நீ தான் நாளைக்கு உன் மனைவியோடு அவ்விடம் வாயேன்.

ராம:—சரி. அப்படியே செய்கிறேன்.

தாண்:—சாமி! நானு இப்ப உங்க பின்னோட வறணுங்களா?

போன்:—ஆம், என்னுடன் நீ கட்டாயம் வரவேண்டும். இக்கேஸில் உன் சாக்ஷியும் முக்கியமானதால் இக்கேஸ் முடியும் வரையில் நீ என்னுடன் இருக்கவேண்டும். வா, போகலாம்.

(பொன்னுசாமி அய்யரும், தாண்டவராயனும் போகிறார்கள்.)

## காட்சி 8.

காலம்:—மாலை 6½மணி. அஸ்தமித்து இருட்டின சமயம்.

இடம்:—தஞ்சாவூரில் பொன்னுசாமி அய்யர் அறை.

[பொன்னுசாமி அய்யர் தன் ஆடைகளைக் களைந்துவிட்டு, வேறு ஆடைகளை அணிந்துகொள்கிறார். பக்கத்தில் சபாபதி நிற்கிறான். சிறிது தூரத்தில் தாண்டவராயன் கைகட்டியவண்ணம் நின்று கொண்டிருக்கிறான்.]

சபா:—அதானு உங்களுக்கு இவ்வளவு நேரம்? ஏது நான் சென்றபின் அநேக காரியங்கள் நிகழ்ந்திருக்கின்றனவே. தாண்டவராயனே நம்மிடம் வந்ததால் காரியம் இன்னும் சுலபமாக முடிந்துவிட்டது. உடனே துரைராஜய்யரை அரெஸ்டு செய்தது நல்லதாகப் போயிற்று. அப்படியே என் வேண்டுகோளுக்கிணங்கி எங்க அத்திம்பேருக்குச் சரியான சந்தர்ப்பத்தில் பண உதவி செய்த உங்கள் நன்றியை நான் ஒருக்காலும் மறக்கமாட்டேன்.

போன்:—(ஆடைகளை அணிந்துகொண்டு அவ்வறையில் இருந்த ஒரு ஈவிச்சேரில் அமர்ந்தபின்) இதெல்லாம் இருக்கட்டும், நீ சென்ற காரியம் என்னவாயிற்று? அதைச் சொல்!

சபா:—(பக்கத்திலிருந்த ஸ்டூலில் அமர்ந்துகொண்டு) காரியம் ஜெயந்தான். எதிர்பார்த்ததைவிட அதிக பலன் கிடைத்திருக்கிறது. நான் ஒரு பிச்சைக்காரப் பெண் வேடத்தில் அப்பாழ்வீட்டிற்குள் சென்றேன். நான் சென்ற சமயத்தில் கம்பளித்தேவனது ஆட்கள் மாத்திரம்தான் அங்கு இருந்தார்கள். நான் பட்டினியால் வாடுபவள்போல் பாசாங்கு செய்ததால் அவர்கள் என்னை வீட்டிற்குள் கூட்டிக்கொண்டுபோய் ஆகாரம் கொடுத்தார்கள். பின் என்னை பாடச்சொன்னூர்கள். நான் பாதி பாடிக்கொண்டிருக்கையில் மயக்கமடைந்தவள்போல் விழுந்தேன். எனக்குக் களைப்பாய் இருக்கிறதென்றும், சிறிது நேரம் தூங்கினுல் தேவலையென்றும் நான் சொல்லவே அம்முரடர்கள் என்னைத் தூங்க விட்டுவிட்டு கள்ளுக்கடைக்குப் போய்விட்டார்கள். பிறகு நான் எழுந்திருந்து என்னிடமிருந்த சாவிக் கொத்தால் அங்கிருந்த இரண்டு அறைகளைத் திறந்து பார்த்தேன். நான் ஆச்சரியப்படும்படி ஜெயாவோடு கூட சிவராமய்யரும் அங்கு சிறை வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

போன்:—(ஆச்சர்யத்துடன்) நிஜமாகவா? சிவராமய்யர் அங்கேயே இருக்கிருரா?

சபா:—ஆம். நேற்று யாரோ ஒரு ஆளுடன் சிவராமய்யர் சென்றதாக குப்பன் கூறினுன் என்று சொன்னீர்களல்லவா? அந்த ஆள் கம்பளித்தேவனது ஆள்தான்.

சிவராமய்யரை அவர்கள் வஞ்சகமாக அழைத்துச் சென்று சிறைப்படுத்தியிருக்கிறார்கள்.

போன்:—சிவராமய்யர் உன்னை அடையாளம் கண்டு கொண்டாரா? அவர் உன்னிடம் என்ன சொன்னார்?

சபா:—நான் ஒரு பெண்ணென்றே அவர் நினைத்தார். நான் சொல்லவிட்டுத்தான் அவருக்கு நான் யாரென்று தெரிந்தது. அம்முரடர்கள் அவரை ஒரு நாற்காலியோடு வைத்துக்கட்டியிருக்கிறார்கள். ஏராளமான தொகைக்கு செக் எழுதும்படி அவரை அம்முரடர்கள் துன்புறுத்துகிறார்களாம். இன்றிரவு 8-மணிக்கு கம்பளித்தேவன் அங்கு வரப்போவதாகவும், அதற்குள் தன்னை அம்முரடர்களிடமிருந்து விடுவிக்காவிடில் தன் உயிர் போய் விடுமென்றும் சொன்னார். நான் எப்படியும் இன்னும் நாலு மணி நேரத்திற்குள் அவரை விடுவித்துவிடுவதாகச்சொல்லி வந்திருக்கிறேன். ஆகையால் நாம் மணி எட்டுக்குள் பாழ் வீட்டிற்குப் போலீஸாருடன் செல்லவேண்டும்.

போன்:—அடாடா! அப்படியா சமாசாரம். இப்பொழுதென்ன மணியாகிறது? $6\frac{3}{4}$மணிதானே! சரி, வா. மேலே நடக்கவேண்டிய காரியங்களைப் பார்ப்போம். பின்னால் மற்ற சமாசாரங்களைப் பேசிக்கொள்ளலாம்.— என்று கூறி தன் ஆசனத்திலிருந்து எழுந்திருக்கிறார்.

(சபாபதியும் தன்னிடமிருந்து எழுந்திருக்கிறான். பொன்னுசாமி அய்யர் தாண்டவராயனைப் பார்த்து "தாண்டவராயா! நீயும் எங்களுடன் வா" என்று கூறவே இவ்வளவு நேரம் வரையில் சபாபதி கூறியவற்றையெல்லாம் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்த தாண்டவராயன் பொன்னுசாமி அய்யரோடு போகிறான்.)

## காட்சி 9.

காலம் :—இரவு மணி 8.

இடம் :—கம்பளித்தேவனின் பாழ் வீடு.

[சிவாமய்யர் அப்படியே நாற்காலியில் கட்டியபடியே இருக்கிருர். கம்பளித்தேவன் தான் சொல்லியபடி இரவு 8 மணிக்குத் தன் ஆட்களோடு வந்து சிவாமய்யரை செக் எழுதும்படி உபத்திரவம் செய்கிருன்.]

க.தேவன் :—என்ன, ஐயரே! எங்களுக்கு நேரமாகிறது. கடைசியாகக்கேட்கிறேன். நீர் செக் எழுதப்போகிறீரா இல்லையா?

சிவ :—நானும் கடைசியாகச் சொல்கிறேன் என்னல் செக் எழுத முடியாதென்று.

க. தேவன் :—உம்முடைய பெண்ணை உம்மிடம் சேர்த்தாலும் கூடவா?

சிவ :—(சிறிது நேரம் தயங்குகிருர். எப்படியும் சபாபதி வந்து தன்னை விடுவிப்பானென்று தைரியமடைந்து.) ஆம். இனிமேல் நீங்கள் என்ன ஆசைவார்த்தைகளைக் கூறியபோதிலும் நான் கையெழுத்திடமாட்டேன்.

க. தேவன் :—வேண்டாம். இப்படி பிடிவாதம் செய்யாதீர். உம்முடையவும், உமது பெண்ணினுடையவும் நலத்தைக்கருதி செக் எழுதும்.

சிவ :—எங்களுடைய நலத்தைக் கருதி என்ன ஆக வேண்டும்?

க. தேவன் :—அப்படியா! நீர் செக் எழுத மறுப்பதால் உங்களுக்கு நேரிடக் கூடிய தீங்கை நீர் அறியீர்போலும்.

சிவ:—இப்படி யெல்லாம் என்னை ஏமாற்ற முடியாது. உங்களால் ஆனதை செய்து கொள்ளுங்கள். வந்தது வரட்டும்.

க. தேவன் :—ஓஹோ! அவ்வளவு தைரியமா? இனிமேல் எங்கள் காரியத்தைப் பார்க்கவேண்டியது தான்.—என்று கூறிவிட்டு தன் ஆட்களைப் பார்த்து "இவரோ செக் எழுத மறுக்கிறார். நம்மால் ஆனவரையில் சொல்லிப் பார்த்தாய் விட்டது. இனிமேல் நம் காரியதைத் தான் பார்க்க வேண்டும். நீங்கள் போய் அதற்காக வேண்டிய சாமான்களைக் கொண்டு வாருங்கள்" என்று உத்திரவு செய்கிறான்.

அவர்கள் போய் ஒரு சிறு தகரப் பெட்டியைக் கொண்டு வருகிறார்கள். அதிலிருந்து மருந்துள்ள ஒரு சிறு கண்ணாடி சீசாவையும், மருந்துகளை தேகத்துக்குள் செலுத்தும் ஒரு ஊசியையும் கம்பளித் தேவன் எடுக்கி றான். கருப்பு நிறத்தில் இருந்த அம்மருந்தை இஞ்செக் ஷன் செய்யும் கருவியில் கொஞ்சம் எடுத்துக்கொள்கிறான். இதை மிகுந்த திகிலுடன் கவனிக்கிறார் சிவராமய்யர்.

க. தேவன் :—(சிவராமய்யரை நோக்கி) இதோ என் கையி லிருப்பது ஓர் விஷமருந்து. இதை இப்பொழுது உம்முடைய தேகத்தில் செலுத்தி விடப்போகிறேன். இம்மருந்து உமது தேகத்திற்குள் சென்ற பத்து நிமிஷ நேரத்திற்கெல்லாம் உமது உயிர் கண்டிப்பாய் போய் விடும். உம்மைக் கொன்றபின் இதேமாதிரி உமது மகளையும் கொல்லபோகிறோம்.—என்று கூறியபின் தன் ஆட்களிடம் "ஏய்! நீங்கள் முதலில் அவரது கண்களை ஒரு துணியால் கட்டுங்கள். பின் அவரது கைகளை

அவர் திமிருமல் அமுக்கிக் கொள்ளுங்கள்.'' என்று உத்தரவு கொடுக்கிறுன்.

உடனே அம்முரடர்கள் சிவராமய்யரின் கண்களை ஒரு கருப்புத் துணியால் பலவந்தமாகக் கட்டுகிறுர்கள்.

சிவ :— (திமிறிக்கொண்டே) அட அயோக்யர்களே! என்னைக் கொல்லவா பார்க்கிறீர்கள்? மரியாதையாக என்னை விட்டால் போச்சு. இல்லாவிடில் உரக்கக் கத்தி தெருவில் போவோர்களைக் கூப்பிடுவேன்.

க. தேவன் :—(பரிகாசமாக சிரித்துக்கொண்டு.) கத்து! கத்து! நீ எவ்வளவு பலமாகக் கத்திய போதிலும் வெளியே சத்தம் கேட்காது.

(கண்ணைக் கட்டியபின் முரடர்கள் சிவராமய்யரின் கைகளை அமுக்கிக் கொள்கிறுர்கள்.)

சிவ :—அடே! கொலை பாதகர்களே! என்னைக் கொலை செய்வதாலுண்டாகும் பலனை அனுபவிக்காமல் போக மாட்டீர்கள். ஐயோ! பாவிகள் என்னை அநியாயமாகக் கொலை செய்கிறுர்களே!—என்று கிலியும் ஆத்திரமும் தோன்ற தன்வாய் கொண்டமட்டும் உரக்கக் கத்துகிறுர்.

அதேசமயத்தில் 'டப்', 'டப்' என்று துப்பாக்கிகள் வெடிக்கும் சப்தம் கேட்கிறது. அடுத்த நிமிஷத்தில் சிவராமய்யர் இருந்த அறையில் பொன்னுசாமி அய்யரும், சபாபதியும் பல போலீஸாருடன் தோன்றுகின்றனர். கம்பளித் தேவனும் அவனது ஆட்களும் எதிர்பாராத இக்காட்சியைக் கண்டு தேகம் விலவிலத்துப் போய் மிரண்டு நிற்கிறுர்கள். சிவராமய்யர் முரடர்களிடமிருந்து தன் கைகளை விடுவித்துக்கொண்டு தன் கண் கட்டை அவிழ்த்து விட்டு தனக்கு முன்னுல் பொன்னுசாமி அய்யரும், சபா

பதியும் போலீஸாருடன் வந்து நிற்பதைக் கண்டு மட்டில்லா சந்தோஷமடைகிறூர்.

போன் :—(கைத் துப்பாக்கியை கம்பளித்தேவன் முன் நீட்டிய வண்ணம்.) அட துஷ்டர்களே! மரியாதையாக நீங்கள் நிற்கும் இடத்தைவிட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்காமல் கைகளை மேலே தூக்குங்கள். இல்லாவிடில் மிருகங்களைச் சுட்டுத்தள்ளுவது போல் சுட்டு விடு வேன்.

அதன்படியே கம்பளித்தேவனும், அவனது ஆட்களும் பயத்தால் நடுங்கிய வண்ணம் கைகளை மேலே தூக்கு கிறூர்கள்.

போன் :—(போலீஸாரை நோக்கி) நீங்கள் அவர்களது கைகளில் விலங்கை மாட்டுங்கள்.—என்று கூறி பக்கத்திலிருந்த தாண்டவராயனிடம் "தாண்டவராயா! நீ போய்அய்யாவின் கட்டுகளை அவிழ்த்து விடு." என்று ஆக்ஞையிடுகிறூர்.

போலீஸார்கள் கம்பளித் தேவன், அவனது ஆட்கள் கைகளில் விலங்கை மாட்டுகிறூர்கள். தாண்டவராயன் சிவராமய்யரது கட்டுகளை அவிழ்த்து விடுகிறூன். விடுபட்ட சிவராமய்யர் ஆவலுடன் ஓடிவந்து சபாபதியைக் கட்டிக் கொண்டு, "அப்பா சபாபதி! உன்னுலல்லவா நான் உயிர் பெற்றேன். நீ வயதில் சிறுவனுனுலும் உன்னுடைய சாமர்த்தியமும், புத்திசாலித்தனமும் மகா அற்புதமானவை. கடைசி சமயத்தில் இம்முரடர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றிய உன்னை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன்." என்று சபாபதியைக் கொண்டாடுகிறூர்.

சபா :—மாமா! அப்படி யெல்லாம் என்னை ஒன்றும் புகழ வேண்டாம். தாங்கள் செய்த உதவிக்கு நான் இதுகூட செய்யாவிட்டால் அப்புறம் என்ன இருக்கிறது!

போன் :—சபாபதி! அவர் சொல்வது வாஸ்தவமான விஷயம். என்ன விருந்தாலும் நீ செய்த காரியம் புகழுக்குரியதே! உன்னால் தானே நான் இப்பொழுது கம்பளித் தேவனைப் பிடிக்க முடிந்தது.—என்று சபாபதியை நோக்கி புன் முறுவலுடன் கூறிவிட்டு தாண்டவராயனிடம் "தாண்டவராயா! எங்கே நீ சற்று கம்பளித் தேவனின் முகமூடியை விலக்கு. இவ்வளவு நாட்களாக தஞ்சையில் அட்டூழியம் புரிந்து வந்த கம்பளித்தேவன் யாரென்று பார்க்கலாம்." என்று சொல்கிறார்.

உடனே தாண்டவராயன் வெடுக்கென்று கம்பளித் தேவனின் முகமூடியைப் பிடித்திழுத்துத் தூக்கி யெறிகிறான். கம்பளித் தேவனின் உண்மையான ரூபத்தைக் கண்டு அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஆச்சர்யத்தால் பிரமித்து நிற்கிறார்கள். தாண்டவராயன் தன்னையுமறியாமல் வாய்விட்டு "அட பிச்சுமணி! நீயா கம்பளித் தேவன் என்று வேஷமிட்டு ஊரை அட்டகாசம் செய்கிறாய்." என்று மரியாதைக் குறைவான வகையில் பேசுகிறான்.

சபா :—பிச்சுமணி! நீதானா கம்பளித் தேவன்? பேஷ்! நல்ல வேலைத்தனம் செய்திருக்கிறாய்.

போன்:—ஓஹோ! கம்பளித்தேவன் தான் பிச்சுமணியா? பேஷ்! காரியமெல்லாம் வெகு ஒழுங்காய்த்தானிருக்கு. சரி, சரி வாருங்கள்; நாம் போய் ஜெயாவைப் பார்ப்போம்.—என்று கூறிக்கொண்டே போலீஸாரிடம்

"நீங்கள் இம்மூவரையும் ஜாக்கிரதையாக போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் சிறைக்கூடத்தில் வையுங்கள்." என்று உத்திரவிடுகிறார்.

இவைகள் எல்லாவற்றையும் பிரமிப்புடனும் பயத்துடனும் கவனித்துக் கொண்டு ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனமாய் இருக்கிறார்கள் கம்பளித்தேவனும், அவனது ஆட்களும். தங்கள் எஜமான் உத்தரவுப்படி போலீஸார் இம்மூவர்களையும் வெளியே அழைத்துச் செல்கிறார்கள். சபாபதி, பொன்னுசாமி அய்யர் இவர்கள் ஜெயாவின் அறைக்குச் சென்று ஜெயாவை விடுவிக்கிறார்கள்.

ஜெயா தன் தகப்பனார், சபாபதி, மாமா பொன்னுசாமி அய்யர் இவர்களைக்கண்டு எல்லையில்லா சந்தோஷமடைந்து தன் தகப்பனாரைக் கட்டிக்கொள்கிறாள்.

ஜெயா:—அப்பா! இந்த ஜென்மத்தில் உங்களை நான் உயிருடன் மறுபடியும் பார்ப்பேனா வென்று நினைத்தேன்.

சிவ:—(கண்ணில் நீர் ததும்ப தன் பெண்ணைத் தூக்கிக் கட்டியணைத்து.) கண்மணி ஜெயா! நானுமப்படித்தான் உன்னைப்போல் நினைத்தேன். உன்னைக்காணாமல் நான் எவ்வளவு வாடினேன் தெரியுமா? எல்லாத் துன்பங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நமது சபாபதியால் விலகிப் போயின.

ஜெயா:—ஆம் அப்பா! சபாபதியை நான் என்றும் மறக்க மாட்டேன். சபாபதியின் உதவியில்லாவிடில் நாம் இப்படி சந்தித்திருக்க முடியுமா?

சபா:—என்னால் என்ன இருக்கிறது? எல்லாம் பரஞ் சோதியாய் விளங்கும் பரமக் கடவுளின் கருணகடா க்ஷத்தால் தான் நாம் இப்படி மறுபடியும் ஒன்றுகூட முடிந்தது. நாழி ஆகிறது. நாம் ஏன் இன்னும் இவ் வீட்டில் இருக்கவேண்டும். வெளியே போகலாம் வாருங்கள்.

பொன்:—ஆம். போகவேண்டியது தான்.—என்று சொல் லவே எல்லோரும் போகிறார்கள்.

## அங்கம் 12—காட்சி 1.

காலம்:—காலை மணி 8.

இடம்:—சிவராமய்யர் வீடு.

[சிவராமய்யரின் வீட்டுவாசற்கதவை குப்பன் தட்டுகிறான். "ஓ! அம்மா! டப், டப். (கதவைத் தட்டும் சப்தம்.) என்னம்மா இன்னும் எளுந்திருக்கலே? டப், டப். அம்மா! அம்மா! விடிஞ்சு எத்தனை நாளியாச்சு? கதவைத்திற அம்மா! டப், டப். என்னது இது? வீட்டுக்குள்ளே அம்மா இருக்கோ இல்லியோ தெரியலேயே! அம்மா! அம்மா! டப், டப்." என்று உள் பக்கமாக தாளிட்டிருக் கும் கதவை குப்பன் சத்தமிட்டுத் தட்டுகிறான். அச்சமயத்தில் வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நிற்கிறது. அதிலிருந்து சிவ ராமய்யர், ஜெயா, சபாபதி, பொன்னுசாமி அய்யர் எல்லோரும் இறங்குகிறார்கள்.]

குப்பன்:—(ஜெயாவையும், சிவராமய்யரையும் கண்டு ஆச் சரியமும் சந்தோஷமும் அடைந்து) சாமி! வாங்கோ! வாங்கோ! புள்ளே கிடைச்சுதுங்களா? புள்ளேயை எங்கே கண்டுபுடிச்சீங்க? இரண்டு நாளாக உங்களைக் காணுமே கவலையா போச்சுங்க. நீங்க எங்கே போயிருந்தீங்க?

**சிவ:**—குப்பா! தெய்வக்கிருபையால் ஜெயா கிடைத்து விட்டாள். அவளைத் தேடத்தான் நான் வெளியூர் போயிருந்தேன். மற்ற விஷயங்களை அப்புறம் விவரமாகச் சொல்லுகிறேன். இப்ப நீ ஏன் கதவைத்தட்டிக் கொண்டிருக்கிறாய்? அம்மா வீட்டிலே இருக்காள் இல்லையா?

**குப்பன்:**—அதை ஏன் கேக்கிறீங்க. ஒருநாளியா கதவைத் தட்டறேன். கைதான் நோவுது. அம்மா வந்து கதவைத் திறக்கமாட்டேங்கறது. எனக்கென்னமோ சந்தேகமாயிருக்கு.

**சிவ:**—அப்படியா!—என்று சொல்லி தானே கதவைத் தட்டி "மீனா! மீனா! கதவைத்திற!" என்று கூப்பிடுகிறார்.

ஒரு பதிலும் இல்லை.

**போன்:**—குப்பனைப்போல் எனக்கும் சந்தேகம் தட்டுகிறது. உள்ளே ஏதாவது விபரீத சம்பவம் நடந்திருக்கலாமென்று நினைக்கிறேன்.

**சிவ:**—சே! சே! அப்படியொன்றும் இருக்காது. எப்பொழுதுமே அவள் கொஞ்சம் நாழி கழித்துதான் எழுந்திருப்பது வழக்கம். அதுபோல் இன்னும் கொஞ்சம் அதிக நேரம் இன்று அயர்ந்து தூங்குகிறாளோ என்னமோ!

**போன்:**—எப்படியிருந்தாலும் சரி. குப்பா நீ மாடி வழியா உள் முற்றத்தில் இறங்கி வந்து கதவைத் திற!

உடனே குப்பன் வாசலிலிருந்த வில் வண்டியின் கூட்டின் உதவியால் வாசல் முகட்டிலேறி மாடியை அடைந்து

முற்றத்தில் இறங்குகிறான். உள் கூடத்து உத்தரத்தில் மீனாக்ஷியம்மாள் தூக்கிட்டுக்கொண்டு இறந்து கிடப்பதைக்கண்டு அப்படியே பயத்தால் நடுங்கிப்போய் "ஐயோ சாமி! அநியாயம் நடந்து போச்சுங்களே!" என்று வீரிட்டு அலறிய வண்ணம் ஓடி வந்து வாசற்கதவைத் திறக்கிறான்.

"என்னடா? என்ன சமாசாரம்? ஏன் இப்படி கத்தினாய்?" என்று கேட்டுக்கொண்டே சிவராமய்யர், சபாபதி, ஜெயா, பொன்னுசாமி அய்யர் பின் தொடர உள்ளே போகிறார். மீனாக்ஷியம்மாள் தன்புடவை ஒன்றை உத்தரத்தில் கட்டித் தூக்கிட்டுக்கொண்டு இறந்துகிடப்பதை எல்லோரும் பார்த்து பிரமிப்பும், திகைப்புமடைகிறார்கள். கீழே கிடந்த ஒரு கடிதத்தை சிவராமய்யர் கையிலெடுத்துப் பார்க்கிறார். அடுத்த நிமிஷத்தில் கண்களில் நீர் ததும்ப ஸ்தம்பித்துப்போய் நிற்கிறார்.

ஜெயா :—அப்பா! அப்பா! என்ன இது? சித்தம்மை ஏன் இப்படித்தொங்கறா?

ஜெயாவின் நிலைமையை அறிந்த சபாபதி சட்டென்று "ஜெயா! வா, நாம் திண்ணைக்குப் போகலாம். உங்க சித்தம்மைக்கு ஒன்றுமில்லை. நம்ப இங்கே இருக்க வேண்டாம், வா." என்று கூறி ஜெயாவை திண்ணைக்கு அழைத்துச் சென்றுவிடுகிறான்.

பொன் :—நான் நினைத்தபடியே ஆயிற்று. குப்பா! சீக்கிரம் அம்மாவை கீழே இறக்கி வை.

குப்பன் பக்கத்தில் விழுந்து கிடந்த நாற்காலியின் உதவியால் மீனாக்ஷியம்மாளின் பிரேதத்தைக் கீழே யிறக்கி தரையில் கிடத்துகிறான்.

போன் :—(சிவராமய்யரிடம்) என்ன அப்படியே ஸ்தம்பித்து நிற்கிறீர்கள்? கையில் இருக்கும் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது?

சிவ :—பொன்னுசாமி! மீனுக்ஷி எவ்வளவு கெட்ட சிந்தனையுடையவளாய் இருந்தாலும், என் பெண்ணின் உயிருக்குத் தீங்கை நினைத்தவளானுலும் அவளுடைய துர்மரணத்தைக்காண எனக்கு மிகவும் துக்கமுண்டாகிறது. அவள் தன் குற்றத்தை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு, அதற்காக தன்னை மன்னிக்கும்படி உருக்கமாக எழுதியுள்ள இக்கடிதத்தைப் பார்!—என்று கூறி தன் கையிலிருந்த கடிதத்தை பொன்னுசாமிஅய்யரிடம் கொடுக்கிறுர்.

கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறது :—

"பிராண நாதா!

இவ்விதம் தங்களை நான் அழைப்பதற்காக மன்னிக்கவும். இப்படி தங்களை கூப்பிடுவதற்கு நான் அருகதையற்றவள். உத்தமகுணம் வாய்ந்த தங்களை நான் பிராணபதியாக அடைந்திருந்தும் தங்களுடன் கூடிவாழ கொடுத்து வைக்காமல் வீணுக என் வாழ்க்கையை பாழ்படுத்திக்கொண்டேன். இதற்கெல்லாம் காரணம் என் சகோதரனின் துர்ப்போதனைதான். ஜெயா காணுமற்போனதிற்கு நானும், என் தமயன் துரைராஜனும்தான் பொறுப்பாளிகள். ஜெயா இறந்துபோனுல் தாங்களும் மனவருத்தமுற்று இறந்து போவீர்களென்றும், பிறகு தங்களது சொத்து முழுவதையும் நாங்களிருவரும் நன்றுக அனுபவிக்கலாம் என்ற கெட்ட புத்தியால் இப்படிச் செய்தோம். முதலில் ஜெயாவைக்கொல்ல என் மனம் இடங்கொடுக்காவிட்டாலும் என் தமயனின் வற்புறுத்திலி

னாலும், துர்ப்போதனையினாலும், பிறகு என் பேதை மனம் மாறிவிட்டது. நாங்கள் கம்பளித்தேவன் என்ற கொள்ளைக்காரன் மூலம் ஜெயாவை ஒழிக்கும்படி ஏற்பாடு செய்தோம். காரியமும் வெற்றிபெற்றது. கடைசியில் இது எப்படியோ வெளிப்பட்டு என் தமயனும் அரெஸ்டு செய்யப்பட்டுவிட்டான் என்று ஒரு மணி நேரத்திற்கு முன்தான் முருங்கப்பேட்டையிலிருந்து வந்த ஒரு ஆள் மூலம் கேள்விப்பட்டேன். எப்பொழுது என் தமயன் அரெஸ்டு செய்யப்பட்டானோ அப்பொழுது என் இரகசியமும் வெளிவந்து அதனால் அவமானமேற்படுமென்று எண்ணி, மானம் போனபின் உயிர் வாழ விரும்பமில்லாததால் நான் இவ்விதம் தற்கொலை செய்துகொண்டுவிட்டேன். நாதா! நான் செய்த குற்றங்களை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளும் என்னைத் தாங்கள் மன்னிப்பீரென்று நினைக்கிறேன். நான் சென்று வருகிறேன். கண்மணி ஜெயாவிற்கு என் மனப்பூர்வமான ஆசீர்வாதம்.

இப்படிக்கு தங்களுடன் கூடி வாழ கொடுத்து வைக்காத தங்கள் மனைவி அபாக்யவதி,

மீனாக்ஷி.

போன் :—(கடிதத்தை வாசித்து முடிந்ததும்.) அடாடா! தன் வினை தன்னைச்சுடும் என்பதுபோல் மீனாக்ஷியின் குற்றங்களே அவளைக்கொன்றுவிட்டது. பாவம்! சந்தோஷமாக தன் புருஷனுடன் இல்வாழ்க்கை நடத்த வேண்டிய அவளது வாழ்நாளை பாவம் துரைராஜன் கெடுத்துவிட்டான். யார் யார் தலைவிதி எப்படியோ அதன்படி நடந்துதானேயாகவேண்டும். வீணாக நாம் சொல்லிக்கொள்வதால் என்ன பிரயோஜனம்? மாமா! இப்படியே நின்றுகொண்டிருந்தால் மேல் நடக்கவேண்

டிய காரியத்தைக் கவனிக்கவேண்டாமா? வாருங்கள் போலீஸுக்கு ரிப்போர்ட் செய்துவிட்டுத் தகனக்கிரியைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம்.

## காட்சி 1 (a)

காலம் :—மணி 9.

இடம் :—சிவராமய்யர் வீடு.

[சபாபதி ஜெயாவோடு திண்ணையில் பேசிக்கொண்டிருக்கிறான். அப்பொழுது அங்கே சுந்தரியும் ராமநாதனும் வருகிறார்கள்.]

சபாபதி :—(எழுந்திருந்து) அக்கா! அத்திம்பேரே! வாங்கோ.

ராம :—(சபாபதியைத் தன் கைகளால் அணைத்துக் கொண்டு) சபாபதி! சௌக்யமா? நீ சொன்னபடியே உன் காரியத்தை நிறைவேற்றிவிட்டாய். உன்னைப் பார்ப்பதற்காக நாங்கள் தஞ்சாவூருக்குப் போயிருந்தோம். தாண்டவராயன் நீங்களெல்லோரும் இங்கே வந்திருப்பதாகக் கூறினான். அதோடு கம்பளித்தேவன் பிடிபட்டதும், சிவராமய்யர், ஜெயா இவர்கள் விடுபட்டதும் பிச்சுமணிதான் கம்பளித்தேவன் என்றதுமான சமாசாரங்களை கேள்விப்பட்டோம். (ஜெயாவைப் பார்த்துவிட்டு) இப்பெண்தானே ஜெயா என்பவள்.

சபா :—ஆம்.

சுந்தரி :—சபாபதி! கடைசியில் நீ குற்றமற்றவனென்று நிரூபிக்கப் பட்டு, உன்னை நான் மறுபடியும் பார்க்கக் கொடுத்து வைத்தேனே, அதுவே எனக்குப் போதும்.

ராம :—பொன்னுசாமி அய்யரும், சிவராமய்யரும் எங்கே? உள்ளே இருக்கிறார்களா?

சபா :—ஆமாம். இங்கே ஒரு துக்ககரமான சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. சிவராமய்யரின் சம்சாரம் தூக்கிட்டுக் கொண்டு இறந்துபோய் விட்டாள்.

ராம :—அடடா! அப்படியா? சுந்தரி! வா, உள்ளேபோய் பார்க்கலாம்.

(இருவரும் உள்ளே போகிறார்கள்.)

ஜெயா :—சபாபதி! எங்க சித்தம்மை செத்தா போயிட்டா? எங்க சித்தம்மைக்கு ஒன்றுமில்லேன்னு பொய் தானே சொன்னே! ஐயோ! சித்தம்மை! சித்தம்மை! ——என்று கத்திக்கொண்டே உள்ளே போகிறாள்.

சபா :—ஜெயா! ஜெயா! இங்கே வா. அதெல்லாம் ஒன்றுமில்லே——என்று அவளைப் பின் தொடர்ந்து உள்ளே போகிறான் சபாபதி.

## காட்சி 2.

காலம் :—இரவு.

இடம் :—தஞ்சாவூர் சிறை.

துரை :—பிச்சுமணி! நீ தான் கம்பளித்தேவன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லையே. அடபாவி உனக்கு நான் 1000 ரூபா அழுததுதானா மிச்சம். தாண்டவராயன் தான் என்னைக்காட்டிக் கொடுத்தான் என்றால் நீயும் ஜெயாவை விட்டு விட்டு என்னை சந்தி சிரிக்க வைக்கப் போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டாயா?

க. தேவன் என்ற பிச்சுமணி :—போதும் போதும், வாயை மூடு! எல்லாம் உன்னால் வந்த அனர்த்தம். உன் விவகாரத்தில் தலையிட்டிருக்கா விட்டால் நான் பிடிபட்டிருக்க மாட்டேன் பார்.

துரை :—கிடக்கட்டும். உன்னிருப்பிடம் போலீசாருக்கு எவ்விதம் தெரியவந்தது?

பிச்சு:—அதானே எனக்கும் தெரியவில்லை! ஒருசமயம் அந்த சபாபதிப் பயலின் வேலைத்தனமாயிருக்கும் இது.

துரை:—சபாபதியா! அவன் எங்கே வந்தான்.

பிச்சு:—அவனுந்தான் போலீஸாரோடு என் வீட்டிற்கு வந்தான். சிவராமய்யர் விடுபட்டதும் சபாபதியை கட்டிக்கொண்டு "இம்முரடர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றிய உன்னை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன்." என்று கூறினர். அதோடு கூட போலீஸ் இன்ஸ்பெக்டர் சபாபதியினுல் தான் என்னைப் பிடிக்க முடிந்ததென்று அவனைப் புகழ்ந்தார். இதிலிருந்து சபாபதிதான் என் பாழ்வீடு இருக்குமிடத்தை துப்பறிந்து கண்டு பிடித்திருக்கிறுன். என்று நினைக்கிறேன்.

துரை:—சரி, சரி. இனிமேல் நாம் இதைப்பற்றிப் பேசி என்ன செய்கிறது? உனக்கு ஏழுவருஷம், எனக்கு ஐந்துவருஷம் கடுங்காவல் தண்டனை கிடைக்காமல் போகாது.—என்று கூறிக் கொண்டே மனக்கிலேச மடைந்தவராய் தலையின்மேல் கையை வைத்தவண்ணம் கீழே உட்கார்ந்து கொள்கிறுர்.

## காட்சி 3.

ஒருமாதத்திற்குப் பின்.

காலம்:—மாலை 5 மணி.

இடம்:—சிவராமய்யர் வீட்டின் தாழ்வாரம்.

[தாழ்வாரத்தில் போடப்பட்டுள்ள இரண்டு ஈஸிச்சேர்களில் சிவராமய்யரும், வெங்கட்டருமய்யரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறுர்கள். எதிர்த்தாற்போல் உள்ள பெஞ்சியில் போலீஸ்இன்ஸ்பெக்டர் பொன்னுசாமி அய்யரும், ராமநாதனும் உட்கார்ந்து

கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் குதூகலமாக பேசிக்கொள் கிறார்கள்.]

ராம :—எங்கே சபாபதியைக் காணோம்?

சிவ :—சாயந்திர வேளையல்லவா! இப்படி உல்லாசமாக ஜெயாவோடு ஆற்றங்கரைப் பக்கம் உலாவப் போயிருக் கிறான்.

போன் :—எதிர்கால தம்பதிகளோல்யோ, அதற்காக இப் பவே கூடிப் பழக ஆரம்பித்து விட்டார்கள் போலிருக் கிறது. அப்படித் தானே அத்திம்பேரே?

சிவ :—அப்படித்தான் நான் நினைக்கிறேன். ஆனால் ராம நாதன் எண்ணம் எப்படியோ?

ராம :—அழகாய்த்தானிருக்கிறது. மெதுவாக என் வாயைக் கிண்டுகிறீர்களே! பெரிய இடத்து சம்பந்தம் கிடைக்க எங்களுக்குக் கொடுத்துவைக்க வேண்டாமா?

வேங் :—சபாபதி உன் மாப்பிள்ளையாவது பின்னால் இருக் கட்டும். இப்பொழுது நீ என்ன சன்மானம் அவனுக்கு செய்யப்போகிறாய்?

சிவ :—நான் என்ன செய்யக் கிடக்கிறது? இனிமேல் சபாபதி இவ்வீட்டில் வைத்ததுதானே சட்டம். எனக்கு இனிமேல் அவன்தானே பிள்ளைக்குப் பிள்ளை, மாப் பிள்ளைக்கு மாப்பிள்ளை.

வேங் :—அப்படிச் சொல்லு! அப்ப கலியாணம் எப்ப செய்யறதா யோசனை?

சிவ: :—இப்போதைக்கு ஏது? இன்னும் இருவருக்கும் வயதாக வில்லையே. நாலு வருஷம் கழித்துதான் கலி

யாணம் பண்ணனும். அதுவரையில் சபாபதியை மேல் படிப்பு படிக்க ஏற்பாடு செய்யப்போகிறேன்.

வேங் :—தேவலாமே! யோசனை சரியானது தான்.

போன் :—ஆம். அதைத்தான் நானும் சொல்லலாமென் றிருந்தேன். அத்திம்பேரே அதைச் சொன்னது நல்ல தாயிற்று.

ராம :—சரி, அஸ்தமன சமயமாயிற்றே! நாமும் இப்படி ஆற்றுப்பக்கம் போய் வருவோமே.—என்று கூறவே எல்லோரும் எழுந்து செல்கிறார்கள்.

## காட்சி 4.

காலம் :—மாலை மணி 5.

இடம் :—சிருமருதூர் ஆற்றங்கரை.

[ஆற்றங்கரையிலுள்ள ஒரு நெல்லி மரத்தில் சபாபதி ஏறி நெல்லிக்காய்களைப் பறித்துப் போடுகிறான். அவைகளை ஜெயா கீழே குனிந்து பொறுக்குகிறாள்.]

ஜெயா :—(மேலே அண்ணாந்து பார்த்து) சபாபதி! என்ன பிஞ்சு நெல்லிக்காயெல்லாம் பறித்துப் போடுகிறாய். நல்ல காயா பார்த்துப் போடேன்.

சபா :—நான் என்ன செய்யறது. பிஞ்சாகத்தானே இருக்கு, இன்னும் கொஞ்ச நாள் போச்சுன்னா பெரிய பெரிய நெல்லிக்காயா கிடைக்கும். இதோ உன் அதிர்ஷ்டம் இந்த கொப்பில் அஞ்சாறு நெல்லிக்காய் கள் இருக்கின்றன. அதைப் பறித்துப் போடுகிறேன்.— என்று கூறிக்கொண்டே நெல்லிக்காய்களைப் பறித்துப் போடுகிறான்.

ஜெயா :—(நெல்லிக்காயைப் பொறுக்கிக்கொண்டு) என்ன! ரெண்டுதானு? இன்னும் ரெண்டு போடேன்.

சபா :—போறும், போறும். இன்னும் எவ்வளவு போடறது. நெல்லிக்காயை ஜாஸ்தி தின்ன உடம்புக்காகா தாக்கும்.

ஜெயா :—அடேயப்பா! நெல்லிக்காய்க்கு இப்படி சொல்றயே! நாளைக்கு உன்னைக் கலியாணம் பண்ணிண்டா மத்த விஷயத்துக்கும் இப்படித்தானே சொல்லுவே.

"என்னது! என்னைக் கலியாணம் பண்ணிண்டாக்கே ......" என்று கூறிய வண்ணம் மரத்திலிருந்து சபாபதி கீழே இறங்கிவந்து "ஜெயா! ஏது பலே குறும்புக்காரியாய் இருக்காயே. இப்பவே பேச்சில் உன்னை ஜெயிக்கமுடிய வில்லையே. பின்னுல் உன்னைக்கலியாணம் செய்துகொண்டால் எப்படிடாப்பா உங்கிட்டே பேசி தப்புச்சுகிறதுன்னு நான் யோசனை பண்றேன். அப்படி யிருக்கிறபோது நான் என்ன சொல்லக்கிடக்கிறது. சரி, வா. இப்படி ஆற்றோரமாகப்போகலாம்." என்று சிரித்துக்கொண்டே கூறுகிறுன்.

ஜெயா:— ஆமாமா! நான் வல்லே. அன்னி மாதிரி எந்த முரட்டுப் பயலாவது புடிச்சிண்டு போறத்துக்கா?

சபா:—சே! அதெல்லாம் ஒத்தரும் வரமாட்டான். அன்னிக்கு உன்னை புடிச்சிண்டு போனவங்கள்ளாம்தான் இப்ப ஜெயில்லே இருக்காங்களே!

ஜெயா :—முருங்கப்பேட்டை மாமா (துரைராஜய்யர்) கூடத்தானே?

சபா :—ஆமாம். அந்த மாமாவுக்கு ஐந்து வருஷம், கம்ப ளித்தேவனுக்கு ஏழு வருஷம் தண்டனை கொடுத் துட்டா.

ஜெயா :—பாவம்! எங்க சித்தம்மை அந்த மாமாவாலே அனியாயமா செத்துப்போயிட்டா. மாமாவும் சித் தம்மையும் இவ்வளவு கெட்டவான்னு நான் நினைக்கவே யில்லை.

சபா :—சரி, சரி, இதெல்லாம் என்னத்துக்கு இப்ப பேசறே. நீ இப்ப என்னோடெ வறயா? இல்லாட்டா நான் ஆத்துக்குப் போகட்டுமா?

ஜெயா:—இரு! செத்தே இரு! என்ன இவ்வளவு அவசரப் படறே? நெல்லிக்காய் தின்ன வாய்க்கு ரெண்டு கை தூத்தம் குடிச்சுட்டு வறேன். அப்பத்தான் வாயெல் லாம் தித்திக்கும்.——என்று கூறிக்கொண்டே பக்கத்தி லிருந்த ஆற்றில் இறங்கி கைகளால் ஜலத்தை அள்ளிக் குடிக்கிறாள்.

(சபாபதியும் அவ்விதமே செய்கிறான். பின் ஜெயா வும் சபாபதியும் கரையேறித் தங்கள் கைகளைக் கோர்த்துக் கொண்டு உல்லாசமாகப் பாடிய வண்ணம் ஆற்றங்கரை யோரமாகச் செல்லுகிறார்கள்.)

சுபம்! சுபம்!! சுபம்!!!

சந்திரவிலாஸ் பிஞ்சராபோல் பிரஸ், திருச்சி.